

# இயேசு கிறிஸ்துவின் வருகையும் உலக முடிவும் அதிசீக்கிரம்

ஆசிரியர்

P.S. ராஜமணி

# இயேசு கிறிஸ்துவின் வருகையும், உலக முடிவும் அதிசீக்கிரம்

தொகுப்பு

Rev. P.S. ராஜமணி

**Light House AG Church**
Housing Board Colony
Mela Anuppanadi
Madurai-625 009
Tamilnadu, India.
Phone : 0452-2698494
**email : ekklesiamadurai@gmail.com**

© பதிப்புரை : ஆசிரியருக்கே

முதல் பதிப்பு : மார்ச் 2012
பிரதிகள் : 2000

*Published by*

**Light House AG Church**
Housing Board Colony
Mela Anuppanadi
Madurai-625 009
Tamilnadu, India.
Phone : 0452-2698494
email : ekklesiamadurai@gmail.com

# பொருளடக்கம்

முன்னுரை

**பாகம் 1 - நிறைவேறிவிட்ட தீர்க்கதரிசனங்கள்**

1. எருசலேம் தேவாலயம் இடிக்கப்பட்டது
2. இஸ்ரவேல் நாடு மறுபடியும் உருவானது
3. உலக மகாயுத்தங்கள்

**பாகம் 2 - நிறைவேறிக் கொண்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள்**

1. உலக பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் ஐரோப்பிய சங்கம் உதயம்
2. உலகமெங்கும் இயேசுவின் நற்செய்தி அறிவிக்கப்படல்
3. அகில உலகிலும் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படல்
4. விசுவாச துரோகம்
5. பூமியதிர்ச்சிகள்
6. அறிவு பெருக்கம்
7. நோவா காலம் போல நடக்கும் காரியங்கள்
8. பஞ்சம் (பட்டினி)
9. கொள்ளைநோய்கள்
10. மனிதத்தன்மையற்ற மக்கள் நிலை

**பாகம் 3 - நிறைவேண்டிய தீர்க்கதரிசனங்கள்**

1. மூன்றாம் உலக மகாயுத்தம்
2. இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகை, பரிசுத்தவான்கள் எடுத்துக் கொள்ளப்படுதல்.
3. பரிசுத்தவான்கள் எடுத்துக்கொள்ளப்பட்டபின் உலகில் நடக்கும் காரியங்கள்

4. அந்திகிறிஸ்துவின் ஏழு வருட ஆட்சி

5. மத்திய ஆகாயத்தில் நடக்கும் காரியங்கள்

6. இயேசு கிறிஸ்துவின் பகிரங்க வருகை

7. அர்மகெதோன் யுத்தம்

8. இயேசு கிறிஸ்துவின் 1000 வருட ஆட்சி

9. வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு

10. புதிய வானம், புதிய பூமி

# இயேசு கிறிஸ்துவின் வருகையும், உலக முடிவும் அதிசீக்கிரம்

## முன்னுரை

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் வேகமாய் நிறைவேறி வருகின்றன.

**இயேசு கிறிஸ்து சீக்கிரம் வருகிறார்**

உலகம் தோன்றியது முதல் இன்றுவரை எத்தனையோ பேரரசர்கள், அரசர்கள், ஜனாதிபதிகள், பிரதம மந்திரிகள், அரசியல் தலைவர்கள், மதத்தலைவர்கள் வாழ்ந்து மறைந்து போனார்கள். இவர்களில் யாரும் திரும்ப வருவேன் என்று சொன்னதுமில்லை, மற்றவர்கள் எதிர்பார்த்ததுமில்லை. ஆனால் இயேசு கிறிஸ்து ஒருவரே மறுபடியும் வருவேன் என்று சொல்லிப் போனார். கோடிக்கணக்கான கிறிஸ்தவர்கள் அன்றும் எதிர்பார்த்திருந்தனர். இன்றும் எதிர்பார்த்திருக்கின்றனர்.

இயேசுவைப் பின்பற்றின சீடர்கள் இயேசுவைப் பார்த்து:

***இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்கு சொல்ல வேண்டும் என்றார்கள் (மத் 24:3).***

தாம் மறுபடியும் இந்த உலகத்திற்கு வரப்போவதைப் பற்றி இயேசு சீடர்களுக்கு பல தடவை கூறியிருந்தார். எனவே சீடர்கள் அதை நன்கு அறிந்திருந்தனர். இந்த உலகத்திற்கு முடிவு உண்டு என்பதையும் அவர் கூறியிருந்தார்.

இயேசு கிறிஸ்துவின் வருகைக்கும், உலகத்தின் முடிவிற்கும் தொடர்பு உண்டு என்று அறிந்திருந்த அவர்கள் அது எப்போது நடைபெறும் அதற்கான அடையாளங்கள் என்ன என்று கேட்டனர்.

அவர்கள் கேட்ட கேள்வி தவறு என்று இயேசு சொல்லவில்லை. அவர்களுக்கு மிக தெளிவான பதில் கொடுத்தார். எனவே அவர் திரும்ப வருவதும் உலகத்திற்கு முடிவு உண்டாவதும் நிச்சயம்.

## இயேசு கிறிஸ்துவின் வருகையை உறுதிப்படுத்தும் சாட்சிகள்

### 1. இயேசு தாமே அதை உறுதிப்படுத்தினார்

உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்.

நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன் (யோவான் 14:1–3).

அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது மனுஷகுமாரன் வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள் (மத்தேயு 24:30).

உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்.

நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார். ஆதலால், நீங்கள் ஆயத்தமாயிருங்கள் (மத்தேயு 24:42,44).

மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள் (மத்தேயு 25:13).

மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்; அப்பொழுது, அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார் (மத் 16:27).

அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும், மகிமையோடும் மேகங்களின்மேல் வருகிறதைக் காண்பார்கள் (மாற்கு 13:26).

என்னைக் குறித்தும், என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுகிறானோ, அவனைக் குறித்து மனுஷகுமாரனும் தம்முடைய மகிமையோடும் பிதாவின் மகிமையோடும், பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரும்போது வெட்கப்படுவார் (லூக்கா 9:26).

நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன் (யோவான் 14:18).

இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம் பற்றுகிறார்.

இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு.

இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான் என்றார்.

இதோ சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.

இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும் (வெளிப்படுத்தல் 1:8, 3:11, 22:7, 22:12, 22:20).

மேற்கூறிய வசனங்களில் இயேசு தாம் திரும்ப வரப்போவதைப் பற்றி திட்டமாகக் கூறியுள்ளார்.

## 2. தேவதூதர்கள் இயேசுவின் வருகையை உறுதிப்படுத்தினார்கள்

இயேசு கிறிஸ்து ஒலிவ மலையிலிருந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். சீஷர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக் கொண்டது. அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில் இதோ வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் 2 பேர் அவர்களருகே நின்று,

கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள் (அப்போஸ்தலர் 1:11).

## 3. அப்போஸ்தலர் இயேசுவின் வருகையை உறுதிப்படுத்தியுள்ளனர்

**பவுல்:** அப்போஸ்தலனாகிய பவுல் தன் நிருபங்களில் பல இடங்களில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மறுபடியும் வருவார் என்று தெளிவாக எழுதியுள்ளார்.

நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் (பிலிப்பியர் 3:20).

மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது (ரோமர் 8:19).

ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் (1தெச 4:16,17).

ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள் (1கொரிந்தியர் 11:26).

வருகிறவர் இன்னுங் கொஞ்சக்காலத்தில் வருவார், தாமதம்பண்ணார் (எபிரெயர் 10:37).

**யோவான்:** அப்போஸ்தலனாகிய யோவான் வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதினார். அதிலே மிகத் தெளிவாக இயேசுவின் வருகை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள், பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப்

புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென் (வெளி 1:7).

இப்படியிருக்க, பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள் (1யோவான் 2:28).

**பேதுரு:** நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும், வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம் (2 பேதுரு 1:16).

கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம்; பூதங்கள் உருகிப்போம்; பூமியும் அதிலுள்ள கிரியைகளும் அழிந்துபோம் (2 பேதுரு 3:10).

**யாக்கோபு:** இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும், பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான். (யாக்கோபு 5:7)

**யூதா:** தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான். (யூதா 15)

மேற்கூறிய சாட்சிகள் யாவும் இயேசு கிறிஸ்துவின் வருகையை திட்டமும், தெளிவுமாக உறுதிப்படுத்துகின்றன.

## 2000 வருடம் முடிந்துவிட்டதே ஏன் இன்னும் இயேசு வரவில்லை:

இந்தக் கேள்வி அநேகருடைய உள்ளத்தில் இருக்கிறது. இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்து வாழ்ந்த கோடிக்கணக்கான பரிசுத்தவான்கள் எழுப்பிய கேள்விதான் இது. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்நாளிலேயே இயேசு கிறிஸ்து வந்து விடுவார் என்று நம்பியிருந்தனர். அவர்களுக்குப் பின் ஒவ்வொரு

நூற்றாண்டுகளிலும் வாழ்ந்த பரிசுத்தவான்கள் இந்த எதிர்பார்ப்புடன் வாழ்ந்தனர். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஏன் தாமதிக்கிறார்? அவரைப் பொறுத்தவரை நிச்சயம் அவர் தமது வாக்குத்தத்தத்தில் தாமதமாயிருக்கிறார் என்று கூற முடியாது. ஆனால் அவருடைய வேளை இன்னும் வரவில்லை.

**1. எல்லாரும் மனந்திரும்ப எதிர்பார்க்கிறார்**

தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் (2பேதுரு 3:9).

**2. தீர்க்கதரிசனங்கள் பல நிறைவேற வேண்டி இருந்தன**

உலகத் தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும் (அப்போஸ்தலர் 3:21)

**3. நற்செய்தி உலகமெங்கும் சந்திக்கப்பட வேண்டும்**

ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்பொழுது முடிவு வரும் (மத்தேயு 24:14).

**4. நமக்காக ஒரு மாளிகையை கட்டிக் கொண்டிருக்கும் வேளை முடியவில்லை**

என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன் (யோவான் 14:2).

**5. சபையின் காலம் - புறஜாதிகளின் காலம் நிறைவேற வேண்டும்**

மேலும், சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு, ஒரு இரகசியத்தை நீங்கள் அறிய வேண்டுமென்றிருக்கிறேன். அதென்னவெனில், புறஜாதியாருடைய

நிறைவு உண்டாகும் வரைக்கும் இஸ்ரவேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும் (ரோமர் 11:25).

**6. அந்திகிறிஸ்து வெளிப்பட வேண்டும்**

அன்றியும், சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்தில் சேர்க்கப்படு வதையுங் குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக்கொள்ளுகிறது என்னவென்றால், ஒரு ஆவியினாலாவது வார்த்தையினாலாவது எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக் கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும், கலங்காமலும் இருங்கள்.

எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள், ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்பட்டா லொழிய, அந்த நாள் வராது (2தெச 2:1–3).

மேற்கூறிய வசனங்களிலிருந்து என்ன விளங்கிக்கொள்ளு கிறோம். எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று பொறுமையுடனிருக் கிறார். அவர் வருகைக்கு முன் நடைபெற வேண்டிய தீர்க்கதரிசனங்கள் பல நிறைவேற வேண்டும். இயேசுகிறிஸ்துவின் நற்செய்தி உலகமெல்லாம் பிரசங்கிக்கப்பட வேண்டும். எனவே ஆண்டவர் தாம் சொன்ன வாக்குத்தத்தத்தின்படி நிச்சயம் வருவார்.

**இயேசுவின் வருகையோடு தொடர்புள்ள தீர்க்கதரிசனங் களை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்.**

1. நிறைவேறிவிட்ட தீர்க்கதரிசனங்கள்
2. நிறைவேறிக் கொண்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள்
3. நிறைவேற வேண்டிய தீர்க்கதரிசனங்கள்

கடைசி காலத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் குறித்து வேதம் முழுவதிலும் ஏராளமான தீர்க்கத்தரிசனங்கள் முன்னுரைக்கப் பட்டுள்ளது. இயேசு கிறிஸ்துவின் வருகையையும் இந்த உலகத்தின் முடிவையும் முன்னறிவிப்பவைகள் இவை.

**கடைசிகால நிகழ்ச்சிகளை முதலாவது பட்டியலிடுவோம்**

**மத்தேயு 24ல் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகள்**

- ❖ எருசலேம் தேவாலயம் இடிக்கப்படும்; யுத்தங்கள் உண்டாகும் (மத்தேயு 24:1,2; லூக்கா 21:6).
- ❖ ஜனங்களுக்கு விரோதமாய் ஜனங்கள் எழும்புவார்கள், ராஜ்யத்திற்கு விரோதமாய் ராஜ்யம் எழும்பும் (மத்தேயு 24:7).
- ❖ பஞ்சங்கள், கொள்ளைநோய்கள், பூமியதிர்ச்சிகள் (மத்தேயு 24:7; லூக்கா 21:11).
- ❖ கள்ளக் கிறிஸ்துகள், கள்ளத் தீர்க்கதரிசிகள் எழும்புவார்கள் (மத்தேயு 24:5,24).
- ❖ சுவிசேஷம் உலகமெங்கும் பிரசங்கிக்கப்படும் (மத்தேயு 24:14).
- ❖ பாழாக்கும் அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கும் (மத் 24:15).
- ❖ உலகம் இதுவரை கண்டிராத மிகுந்த உபத்திரவம் (மத் 24:21).
- ❖ உபத்திரவத்திற்குப் பின் சூரியன் இருளடையும், சந்திரன் ஒளி கொடுக்காது, நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும் (மத் 24:29).
- ❖ அத்திமரம் துளிர்விடுவதுபோல இஸ்ரவேல் நாடு மறுபடியும் உருவாகும் (மத்தேயு 24:32,33).
- ❖ நோவா காலத்தில் நடந்ததுபோல நடக்கும் (மத்தேயு 24:37–39).

லுக்கா 21:7–32ல் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் மேலே குறிப்பிடப்படாத சில நிகழ்ச்சிகளை இங்கே பார்க்கிறோம்

- ❖ கலகங்கள் உண்டாகும் (லூக்கா 21:9).
- ❖ வானத்தில் பல தோற்றங்கள், அடையாளங்கள் உண்டாகும் (லூக்கா 21:11).
- ❖ எருசலேம் சேனைகளால் சூழப்படும் (லூக்கா 21:20).
- ❖ சமுத்திரமும், அலைகளும் முழக்கமாயிருக்கும் (லூக்கா 21:25).

2தீமோத்தேயு 3:1–5ல் கூறப்பட்டுள்ளவை,

- ❖ கடைசி காலத்தில் மனிதருடைய தரம் மிக தாழ்வு நிலை அடையும். ***மனிதர்கள் தற்பிரியராக, பணப்பிரியராக,***

***தூஷிக்கிறவர்களாக, பெற்றோருக்கு கீழ்ப்படியாத பிள்ளைகளாக, பரிசுத்தமில்லாதவர்களாக, சுபாவ அன்பில்லாதவர்களாக, இச்சையடக்கமில்லாதவர்களாக, சுகபோகப்பிரியராக இருப்பார்கள்.***

மேலும்....

- தானியேல் 12:4ல் கடைசி நாட்களில் அறிவு பெருகிப்போம்.
- விசுவாசத் துரோகம் உண்டாகும் (2 தெச 2:3).
- 10 நாடுகளின் கூட்டணியின் மூலம் உலகப் பொருளாதாரம் கட்டுப்படுத்தப்படும் (தானியேல் 2:33,34).
- திருச்சபை எடுத்துக்கொள்ளப்படும் – இயேசுவின் இரகசிய வருகையில் சபை மத்திய ஆகாயத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.
- 7 வருட உபத்திரவ காலம் (தானியேல் 9:27).
- அர்மகதோன் யுத்தம் (வெளிப்படுத்தல் 19:17–21)
- இயேசு கிறிஸ்துவின் 1000 வருட ஆட்சி (வெளி 20:6).
- கோகு, மாகோகு யுத்தம் (வெளி 20:8,9)
- வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு (வெளி 20:11–15)
- புதிய வானம் புதிய பூமி (வெளிப்படுத்தல் 21,22 அதிகாரங்கள்)

**பாகம்: 1**

# நிறைவேறிவிட்ட தீர்க்கதரிசனங்கள்

கடைசி நாட்களில் நடக்கும் என்று சொல்லப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்களில் பல நிறைவேறிவிட்டன. சில நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. சில நிறைவேற வேண்டி இருக்கின்றன. ஏற்கெனவே நிறைவேறிவிட்ட தீர்க்கதரிசனங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

**1. எருசலேம் தேவாலயம் இடிக்கப்பட்டது:** (மத் 24:12; லூக்கா 21:5,6)

எருசலேம் தேவாலயம் இடிக்கப்படும் என்பதை இயேசு கடைசி கால நிகழ்ச்சிகளுடன் இணைத்துக் கூறாவிட்டாலும், கடைசி கால சம்பவங்களை அவர் பட்டியலிட்டு அதற்கு முன்பதாக இதைக் குறிப்பிட்டார். அவர் தீர்க்கதரிசனமாய் உரைத்து சுமார் 40 ஆண்டுகளுக்குள் இது நிறைவேறியது. கி.பி. 70ல் எருசலேம் தேவாலயம் இடிக்கப்பட்டது. அதற்குப் பின்பு இன்றுவரை ஆலயம் கட்டப்படவில்லை.

சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் எருசலேம் 46 தடவை முற்றுகையிடப்பட்டது. 13 தடவை அரைகுறையாய் இடிக்கப்பட்டது. 17 தடவை முற்றிலும் இடிக்கப்பட்டது.

எருசலேம் தேவாலயம் சாலொமோன் காலத்தில் கி.மு. 970ல் கட்டப்பட்டது. பாபிலோன் பேரரசன் நேபுகாத்நேச்சார் கி.மு.586ல் இதை அழித்தான். செருபாபேல் காலத்தில் மறுபடியும் கட்டப்பட்டு கி.மு.515ல் இரண்டாம் தேவாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

கி.மு.169ல் சீரிய அரசனான அந்தியோகஸ் எப்பிபினஸ் இந்த தேவாலயத்தை அசுத்தப்படுத்தினான். பன்றிகளைப் பலியிட்டான். ஆலயப் பகுதிக்குள் சிலைகளைக் கொண்டுவந்து நாட்டினான். பின்பு வைராக்கியமுள்ள யூதர்கள் யூதாஸ் மக்கபேயர் தலைமையில் எழும்பி தேவாலயத்தை சுத்திகரித்தனர். ஏரோது இந்த தேவாலயத்தை செப்பனிட 46 வருடங்கள் எடுத்தான் (யோவான் 2:20).

கி.மு. 63ல் இஸ்ரேல் நாடு ரோமருடைய ஆட்சியின்கீழ் வந்தது. கி.பி. 66–70 ஆண்டுகளில் யூதர்கள் ரோமருடைய ஆட்சியை எதிர்த்து கலகம் பண்ணினார்கள்.

ரோமப் படைத்தளபதி தீத்து தன் சேனையுடன் வந்து எருசலேமை முற்றுகையிட்டான். ரோம ராணுவத்தினர் பட்டணத்தில் கோட்டைச் சுவரை நெருங்கிய போது யூதர்கள் மேலிருந்து கொதித்த எண்ணெயை ஊற்றி ஏராளமான ரோம வீரர்களைக் கொன்றனர். கோபம் கொண்ட ரோம சேனை கோட்டைக்கு வெளியே இருந்த யூதர்களை சிறைப்பிடித்து சிலுவையில் அறைந்தனர். 4 மாதங்கள் எருசலேம் முற்றுகையிடப் பட்டிருந்தது. கோட்டைக்கு உள்ளே இருந்தவர்கள் இக்கட்டை அனுபவித்தனர். உணவில்லை, மரித்தவர்களை அடக்கம் பண்ண முடியாததால் தெருக்களில் பிணங்கள் அழுகி நாற்றமெடுத்துக் கொண்டிருந்தன. பட்டணத்திற்குள் தொற்றுவியாதி பரவி அநேகர் மாண்டனர். பசி தாங்க முடியாதவர்கள் மரித்துப்போன தங்கள் பிள்ளைகளின் பிணங்களை சாப்பிட்ட பரிதாப நிலை காணப்பட்டது.

கடைசியில் ரோமர் எருசலேம் கோட்டைக் கதவுகளை உடைத்து உள்ளே புகுந்தனர். மக்களைக் கொன்று குவித்தனர். ஆயிரக்கணக்கான சிறுபிள்ளைகளை கோட்டைச் சுவரிலிருந்து தூக்கி எறிந்து கொன்றனர். எல்லா இடங்களையும் தீவைத்துக் கொளுத்தினர்.

தேவாலயத்தை தீயிட்டு கொளுத்தினர். அதில் பயன்படுத்தப்பட்ட பொன், வெள்ளியின் மதிப்பு சுமார் 8 இலட்சம் கோடி ரூபாய் (80,00,00,00,00,000) என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த பொன் உருகி ஆலய கட்டிட கற்களுக்குள் ஓடினபடியால் இந்தப் பொன்னை சேகரிக்க தேவாலய கற்கள் ஒன்றின்மேல் ஒன்று இராதபடி எல்லாம் இடிக்கப்பட்டது.

சிலுவையில் அறைந்தும், பட்டயத்தால் வெட்டியும் மாண்டு போன யூதர்களின் எண்ணிக்கை சுமார் 10 இலட்சம் (10,00,000) சுமார் 20 இலட்சம் பேர் சங்கிலிகளால் கட்டப்பட்டு மிருகங்களைப் போல இழுத்துச் செல்லப்பட்டனர்.

**மசாடா**

இதற்குப் பின்பும் ஆங்காங்கே இஸ்ரவேல் நாட்டிலே கலகம்

உண்டானது. 966 யூதர்கள் குடும்பமாக சுமார் 1500 அடி உயரமுள்ள ஓர் சிறு குன்றின் உயரத்திற்குச் சென்று பதுங்கி இருந்தனர். ரோம சேனை இந்த குன்றை சுற்றி முற்றுகையிட்டனர். சுமார் இரண்டு வருடம் இந்த முற்றுகை நீடித்தது. மேலே இருந்த 966 யூதர்களுக்கு இனி பிழைக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டது. உணவு இல்லை, தண்ணீர் இல்லை.

ரோமருக்கு சரணடையவும் அவர்கள் விரும்பவில்லை. எனவே புருஷர்கள் தங்களை மனைவிகளையும், தங்கள் பிள்ளைகளையும் தாங்களே கொன்றனர். பின்பு தங்களைத் தாங்களே கொன்றனர். கி.பி. 73ல் இது நடந்தது.

ரோமப் பேரரசனான ஹாட்ரியனின் ஆட்சியின் போது கி.பி. 132ல் சைமன் பார்கோச்பா (Simon Bar Kochba) என்ற யூதத் தலைவன் மறுபடியும் ரோமருக்கு விரோதமாக கலகம்பண்ணி எருசலேமைப் பிடித்தான். 3 வருடங்கள் இவன் ஆட்சி செய்தான். கி.பி. 135ல் மறுபடியும் ரோம சேனை அதிக கோபத்துடன் வந்து எருசலேம் பட்டணத்தை முற்றிலும் அழித்துப் போட்டனர். அத்துடன் பட்டணம் முழுவதையும் உழுது அதில் சீயஸ் (Zeus) தேவதைக்கு ஒரு கோவில் கட்டி ரோமர் குடியிருப்புப் பட்டணமாக்கி அதற்கு "அலியா கேப்பிட்டலினா" (Aelia Capitolina) என்று பெயரிட்டனர். எந்த யூதரும் அதற்குள் அனுமதிக்கப்படவில்லை.

மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கிறிஸ்தவனாய் மாறின ரோமப் பேரரசன் கான்ஸ்டான்டின் எருசலேமிலிருந்த தேவதைகளின் கோவில்களை அகற்றி கிறிஸ்தவ ஆலயங்களைக் கட்டினான். கிறிஸ்தவர்களின் புனிதப் பட்டணமாக எருசலேம் மாறிற்று. ஏராளமானவர்கள் புனித யாத்திரை வர ஆரம்பித்தனர்.

- கி.பி. 362ல் ரோமப் பேரரசன் ஜூலியஸ் யூதர்கள் எருசலேமில் குடியேற அனுமதித்தான்.
- கி.பி. 614ல் யூதர்களுடைய உதவியுடன் பெர்சியர் எருசலேமைப் பிடித்தனர். சுமார் 3 ஆண்டுகள் யூதர் ஆட்சி செய்தனர்.
- கி.பி. 629ல் ஹெராக்ளியஸ் என்ற பேரரசன் பெர்சியரிடமிருந்து எருசலேமைப் பிடித்து ஆட்சி செய்தான்.

- கி.பி. 638ல் கலிப் ஓமர் அல்–கட்டாப் (CALIPH OMAR AL-KHATTAB) பட்டணத்தைப் பிடித்து 70 யூதக் குடும்பங்களை எருசலேம் தேவாலயத்தின் மேற்கு சுவர் அருகே குடியிருக்க அனுமதித்தான்.
- கி.பி. 692ல் தற்போது இருக்கும் முஸ்லீம் மசூதி (DOME OF THE ROCK) கட்டப்பட்டது.
- கி.பி. 750 – கலிபா அப்பாசிட் ஆட்சி
- கி.பி. 1099 – கிறிஸ்தவ சேனை (CRUSODERS) எருசலேமைப் பிடித்து யூத சமூகத்தை அழித்தனர்.
- 1187ல் – குர்திஸ் இனத்தைச் சார்ந்து சலாடின் என்ற எகிப்து மற்றும் சிரியாவின் சுல்தான் எருசலேமைப் பிடித்தான்.
- 1259ல் – டாடர் என்ற கலகக்காரன் எருசலேமைப் பிடித்தான்.
- 1260ல் – மாம்லுக் என்ற இனமக்கள் எருசலேமைப் பிடித்தனர்.
- 1267ல் – நமனிடஸ் (NAHMANIDES) என்பவனும் அவனுடைய சீடர்களும், ஸ்பெயின் தேசத்திலிருந்து வந்து யூதக் குடியிருப்பிற்கான வழிகளை ஏற்படுத்தினர்.
- 1488 – ஒபதியா என்ற யூதக்குரு பெர்டினாரோ என்ற இடத்திலிருந்து வந்து எருசலேமில் குடியேறினர்.
- 1517ல் – துருக்கியர் எருசலேமைப் பிடித்து சமார் 400 ஆண்டு காலம் எருசலேமை ஆண்டனர் (இடையில் சிறிது காலம் எகிப்தியர் ஆண்டனர்).
- 1538 – சுல்தான் சுலைமான் பழைய எருசலேம் பட்டணத்தைச் சுற்றிலும் புதிய மதிலைக் கட்டினான். இந்த சுவர்தான் இன்று வரை இருக்கின்றது.
- 1917 – பிரிட்டிஷ் ராணுவம் எருசலேமை பிடித்தது.
- 1948 – இஸ்ரவேல் சுதந்தரம் பெற்றது.
- 1967 – பிரிக்கப்பட்ட எருசலேம் ஒன்றாய் இணைக்கப்பட்டது.

## 2. இஸ்ரவேல் நாடு மறுபடியும் உருவானது

***அன்றியும் அவர்களுக்கு ஒரு உவமையைச் சொன்னார்: அத்திமரத்தையும், மற்றெல்லா மரங்களையும் பாருங்கள்.***

***அவைகள் துளிர்க்கிறதை நீங்கள் காணும்போது வசந்த காலம் சமீபமாயிற்றென்று அறிகிறீர்கள்.***

*அப்படியே இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்போது, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்றென்று அறியுங்கள்.*

*இவையெல்லாம் சம்பவிக்குமுன் இந்தச் சந்ததி ஒழிந்து போகாதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (லூக்கா 21:29–32).*

இங்கே அத்திமரம் என்று கூறப்பட்டிருப்பது இஸ்ரவேல் நாட்டை என்பது குறிப்பிடத்தக்கது (எரேமியா 24:1–10). கி.பி. 70ல் எருசலேம் தேவாலயம் தீக்கிரையாக்கப்பட்ட பின்பு யூதர்கள் உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் தங்கள் இனத்தை கலப்படமில்லாமலேயே பாதுகாத்தனர். வெகுசில குடும்பங்கள்தான் தாங்கள் குடியேறின நாட்டிலுள்ள மக்களுடன் சம்பந்தம் கலந்தனர். எப்படியும் ஒருநாள் தங்கள் முற்பிதாவாகிய ஆபிரகாமின் நாட்டிற்குத் திரும்பிப் போவோம் என்று நம்பி வாழ்ந்தனர். அவர்கள் உலகில் எந்தெந்த நாடுகளில் இருந்தாலும் பஸ்கா கொண்டாடியபின் கூறிவந்த ஓர் பிரகடனம் **"அடுத்த ஆண்டு எருசலேமில்"** எவ்வளவு விசுவாசம் பாருங்கள்!.

ஒரு ஜாதி அழிக்கப்பட்டபின் மறுபடியும் எழும்பி வருவதில்லை என்று சரித்திரம் விவரிக்கிறது. ஆனால் யூதர்கள் முற்றிலும் வித்தியாசமானவர்கள். ஆச்சரியமான முறையில் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்பட்டார்கள்.

*அக்காலத்திலே, ஆண்டவர் அசீரியாவிலும், எகிப்திலும், பத்ரோசிலும், எத்தியோப்பியாவிலும், பெர்சியாவிலும், சிநேயாரிலும், ஆமாத்திலும், சமுத்திரத் தீவுகளிலும், தம்முடைய ஜனத்தில் மீதியானவர்களை மீட்டுக்கொள்ளத் திரும்ப இரண்டாம் விசை தமது கரத்தை நீட்டி,*

*ஜாதிகளுக்கு ஒரு கொடியை ஏற்றி, இஸ்ரவேலில் துரத்துண்டவர்களைச் சேர்த்து, யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களை பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார். (ஏசாயா 11:11,12).*

நம்முடைய தலைமுறையில் இதைப் பார்க்கும் சிலாக்கியம் நமக்குக் கிடைத்தது. இஸ்ரவேலர் செய்வதெல்லாம் சரி என்று நாம்

ஒத்துக்கொள்ள முடியாது. ஆனால் அவர்கள் கூட்டி சேர்க்கப்பட்டவிதம் ஆச்சரியமானது. இன்றும் யூதர்கள் யாவரும் இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பது கசப்பான உண்மை.

1870ல் பாலஸ்தீனாவை ஆண்டுவந்த துருக்கியர் யூதர்கள் பாலஸ்தீனாவில் நிலம் வாங்க அனுமதித்தனர். அப்போது பாலஸ்தீனாவில் சுமார் 5000 யூதர்கள் மட்டுமே வாழ்ந்து வந்தனர். வெளிநாடுகளில் வாழ்ந்து வந்த யூதர்கள் வனாந்தரமாயிருந்த பாலஸ்தீனாவில் குடியேற ஆர்வமில்லாதிருந்தனர்.

1880ல் ரஷ்யாவிலிருந்த ஏராளமான யூதர்களை நாட்டை விட்டு வெளியேறும்படி ரஷ்யா கட்டளையிட்டது. அப்படி வெளியேறிய யூதர்களில் பல்லாயிரம்பேர் பாலஸ்தீனாவிற்கு வந்து குடியேறினர்.

**டாக்டர் தியோடர் ஹெர்ஸல் *(THEODORE HERZL)***

பிரான்ஸ் தேசத்தின் தலைநகரமான பாரிஸில் வாழ்ந்து வந்த யூத பண்டிதர் 1896ல் "**யூதனும் பாலஸ்தீனாவும்**" என்ற ஓர் புத்தகத்தை எழுதி உலகின் 72 நாடுகளில் வாழ்ந்து வந்த யூதர்களுக்கு அனுப்பினார். இதன்மூலம் தங்கள் தாய் நாடு தங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற எண்ணம் புத்துணர்வு பெற்றது. இவருடைய முயற்சியில் 1897 ஆகஸ்ட் மாதம் 29–31 சுவிட்சர்லாந்து நாட்டிலிருக்கும் 'பாஸல்' நகரில் யூதத்தலைவர்களின் மாநாடு நடைபெற்றது. 197 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். "**சீயோன் சங்கம்**" உருவானது. டாக்டர் தியோடர் ஹெர்ஸல் இதன் தலைவரானார். சிறிது காலம் வாழ்ந்த இவர் தமது 44ம் வயதில் மரணமடைந்தார்.

மாநாடு முடிந்த சில நாட்களில் அவருடைய டைரியில் இப்படி எழுதியுள்ளார்:

***பாஸல் பட்டணத்தில் யூத நாட்டை நிறுவிவிட்டேன். இன்று இதை வெளிப்படையாக பேசினால் உலகம் என்னைப் பகைக்கும். இன்னும் ஐந்து ஆண்டுகளில் அல்லது ஐம்பது ஆண்டுகளில் உலகம் இதை தெளிவாக விளங்கிக் கொள்ளும்.***

அவர் உரைத்தபடியே 50 ஆண்டுகளில் அதாவது 1947 ஆகஸ்ட் 31ம் தேதி யூதருக்கு அவர்கள் நாட்டை கொடுக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை தீர்மானம் எடுத்தது.

டாக்டர் ஹெர்ஸல் மரித்தபின் டாக்டர் கெய்ம் வெய்ஸ்மென் (CHAIM WEIZMANN) சீயோன் சங்கத் தலைவரானார். இவர் ரஷ்யாவில் பிறந்த யூதர். பின்பு இங்கிலாந்திற்கு வந்து மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் இரசாயண பேராசிரியராய் பணியாற்றி வந்தார்.

அந்நாட்களில் உலக வல்லரசாக விளங்கின பிரிட்டன் ஆப்பிரிக்காவிலிருக்கும் உகண்டா நாட்டின் ஒரு பகுதியை யூதர்களின் நாடாகக் கொடுக்க விரும்பினது. ஆனால் டாக்டர் வெய்ஸ்மேன் அதை எதிர்த்தார். பாலஸ்தீனாவைத் தவிர வேறு எந்த நாட்டையும் எங்கள் தாயகமாக சீயோன் சங்கம் ஏற்றுக் கொள்ளாது என்று கூறினார்.

யூதர்கள் கொஞ்சம் கொஞ்சமாக பாலஸ்தீனாவிற்கு குடி வந்தனர். 1900ம் ஆண்டில் சுமார் 40000 யூதர்கள் பாலஸ்தீனாவில் வாழ்ந்து வந்தனர்.

1909ல் டெல் அவிவ் குடியிருப்பு ஆரம்பிக்கப்பட்டு பல நாடுகளிலிருந்தும் யூதர்கள் வந்து குடியேறினர். இன்று டெல் அவிவ் ஒரு பெரிய நகரம்.

1914ல் பாலஸ்தீனாவில் யூதர்களின் எண்ணிக்கை 80000 என்ற அளவில் உயர்ந்தது.

1914 ஆகஸ்ட் 4ம் தேதி முதல் உலக மகா யுத்தம் ஆரம்பமானது. பிரிட்டனுக்கும், ஜெர்மனிக்கும் இடையேதான் யுத்தம் நடந்தது. ஆனால் 33 நாடுகள் இதில் கலந்துகொண்டதால் உலக மகா யுத்தம் என்று அழைக்கப்பட்டது. பிரிட்டனுக்கு வெடிமருந்து கிடைத்து வந்த பகுதிகளை ஜெர்மானியர் பிடித்தனர். இதனால் 1916ல் பிரிட்டனுக்கு வெடிமருந்து கிடைக்காமல் இக்கட்டில் மாட்டிக் கொண்டனர். இதுவரை பிரிட்டனின் ஆட்சிக்குட்பட்டிருந்த துருக்கியர் பிரிட்டனுக்கு தோல்வி ஏற்படும் என்று அறிந்து ஜெர்மானியருடன் சேர்ந்து கொண்டனர். அதுவும் நன்மைக்கு ஏதுவாகவே நடந்தது.

பிரிட்டிஷ் அரசாங்கம் டாக்டர் கெய்ம் வெய்ஸ்மெனை அணுகி தங்களுக்கு ஏதாவது உதவி செய்திட முடியுமா என்று கேட்டனர். டாக்டர் வெய்ஸ்மேன் முயற்சித்து T.N.T நச்சு வாயு மருந்தை கண்டுபிடித்துக் கொடுத்தார். இதனால் பிரிட்டன் வெற்றியடைந்தது.

டாக்டர் வெய்ஸ்மென் செய்த மகத்தான உதவியைப் பாராட்டி

அவருக்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு வெகுமதி கொடுக்க விரும்பிற்று. ஆனால் டாக்டர் வெய்ஸ்மென் தனிப்பட்ட முறையில் எதையும் நான் எனக்காகப் பெற விரும்பவில்லை. நீங்கள் எங்கள் யூத மக்களுக்கு ஒரு நன்மை செய்யுங்கள் என்று கூற, சீயோன் சங்கத்தின் தரிசனம் எங்களுக்கு தாய் நாடு வேண்டும் என்பதே என்று விளக்கினார். பிரிட்டிஷ் அரசாங்கம் அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டது.

### பால்பர் பிரகடனம் (BALFOUR DECLARATION)

1917ம் ஆண்டு நவம்பர் 2ம் தேதி பிரிட்டனின் வெளியுறவுத் துறை செயலாளர் ஆர்தர் ஜேம்ஸ் பால்பர் என்பவர், யூதர்களின் சீயோன் சங்கத்தின் முக்கிய அங்கமான ரோத்ஸ் சைல்ட்ஸ் (ROTHS CHILDS) என்பவருக்கு பாலஸ்தீனாவை யூதர்களின் தாய் நாடாக பிரிட்டிஷ் மந்திரிசபை அங்கீகரித்துள்ளதை தெரியப்படுத்தி கடிதத்தை அனுப்பினார். இதுதான் "பால்பர் பிரகடனம்" என்று அழைக்கப்படுகிறது. இந்த பிரகடனத்தை அமுல்படுத்துவதற்கு டாக்டர் வெய்ஸ்மென் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

உலகமெங்குமுள்ள யூதர்களுக்கு இது ஒரு மகிழ்ச்சியான செய்தியாய் அமைந்தது. ஆனால் இந்தப் பிரகடனத்தை எதிர்த்து பாலஸ்தீனாவிலிருந்த அரேபியர் கலகம் பண்ணினர். இந்த நாட்களில் பாலஸ்தீனா துருக்கியின் ஆட்சிக்குட்பட்டிருந்தது என்று முன்பே பார்த்தோம்.

### எருசலேம் நகரத்தை பிரிட்டிஷ் சேனை பிடித்தது

துருக்கியரிடமிருந்து பாலஸ்தீனாவை கைப்பற்ற பிரிட்டன் தீர்மானித்தது. ஜெனரல் ஆலென்பீ (ALLENBY) ஓர் யூத கிறிஸ்தவன். இவரின் தலைமையில் முதல் உலக மகா யுத்தத்தில் பிரிட்டன் சிறந்த வெற்றி பெற்றது. எருசலேமைப் பிடிக்கும்படி இவரின் தலைமையில் ஒரு சேனையை பிரிட்டன் அனுப்பினது. பெயர்செபாவிலிருந்த துருக்கி சேனையை முறியடித்து பிரிட்டிஷ் சேனை பாலஸ்தீனாவிற்குள் நுழைந்தது. இரத்தம் சிந்தி எருசலேமை பிடிக்க விரும்பாத ஆலென்பீ ஒரு பிட் நோட்டீஸ் அச்சடித்து விமானங்கள் மூலமாக எருசலேமுக்குள் போட்டார். அதிலிருந்த விபரம்....

***நான் முதலாவது உலக மகா யுத்தத்தை நடத்தின ஜெனரல்***

***ஆலென்பீ. எருசலேமைப் பிடிக்க வந்திருக்கிறேன். அரேபியர்களாகிய நீங்கள் துருக்கி ஆட்சியை புறக்கணித்து விட்டு பிரிட்டனுடன் சேர்ந்தால் உங்களுக்கு பல நன்மைகளைச் செய்வோம். இல்லாவிட்டால் உங்களை அழித்துவிடுவோம்.***

இதுவரை ஆகாய விமானங்களைப் பார்க்காத அரேபியர்களும், துருக்கியரும் பயத்துடன் ஓடிவிட்டனர். அரபி மொழியில் "அல்லா என்பாயி" என்றால் "அல்லாவின் தீர்க்கதரிசி" என்று பொருள். அல்லாவின் தீர்க்கதரிசியே படையெடுத்து வந்துவிட்டார் என்று பயந்து ஓடினர். 1917 டிசம்பர் 9ம் தேதி எருசலேம் கவர்னரும் ஓடிவிட்டார். எருசலேமிலிருந்த துருக்கிய சேனை வெள்ளைக் கொடியை உயர்த்தி பிரிட்டிஷ் சேனையிடம் சரணடைந்தது. எருசலேம் ஆலென்பீயிடம் ஒப்படைக்கப்பட்டது.

1917ம் ஆண்டு டிசம்பர் 11ம் தேதி ஆலென்பீ ஒரு கையில் ஒரு பரிசுத்த வேதாகமத்தையும், மறு கையில் எருசலேமின் யோப்பா வாசல் சாவியையும் பிடித்துக் கொண்டு முன்சென்று பட்டண வாசலைத் திறந்து உள்ளே நுழைந்து தலை வணங்கி ஜெபித்து தேவனுக்கு நன்றி செலுத்தினார். இவ்விதமாக இரத்தம் சிந்துதல் இல்லாமல் எருசலேம் பிடிக்கப்பட்டது.

1918 நவம்பர் 11ம் தேதி உலக மகா யுத்தம் முடிவடைந்தது.

யுத்தம் முடிவடைந்தவுடன் சர்வதேச சங்கம் (LEAGUE OF NATIONS) ஸ்தாபிக்கப்பட்டது. துருக்கியரிடமிருந்து பிடித்த சிரியா நாடு பிரெஞ்சு நாட்டுக்கும், பாலஸ்தீனா பிரிட்டனுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டது. பிரிட்டனின் ஆட்சிக்குள் வந்த பாலஸ்தீனாவில் யூதர்கள் வந்து குடியேற அனுமதி கொடுக்கப்பட்டது.

1920 முதல் யூதர்கள் உலகிலுள்ள சுமார் 72 நாடுகளிலிருந்து பாலஸ்தீனாவிற்கு வந்து குடியேறினர். பாலஸ்தீனாவில் குடியிருந்த அரேபியர் வறுமையில் இருந்தனர். புதிதாய் வந்து குடியேறிய யூதர்கள் கல்வியிலும், பொருளாதாரத்திலும், நாகரீகத்திலும் மேலோங்கி நின்றனர். இதனால் பொறாமை கொண்ட அரேபியர் புதிதாய் குடிவந்த யூதர்களுக்கு விரோதமாக கலகம் பண்ணினர். 1939ல் சுமார் 5 இலட்சம் யூதர்கள் பாலஸ்தீனாவில் வாழ்ந்து வந்தனர். அரேபியருடைய கொந்தளிப்பில் பால்பர் பிரகடனத்தை பிரிட்டிஷ் அரசு வாபஸ் பெற்றது.

இரண்டாம் உலக மகாயுத்தம் ஆரம்பிக்குமுன் எருசலேமிலிருந்த அரேபியத் தலைவர் கிராண்ட் மப்டி (Grand Mufti) ஜெர்மனி சர்வாதிகாரியான அடால்ப் ஹிட்லருடன் இரகசிய ஒப்பந்தம் செய்தார். இரண்டாம் உலக மகா யுத்த நாட்களில் ஹிட்லர் மட்டுமே சுமார் 60 இலட்சம் யூதர்களை கொலை செய்தான்.

1939 செப்டம்பர் 3ம் தேதி இரண்டாம் உலக மகா யுத்தம் ஆரம்பித்து, 1945 செப்டம்பர் 2ம் தேதி வரை நடந்தது. 1945 அக்டோபர் 24ம் தேதி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் நிறுவப்பட்டது (United Nations).

பாலஸ்தீனாவை இரண்டாகப் பிரித்து அரேபியர்களுக்கும், யூதர்களுக்கும் கொடுக்க ஐக்கிய நாடுகள் நிறுவனம் விரும்பியது. ஆனால் அரேபியர்கள் இதை கடுமையாக எதிர்த்தனர்.

**ஐ.நா. தீர்மானம் 181**

1947 நவம்பர் 29ம் தேதி ஐக்கிய நாடுகள் நிறுவனம் பாலஸ்தீனாவை யூதர்களுக்குக் கொடுக்க ஒட்டளித்தது. 1948 மே மாதம் 14ம் தேதி பாலஸ்தீனா யூதரின் நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது. அன்று காலை 9 மணிக்கு டெல் அவிவ் நகரத்தில் பிரிட்டிஷ் கொடி இறக்கப்பட்டது. இஸ்ரவேல் நாட்டின் முதல் பிரதம மந்திரியாக தெரிந்தெடுக்கப்பட்ட டேவிட் பென்குரியன் வானொலியில் அறிவிப்புக் கொடுத்தார்... இதுவரை நாடில்லாதிருந்த யூதர்களாகிய எங்களுக்கு ஒரு நாட்டை ஏற்படுத்த தேவன் உதவி செய்தார். எங்கள் நாட்டின் பெயர் "இஸ்ரவேல்". இந்த செய்தியைக் கேட்ட யூதர்கள் எக்காளங்களை ஊதி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அன்று நடுஇரவில் இஸ்ரவேல் நாட்டின் கொடியாக தாவீதின் கொடி உயர்த்தப்பட்டது.

**டேவிட் பென்குரியன் முதல் பிரதமரானார்**

அன்று இரவு 12.11க்கு அமெரிக்க ஜனாதிபதி இஸ்ரவேலை அங்கீகரித்து வாழ்த்தினார். மே 17ம் தேதி ரஷ்யா அங்கீகரித்தது. 1949 மார்ச் 22ல் 46 நாடுகள் இஸ்ரவேலை அங்கீகரித்தன. அரேபியர் மட்டும் அங்கீரிக்கவில்லை. இஸ்ரவேல் தனிநாடாக பிரகடனப்படுத்தப் பட்ட சில மணி நேரத்திலேயே சிரியா, ஈராக், ஜோர்டன், எகிப்து, லெபனான் ஆகிய நாடுகள் இஸ்ரவேல் மேல் யுத்தம் தொடுத்தன. இஸ்ரவேல் நாட்டில் யூதர்கள் அனுசரித்த முதல் ஓய்வு நாளிலேயே

எகிப்திய போர் விமானங்கள் டெல் அவிவ் நகரத்தைத் தாக்கின. இஸ்ரவேல் நாடு என்ற ஒன்று இராதபடி அழித்துவிடுவோம் என்று எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. தெற்கே இருந்து எகிப்தும், வடக்கிலிருந்து சிரியா, லெபனானும், கிழக்கிலிருந்து ஜோர்டான், ஈராக்கும் தாக்க ஆரம்பித்தன. சில மணி நேரத்திற்கு முன்பு சுதந்தரம் பெற்ற நாடு என்ன செய்ய முடியும்?

ஐக்கிய நாடுகள் சபை ஒன்றும் சொல்லவில்லை. உலக நாடுகளில் ஒன்றும் இஸ்ரவேலுக்கு உதவ முன்வரவில்லை. சிறிய பழைய ஆகாய விமானம் ஒன்றும், ஒரு பழைய கப்பலும்தான் இஸ்ரவேலுக்கு ஆயுதங்களாய் இருந்தன. ஆனால் யெகோவா தேவன் அவர்களோடு இருந்ததால் அற்புதம் நடைபெற்றது. ஏராளமான யூதர்கள் கொல்லப்பட்டாலும், அத்தனை நாடுகளும் கூட்டாக யுத்தம் செய்த போதிலும் இஸ்ரவேல் அவர்களை விரட்டி அடித்தது. 27 நாட்கள் இந்த யுத்தம் நடைபெற்றது. ஐக்கிய நாடுகள் சபை யுத்தத்தை நிறுத்த அழைப்புக் கொடுத்தது. சில நாட்கள் கழித்து மறுபடியும் யுத்தம் ஆரம்பித்து அந்த ஆண்டு முழுவதும் நடைபெற்றது.

1949 பிப்ரவரி 24ம் தேதி இஸ்ரவேல், எகிப்து சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. பழைய எருசலேம் ஜோர்டான் நாட்டின் கட்டுப்பாட்டில் இருக்கத் தீர்மானிக்கப்பட்டது. யூதர்கள் பழைய எருசலேமுக்குள் வந்துபோக அனுமதிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டாலும் ஜோர்டான் நாட்டின் அரசனாயிருந்த அப்துல்லா பெரிய தடுப்புச் சுவரைக் கட்டி யூதர்கள் உள்ளே வரத்தடை செய்தான். தேவாலயம் இருந்த இடத்தில் கட்டப்பட்டுள்ள மசூதிப் பகுதியில் 1951 ஜோர்டான் அரசன் அப்துல்லா கொல்லப்பட்டான்.

1949ம் ஆண்டிலிருந்து உலகத்தின் பல நாடுகளிலிருந்தும் யூதர்கள் வந்து இஸ்ரேல் நாட்டில் குடியேறினர்.

முதல் 18 மாதங்களில் சுமார் 3,50,000 யூதர்கள் பல நாடுகளிலிருந்தும் வந்து குடியேறினர். சில நாடுகளை மட்டும் கீழே குறிப்பிடுகிறோம்.

– ஏமனிலிருந்து 45000 பேர்,

– ஈராக்கிலிருந்து 130000 பேர்,

- துருக்கியிலிருந்து 33000 பேர்,
- செக் குடியரசிலிருந்து 20000 பேர்,
- பல்கேரியாவிலிருந்து 36000 பேர்,
- யூகோஸ்லோவியா 7000 பேர்,
- போலந்திலிருந்து 28000 பேர்,
- வட ஆப்பிரிக்காவிலிருந்து 35000 பேர்,
- சீனாவிலிருந்து 5000 பேர்,

மேலும் இந்தியாவிலிருந்தும் இன்னும் பல நாடுகளிலிருந்தும் இஸ்ரவேலில் வந்து குடியேறினர்.

1949 ஜனவரி 20ம் தேதி இஸ்ரவேலில் சட்ட சபைத் தேர்தல் நடைபெற்றது. கெய்ம் வெய்ஸ்மேன் (CHAIM WEIZMANN) முதல் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதே ஆண்டு மே மாதம் 11ம் தேதி இஸ்ரேல் நாடு ஐ.நா. சபையின் 50வது அங்கமாக அங்கீகரிக்கப்பட்டது.

1967 ஜூன் 5–10 ஆகிய 6 நாட்களில் நடந்த யுத்தத்தில் எகிப்து, ஜோர்டான், சிரியா நாடுகள் கூட்டாக இஸ்ரவேலைத் தாக்கின. இஸ்ரவேல் என்ற நாடு கடலில் தள்ளப்படும் என்று எகிப்து ஜனாதிபதி நாஸர் அறிவித்தார். ஐ.நா. சபையின் பாதுகாப்பு வீரர்களை சீனாய் பகுதியை விட்டு வெளியேற கட்டளையிட்டார். யாரும் எதிர்பாராத நேரத்தில் இஸ்ரவேல் போர் விமானங்கள் எகிப்து, ஜோர்டான், சிரியா ஆகிய நாடுகளின் போர்விமானங்கள் நிறுத்தியிருந்த இடங்களுக்குச் சென்று கூண்டோடு அழித்தன. எகிப்தும் மற்ற நாடுகளும் செய்வது அறியாது நிலைகுலைந்தன. 3ம் நாளில் யூத சேனை பழைய எருசலேமுக்குள் புகுந்து தேவாலயப் பகுதியையும் மற்றப் பகுதிகளையும் பிடித்தன.

தேவாலய மேற்குச் சுவர் இருக்கும் இடத்திற்கு யூத போர் வீரர்கள் சென்று தங்கள் புனித ஸ்தலத்தைப் பார்த்து கண்ணீர்விட்டு அழுதனர். ராணுவத்தினருக்கு போதகராயிருந்த பிரிகேடியர் ரசி ஷாலமோ (Rassi Shalomo) தேவாலய மேற்குச் சுவருக்குச் சென்று (Western Wall) ராணுவத்தினரோடு பிரார்த்தனை நடத்தினார். ராணுவ மந்திரியாயிருந்த மோஷே தயான் (Moshe Dayan) **"நமது மகா பரிசுத்த தலத்திற்கு**

**வந்துவிட்டோம், இனி ஒரு போதும் இதை விட்டுவிடமாட்டோம்"** என்று உணர்ச்சி வசப்பட்டு அறிக்கையிட்டார். இதே நாளில் சுமார் 2 இலட்சம் யூதர்கள் இந்த இடத்திற்கு வந்து பிரார்த்தனை செய்தனர்.

1973ல் எகிப்து இஸ்ரவேலர் மேல் போர் தொடுத்து தோல்வி கண்டது. அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் தலையிட்டு இஸ்ரவேல் எகிப்திற்கு இடையே சமாதான ஒப்பந்தம் ஏற்படுத்தினார். 1977 நவம்பர் மாதம் இனிமேலும் எகிப்தியர் கொல்லப்படுவதை நான் விரும்பவில்லை. இஸ்ரவேல் நாட்டை சந்திக்கவும் ஆயத்தம் என்று எகிப்து அதிபர் அன்வர் சதாத் அறிவித்தார்.

அதனை வரவேற்ற இஸ்ரவேல் பிரதமம் மேனச்சம் பிகின், அன்வர் சதாத்தை வரும்படி அழைத்தார். 1977 நவம்பர் 19ம் தேதி அன்வர் சதாத் இஸ்ரவேல் நாட்டின் பாராளுமன்றத்தில் உரையாற்றினார். 1978ல் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மிகார்ட்டர் இந்த இரு நாட்டு பிரதமர்களையும் அமெரிக்காவிற்கு அழைத்து கேம்ப் டேவிட் என்ற இடத்தில் கலந்து பேசி ஓர் சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.

1980 ஜூலை 30ம் தேதி எருசலேம் இஸ்ரவேலின் தலைநகராகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இதை பெரும்பாலான உலக நாடுகள் அங்கீகரித்தாலும் முஸ்லீம் நாடுகள் இதை இன்று வரை ஏற்றுக்கொள்ளவில்லை.

2000 வருட கணக்கெடுப்பின்படி இஸ்ரவேல் நாட்டின் மக்கள் தொகை 51,21,683. எருசலேமின் மக்கள் தொகை 670000.

யூதர்கள் 80.7% சதவிகிதம், அரேபியர் 15.6%

1947ம் ஆண்டிலிருந்து 102 நாடுகளிலிருந்து இஸ்ரவேலுக்கு வந்து குடியேறிய யூதர்களின் எண்ணிக்கை 28,00,000.

### 3. நடந்து முடிந்த யுத்தங்கள்

***யுத்தங்களையும், யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள். கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள். இவைகளெல்லாம் சம்பவிக்க வேண்டியதே ஆனாலும், முடிவு உடனே வராது.***

***ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும் பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். (மத்தேயு 24:6,7).***

அணு ஆயுதப் போரரைத் தவிர்க்க ஏற்படுத்தப்பட்ட சர்வதேச இயக்கத்தின் தலைவராகப் பணியாற்றிய ரஷ்யர் டாக்டர் குஜ்மிட் சோவ் என்பவர் 1984ல் இந்தியாவிற்கு வந்தபோது கூறியது:

"மனித வரலாற்றில் இதுவரை சுமார் 14500 யுத்தங்கள் நடந்துள்ளன. அதில் இரண்டு உலக மகா யுத்தங்களாகும்". இதில் சுமார் 400 கோடி மக்கள் மாண்டனர்.

இன்று உலக அளவில் யுத்தத்திற்காகச் செலவு செய்யப்படும் பணம் ஒரு நிமிடத்திற்கு சுமார் 3 மில்லியன் டாலர். அதாவது சுமார் 15 கோடி ரூபாய். ஒரு நிமிடத்திற்கு இவ்வளவு என்றால் ஒரு மணிக்கு, ஒரு நாளுக்கு, ஒரு மாதத்திற்கு, ஒரு வருடத்திற்கு எவ்வளவு செலவாகுமென்று எண்ணிப் பாருங்கள். இந்தப் பணமெல்லாம் ஆக்கப்பூர்வமான காரியங்களுக்கு பயன்பட்டால் உலகம் எவ்வளவு முன்னேற்றமடையும்.

## முதல் உலக மகா யுத்தம்

1914 ஆகஸ்ட் 4ம் தேதி ஆரம்பித்து 1918 நவம்பர் 11ம் தேதி முடிந்தது. இங்கிலாந்திற்கும், ஜெர்மனிக்கும் நடந்த யுத்தம் இது. ஆனால் 33 நாடுகள் இதில் பங்குபெற்றன. அன்றைய நாட்களில் இந்த நாடுகள் உலகத்தில் முக்கிய பங்கு வகித்தவை. எனவே இது உலக மகா யுத்தம் என்று அழைக்கப்பட்டது.

ஆகாய விமானங்களும், நீர் மூழ்கிக் கப்பல்களும் முதன் முதலாக யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டது. சுமார் 4 கோடி மக்கள் மாண்டனர். சுமார் 11 இலட்சம் கோடி ரூபாய்க்கு சமமான பொருட்கள் நாசமாக்கப்பட்டன. இன்றைய நிலையில் இது இன்னும் நூறு மடங்கு மதிப்புள்ளதாகும்.

## இரண்டாம் உலக மகா யுத்தம்

1939 செப்டம்பர் 3ம் தேதி ஆரம்பமாகி 1945 செப்டம்பர் 2ம் தேதி முடிவடைந்தது. ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகள் ஒரு அணியாகவும் பிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யா ஆகிய நாடுகள் கூட்டமாகவும் இந்த யுத்தத்தில் ஈடுபட்டன. 1945 ஆகஸ்ட் 6ம் தேதி ஜப்பானிலுள்ள ஹிரோஷிமா நகரிலும், 9ம் தேதி நாகசாகி பட்டணத்தின் மேலும் அமெரிக்க அணுகுண்டுகளைப் போட்டது. இந்த இரு பட்டணங்களும் தரைமட்டமாக்கப்பட்டதுடன் ஏராளமானபேர் மடிந்தனர்.

5 கோடி மக்கள் கொல்லப்பட்டனர். கணக்கில் அடங்கா பொருட்கள் சேதமாகின.

## இஸ்ரவேலுக்கு விரோதமாக நடத்தப்பட்ட யுத்தங்கள்

1948 மே மாதம் 14ம் தேதி இஸ்ரவேல் சுதந்தரமடைந்தது. சுதந்தரப் பிரகடனம் பண்ணப்பட்ட சில மணி நேரத்திலேயே அண்டைநாடுகள் இஸ்ரவேல் மேல் போர் தொடுத்தன எனப் பார்த்தோம். இப்படி 5 யுத்தங்கள் நடந்தன.

### 1. சுதந்தரப் போர்

1948 மே மாதம் 15ம் தேதி சிரியா, ஈரான், ஜோர்டான், எகிப்து, லெபனோன் ஆகிய 5 நாடுகள் இஸ்ரவேலைத் தாக்கின. இஸ்ரவேல் நாடு சுதந்தரம் அடைந்து முதல் ஓய்வுநாளைக் கூட ஆசரிக்க முடியாமல் தடுக்கப்பட்டது. எகிப்திலிருந்து ஆகாய விமானங்கள் புறப்பட்டு டெல்அவிவ் பட்டணத்தைத் தாக்கின. "இஸ்ரவேல் என்ற நாட்டை இல்லாமல் அழிப்போம்" என்று எகிப்தின் தலைநகர் கெய்ரோவிலிருந்து அறிவிப்புக் கொடுக்கப்பட்டது. எகிப்திய பீரங்கிப்படை டெல்அவிவ், மற்றும் எருசலேமைத் தாக்கின. கலிலேயாப் பகுதியை சிரியாவும், லெபனோனும் தாக்கின. கிழக்கே இருந்து ஜோர்டானும், ஈராக்கும் தாக்கின. ஏராளமான யூதர்கள் கொல்லப்பட்டனர்.

இஸ்ரவேலிடம் ஒரு சிறிய ஆகாய விமானம் மட்டுமே இருந்தது. ஒரு சிறிய பழைய கப்பல் ஒன்று மட்டுமே கடல் படையிடம் இருந்தது. இதை வைத்து இத்தனை நாடுகளையும் இஸ்ரவேல் துரத்தினது என்பது நம்பக்கூடாததாயிருந்தது. கர்த்தருடைய கரம் அவர்களுடன் இருந்ததால் இது சாத்தியமாயிற்று.

27 நாட்கள் இந்த யுத்தம் நடந்தது. பின்பு ஐக்கிய நாடுகள் சபை யுத்தத்தை நிறுத்தும்படி அறிவித்தது. இஸ்ரவேல் யுத்தத்தை நிறுத்தியது. ஆனால் அண்டை நாடுகள் தொடர்ந்து முன்னேறி வந்தன. அந்த ஆண்டு முழுதும் யுத்தம் தொடர்ந்தது. 1949 பிப்ரவரி 24ம் தேதி எகிப்தும் இஸ்ரவேலும் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. மசூதி இருக்கும் பழைய எருசலேம் ஜோர்டான் நாட்டின் அதிகாரத்திலிருக்க தீர்மானிக்கப்பட்டது.

**2. சீனாய் யுத்தம்**

1956 அக்டோபர் 29ம் தேதி எகிப்தும், அண்டை நாடுகளும் இஸ்ரவேல் மேல் படையெடுத்தன. நவம்பர் 5ம் தேதி போர் நிறுத்தம் செய்யப்பட்டது.

**3. ஆறு நாள் யுத்தம்** (1967)

1967 ஜூன் மாதம் 5ம் தேதி 10ம் தேதி வரை (6 நாட்கள் மட்டுமே) நடைபெற்றது. இஸ்ரவேல் நாடு கடலுக்குள் தள்ளப்படும் என்று எகிப்து அதிபர் நாசர் அறிவித்து யுத்தத்தை ஆரம்பித்தார். ஐக்கிய நாடுகளின் ராணுவம் வாபஸ் ஆக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இது இவருக்கு தீமையாக முடிந்தது. கண் இமைக்கும் நேரத்தில் இஸ்ரவேல் ஆகாய விமானங்கள் எகிப்து, ஜோர்டான், சிரியா ஆகிய நாடுகளுக்குள் சென்று அவர்களின் போர் விமானங்களைத் தாக்கி அழித்தன. எதிரிகள் செய்வது அறியாது திகைத்து நின்றனர்.

1967 ஜூன் மாதம் 7ம் தேதி இஸ்ரவேல் சேனை ஜோர்டான் நாட்டின் படைகளை முறியடித்து பழைய எருசலேமுக்குள் நுழைந்து எருசலேம் பட்டணம் முழுவதையும் தங்கள் ஆட்சிக்குள் கொண்டு வந்தனர்.

சாலொமோன் காலத்தில் கட்டப்பட்ட தேவாலயத்தின் மேற்குச் சுவர் மட்டும் மீந்திருக்கிறது. அந்த சுவர் தற்போதுள்ள தரை மட்டத்திலிருந்து கீழே 40 அடி இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**4. பீரங்கிப் போர்**

1968 ஆகஸ்ட் மாதம் 7ம் தேதி எகிப்தும் மற்ற அரபு நாடுகளும் இஸ்ரவேல் மீது போர் தொடுத்து படுதோல்வியடைந்தனர்.

**5. யோம் கிப்பூர் யுத்தம்** (1973)

1973ல் இஸ்ரவேல் பாவ நிவிர்த்தி பண்டிகை கொண்டாடும் நாளில் எகிப்தும் மற்ற அரபு நாடுகளும் இஸ்ரவேல் மேல் படையெடுத்தன. இதிலும் இஸ்ரவேல் வெற்றி பெற்றது.

பாகம்: 2

# நிறைவேறிக் கொண்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள்

இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு முன்பதாக நடைபெறும் என்று சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களில் பல இன்று நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. அவைகளை ஒவ்வொன்றாய் ஆராய்வோம்.

## 1. ஐரோப்பிய சங்கம்

கடைசி நாட்களில் பொருளாதாரச் சீரழிவு உண்டாகும்போது குறிப்பாக, 10 நாடுகள் இணைந்து ஓர் ஐக்கியத்தை உருவாக்கி உலகப் பொருளாதாரத்தை சீரமைக்க முயற்சிப்பார்கள். அது இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

தானியேல் 2ம் அதிகாரத்தில் நேபுகாத்நேச்சார் உலக வல்லரசுகளைப் பற்றி கண்ட சிலையின் காலில் 10 விரல்களைப் பற்றிய விளக்கத்தை, தானியேல் 2:33,34,42,44 வசனங்களில் பார்க்கிறோம். பாதங்களில் பாதி இரும்பும், பாதி களிமண்ணுமாயிருந்தது. கைகளால் பெயர்க்கப்படாத கல் உருண்டு வந்து, அந்த சிலையின் பாதங்களில் மோதி அவைகளை நொறுக்கிப்போட்டது. இரும்பு என்பது கம்யூனிசத்தைக் குறிக்கும் என்றும், களிமண் என்பது ஜனநாயகத்தைக் குறிக்கும் என்பது ஒரு விளக்கம். எப்படியும் 10 நாடுகளின் கூட்டமைப்பு இருக்கும். இயேசு கிறிஸ்து வரும்போது அந்த நாடுகளின் கூட்டமைப்பு உடையும்.

தானியேல் 7:7ல் 10 கொம்புகள் என்றும், தானியேல் 7:24ல் 10 ராஜாக்களைக் குறிக்கிறது என்றும் இது விளக்கப்பட்டுள்ளது. வெளிப்படுத்தல் 13:1ல் 10 கொம்புகளைப் பற்றியும், வெளி 17:12ல் அந்த 10 கொம்புகளும், 10 ராஜாக்கள் என்றும் விளக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள ஐரோப்பிய சங்கத்தில் (European Union) 27 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இன்னும் சில சேரும்படி விண்ணப்பித்துள்ளன.

**ஐரோப்பிய சங்கத்தின் சரித்திரம்**

2ம் உலக மகா யுத்தத்திற்குப் பின் இவ்வித ஐக்கியம் அவசியம் என்று ஐரோப்பிய நாடுகளில் சில உணர்ந்தன.

**1951**ல் நிலக்கரி, இரும்பு வியாபாரத்தை கூட்டாகச் செய்ய பிரான்ஸ், ஜெர்மணி கூட்டு சேர்ந்தன. இத்தாலி, பெல்ஜியம், நெதர்லாந்து பின்பு இணைந்தன.

**1957ல்** ரோமில் மேற்கூறிய இரண்டு நாடுகளுடன் ஐரோப்பிய பொருளாதார சங்கம் *European Economic Community* மற்றும் *Customs Union* அத்துடன் *European Atomic Energy Community* ஆகியவையும் இணைந்து ஆலோசனைக் கூட்டம் நடத்தி, கூட்டாக செயல்பட தீர்மானித்தன. இந்தக் கூட்டம் ரோமில் நடந்தபடியினால் இதற்கு *'Treaty of Rome'* (ரோம ஒப்பந்தம்) என்று பெயரிட்டனர். அதுவும் தீர்க்கதரிசன நிறைவேறுதலாகவே இருந்தது. நேபுகாத்நேச்சார் கண்ட சிலையின் கால்கள் ரோம ஆட்சியை குறித்தன. அத்துடன் இணைந்திருந்த பாதம் போல இந்த ரோம ஒப்பந்தம் இருந்தது. இந்த சங்கத்திற்கு European Common Market என்று பெயர் வைத்தனர்.

**1965ல்** இரண்டாம் ரோம ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதன்படி 1) அனைத்து பணிகளின் ஆணையம், 2) ஆலோசனை சங்கம், 3) பாராளுமன்றம், 4) நீதிமன்றம் ஆகியவை இந்த சங்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டன.

**1973ல்** டென்மார்க், அயர்லாந்து, பிரிட்டன் இணைந்தன.

**1980ல்** கிரிஸ், ஸ்பெயின் இணைந்தன.

**1985ல்** இந்த நாடுகளுக்கிடையே பாஸ்போர்ட் முறை ஒழிக்கப்பட்டது. இந்த கூட்டமைப்பிலுள்ள எல்லா நாடுகளுக்கும் போக ஒரு நாட்டின் விசா எடுத்தால் போதும்.

**1986ல்** ஐரோப்பிய சங்கத்திற்கென்று தனி கொடி உருவாக்கப்பட்டது. இந்த ஆண்டில் போர்ச்சுக்கல் இணைந்தது.

**1993 நவம்பர் 1ல்** *European Community* என்று பெயர் வைக்கப்பட்டது.

**1995ல்** ஆஸ்திரியா, ஸ்வீடன், பின்லாந்து இணைந்தன. இந்த ஆண்டில் வெளியுறவுக் கொள்கைகள் தீர்மானிக்கப் பட்டன.

**2001ல்** நீஸ் என்ற இடத்தில் கூடி கிழக்கத்திய நாடுகளில் தகுதி யானவற்றை சேர்த்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

**2004ல்** ஈஸ்டோனியா, ஹங்கேர், லாட்வியா, லித்துவேனியா, போலந்து, ஸ்லோவேக்கியா, ஸ்லோவேனியா, செக்குடியரசு இணைந்தன.

**2007ல்** ருமேனியா, பலகேரியா இணைந்தன.

**2008ல்** மால்டா – செப்பிரஸ் இணைந்தன.

**பொருளாதாரம்**

உலகப் பொருளாதாரத்தில் 31 சதவிகிதம் ஐரோப்பிய சங்கத்தின் பங்கு சீனா, இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

**பொது நாணயம் உருவானவிதம்**

- 1969ல் ஒரே நாணய முறை சிபாரிசு செய்யப்பட்டது.
- 1991ல் இதற்கான செயல்வடிவம் கொடுக்கப்பட்டது.
- 1994, 1997 ஆகிய ஆண்டுகளில் இதற்கான திட்டம் படிப்படியாக முன்னேறி 1.1.2002ல் யூரோ நாணயம் உருவாயிற்று. ஜெர்மானியர் இதை "ஐரோ" என்று அழைக்கின்றனர்.

**ஐரோப்பிய சங்கத்தின் பிரதான நோக்கங்கள்**

ஒரே வியாபார சந்தை – ஒரே வங்கி – ஒரே நீதிமன்றம் – ஒரே கல்வித் திட்டம் – ஒரே குடியுரிமை – ஒரே ராணுவம் – ஒரே எல்லை – ஒரே வெளியுறவுக் கொள்கை – ஒரே தலைவன்.

அந்திகிறிஸ்துவின் வெளிப்படுதல் சீக்கிரம் ஏற்படும். அந்திகிறிஸ்துவின் ஆட்சியில் ஐரோப்பிய சங்கம் முழு உலகத்தின் பொருளாதாரத்தையும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும்.

**ஐரோப்பிய சங்கத்தின் தலைமையகம்**

இதன் தலைமையகம் பிரான்ஸ் நாட்டிலுள்ள ஸ்ட்ராஸ்பர்க் *(Strassburg)* என்ற ஊரில் இருக்கிறது. பாபேல் கோபுர வடிவில் கட்டப்பட்டுள்ளது. தலைகீழாக வைக்கப்பட்ட சிலுவையின் வடிவில் அமைந்துள்ளது. இங்குள்ள பிரதான கம்ப்யூட்டருக்குப் பெயர் "பீஸ்ட்" *(Beast,* மிருகம்) வெளிப்படுத்தலில் அந்திக்கிறிஸ்து மிருகம் என்றுதான் அழைக்கப்படுகிறான் (வெளிப்படுத்தல் 13:1,4).

## 2. உலகமெங்கும் நற்செய்தி அறிவிக்கப்படுகிறது (மத் 24:14)

நிறைவேறிக் கொண்டிருக்கும் அடுத்த முக்கிய தீர்க்கதரிசனம்

உலகமெங்கும் நற்செய்தி அறிவித்தல். இன்று உலகமெங்கும் நற்செய்தி அறிவிக்கப்பட்டு வருகிறது.

- ❖ ஆரம்ப நாட்களில் சுவிசேஷகர்கள், பட்டணங்கள், கிராமங்களுக்குச் சென்று நற்செய்தி அறிவித்து வந்தார்கள். அவ்விதமான ஊழியம் இப்போதும் நடைபெறுகின்றன. மிஷனரிகள் புறப்பட்டுச் சென்று பல்வேறு நாடுகளிலும் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்தார்கள். இன்றும் மிஷனரி ஊழியங்கள் வேகமாய் நடைபெற்று வருகின்றன.
- ❖ பொது இடங்களில் நற்செய்திக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வந்தன, இப்போதும் அது நடைபெறுகிறது.
- ❖ வானொலி, தொலைக்காட்சி மூலம் நற்செய்தி அறிவிக்கப்பட்டு வருகிறது. கேபிள் தொலைக்காட்சிகள் மூலம் 24மணி நேரமும் நற்செய்தி அறிவிக்கப்படுகின்றது. இன்டர்நெட், வெப்சைட் மூலம் உலகமெங்கும் நற்செய்தி பரப்பப்படுகிறது.
- ❖ திருச்சபை வளர்ச்சி ஆய்வின் மூலம் சுமார் இரண்டு லட்சம் பேர் தினமும் இயேசுவை ஏற்றுக்கொள்கிறார்கள் என்று 5 வருடத்திற்கு முன்பு கண்டறியப்பட்டது.

**சீனா:**

உலகிலேயே அதிகமானவர்கள் அனுதினமும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வது கம்யூனிச நாடாகிய சீனாவில்தான் என்பது ஆச்சரியமான உண்மை. தினமும் 50,000 பேர் இயேசுவை ஏற்றுக்கொள்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

**இந்தியா:**

தினமும் 12000 முதல் 15000 வரை இயேசுவை ஏற்றுக்கொள்கிறார்கள் என்று ஓர் ஆய்வு கூறுகிறது.

**தென் அமெரிக்காவில்:**

ஒவ்வொரு மணி நேரமும் 400 முதல் 500 பேர் வரை இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்கிறார்கள். இன்னும் 200 கோடி மக்கள் இயேசுவின் நற்செய்தியை கேள்விப்படவில்லை என்று கூறப்படுகிறது. ஆனால் சீக்கிரமாக யாவரும் நற்செய்தியை கேட்க வேண்டும் என்ற நோக்கில் நற்செய்திப் பணி தீவிரமடைந்துள்ளது.

## 3. அகில உலகிலும் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டு வருகிறார் (அப்போஸ்தலர் 2:17–21)

***"அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள், உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்.***

***ஊழியக்காரர்மேலும், ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்" (யோவேல் 2:28,29).***

யோவேல் கூறிய தீர்க்கதரிசனம் பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறிற்று. மாம்சமான யாவர் மேலும் என்ற சொல் கவனத்திற்குரியது. உலகில் எல்லா நாடுகளிலுமுள்ள தேவனுடைய பிள்ளைகள் பரிசுத்த ஆவியை பெற்று வருகிறார்கள்.

பரிசுத்த ஆவி என்றால் பெந்தெகொஸ்தே சபைப் பிரிவினருக் குரியது என்ற கருத்து மாறி இந்த அனுபவம் யாவருக்குமுரியது என்று விசுவாசித்து, எல்லா சபைப் பிரிவுகளை சார்ந்தவர்களும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று வருகிறார்கள். இன்றுள்ள கணக்குப்படி உலகளவில் சுமார் 80 கோடி மக்கள் (800 மில்லியன்) பரிசுத்த ஆவியை பெற்றுள்ளார்கள் என்று கூறப்படுகிறது.

இன்னும் சில ஆண்டுகளில் உலகிலுள்ள மொத்தக் கிறிஸ்தவர்களில் (200 கோடிப் பேர்) 60 சதவிகிதம் கிறிஸ்தவர்கள் (120 கோடி) பரிசுத்த ஆவியை பெற்றுவிடுவார்கள் என்று நம்பப்படுகிறது.

***"...அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது" அப்போஸ்தலர் 2:38,39***

***"பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது, நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்" அப் 1:8***

## 4. விசுவாசத் துரோகம் நேரிடுகிறது (2தெச 2:3,4)

**அமெரிக்காவில் சில ஆண்டுகளுக்கு முன் நடந்த போதகர் கருத்தரங்கு:**

- 10000 போதகர்கள், சபைத்தலைவர்கள் கலந்துகொண்டனர்.

❖ வேதாகம சத்தியங்களைக் குறித்த பல கேள்விகள் கேட்கப்பட்டன.

❖ 7441 பேர் மட்டுமே பதிலளித்தனர்.

❖ அவர்களின் பதில் அதிர்ச்சி தரக்கூடியதாயிருந்தது.

1) இயேசு கிறிஸ்து சரீரப்பிரகாரமாக உயிர்த்தெழுந்தாரா? என்ற கேள்விக்கு, மெத்தடிஸ் சபை போதகர்களில் 51% பேர், மற்ற சபைப் பிரிவுகளில் சுமார் 30% பேர் இயேசு உயிர்த்தெழவில்லை என்று பதிலளித்தனர்.

2) பரிசுத்த வேதாகமம் பரிசுத்த ஆவியானவரால் எழுதப்படவில்லை என்று, மெத்தடிஸ் சபைப் போதகரில் 82%, பிரஸ்பிட்டேரியன் 81%, லுத்தரன் 57% பதிலளித்தனர்.

3) இயேசுவின் கன்னிப்பிறப்பை மறுதலித்தவர்கள்.

மெத்தடிஸ் 60%, பாப்டிஸ்ட் 44%, பிரஸ்பிட்டேரியன் 49%, லுத்தரன் 19.7%

4) **இங்கிலாந்து - எடின்பரோ பிஷப் ரிச்சர்ட் 1995ல் கூறினார்:** மனிதன் விபச்சாரத்தில் ஈடுபடும் தன்மையுடன் படைக்கப்பட்டுள்ளான். அவனில் இருக்கும் விபச்சார உணர்வு இயற்கையானது. அதை கண்டிக்கக்கூடாது.

5) **இங்கிலாந்து சபை:** இங்கிலாந்து சபை 1995ல் திருமணம் ஆகாமல் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வது தவறல்ல. ஆணோடு ஆண், பெண்ணோடு பெண் பாலுறவில் ஈடுபடுவது தவறல்ல என்று அறிக்கையிட்டது.

**பார்னா என்ற தனிப்பட்ட ஆய்வுக்குழு நடத்தின ஆய்வின் அறிக்கை:**

10000 பேரிடமிருந்து பெற்ற பதில்கள்:

84% நாங்கள் மதக்கோட்பாட்டில் நம்பிக்கையுடையவர்கள். நாங்கள் கிறிஸ்தவர்கள் என்று கூறினர். அவர்களின் கருத்து,

1) திருமணமில்லாமல் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழலாம் – 60%

2) கருச்சிதைவு சரிதான் – 45%

3) விபச்சாரம் சரிதான் – 42%

4) ஆணோடு ஆண், பெண்ணோடு பெண் உறவு கொள்ளலாம் – 30%

5) சூதாட்டம் சரிதான் – 60%

6) நிர்வாணப்படங்களைப் பார்க்கலாம் – 38%

போதகர் ஜாங் மெக்டோவெல் என்ற பிரபல எழுத்தாளர் அரிசோனா மாநிலத்தில் பீனிக்ஸ் (PHENIX) நகரில் நடந்த சதர்ன் பாப்திந்து கன்வென்ஷனில் இவ்விதம் கூறினார். உலகின் பிள்ளைகளின் விசுவாச நிலையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

மனந்திரும்பினவர்கள் என்று தங்களை அழைத்த வாலிபர்களிடம் எடுத்த ஆய்வு:

- 1991ல் 52% சதவிகிதம் பேர் வேதாகமத்தில் முழு சத்தியமும் இல்லை என்று கூறினர்.
- 1994ல் 62% சதவிகிதம் பேர் இந்த கருத்துடையவர்களாக இருந்தனர்.
- 1999ல் 78% சதவிகிதம் பேர் வேதாகமத்தில் முழு சத்தியமும் இல்லை என்று கூறினர்.
- 2002ல் 91% சதவிகிதம் பேர் இந்தக் கருத்துடையவர்களாக இருந்தனர்.

எனவே மனந்திரும்பியுள்ளேன் என்று கூறும் வாலிபர்களில் 91% சதவிகிதம் பேர் வேதாகமத்தில் முழு நம்பிக்கை வைக்கவில்லை.

**அனைத்து கிறிஸ்தவ சபைகளின் இயக்கம் *(Ecumenical Movement)***

அகில உலக சபைகளின் சங்கத்தையும் *(World council of church)* ரோமன் கத்தோலிக்க சபையையும் இணைக்கும் பாலமாக செயல்படும் இந்த இயக்கம் மற்ற மதங்களோடு கிறிஸ்தவத்தையும் இணைக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளது. எம்மதமும் சம்மதம் என்பதே இதன் கோட்பாடு. முழு உலகத்திற்கும் ஒரே மதம் போதும் என்ற கருத்தில் செயல்படுகிறது.

**1993ல் நடந்த அகில உலக சபைகளின் சங்க மாநாடு**

அகில உலக சபைகளின் சங்கம் அமெரிக்காவில், மினிசோட்டா மாநிலத்தில் மினியாப்போலிஸ் நகரில் ஓர் மாநாடு நடத்தியது. இந்த மாநாட்டில் நடந்த கூத்து:

**சோபியா - உலகை சிருஷ்டித்த தேவதை**

நீதிமொழிகள் 1–9 அதிகாரங்கள், மத்தேயு 11, லூக்கா 11:49 1கொரிந்தியர் 1–2 அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள தேவஞானம் (சோபியா) என்பது ஒரு பெண் தேவதை. அவளால்தான் உலகம் சிருஷ்டிக்கப்பட்டது. இயேசுவும், அவளும் சேர்ந்து உலகை சிருஷ்டித்தனர் என்று வேத பண்டிதர்கள் என்று அழைக்கப்பட்ட ஆண்களும், பெண்களும் பேசினர்.

இயேசு வாழ்வு முறையை நமக்குப் போதிக்க வந்தார். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நமது பாவங்களை கழுவும் என்பதும், இயேசுவின் சிலுவைக்குக் கீழ் சென்று இரத்தத்தால் கழுவப்பட வேண்டும் என்பதெல்லாம் கீழ்தரமான கருத்து, ஏற்றுக்கொள்ள முடியாதது என்று இங்கே பேசப்பட்டது.

**ஐக்கிய மதங்கள் *(United Religions)***

1997 ஜூன் 23ல் அமெரிக்காவிலுள்ள சான்பிரான்சிஸ்கோ ஸ்டேன்போர்ட் பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ, கத்தோலிக்க, புத்தமத, இஸ்லாம் மத, யூத மத, சீக்கிய மத தலைவர்கள் இந்து மற்றும் பிற மதத் தலைவர்களாக சுமார் 200 பேர் கூடினர். இவர்கள் கூடினதின் நோக்கம் ஐக்கிய மத அமைப்பை உருவாக்குவதே. அந்தி கிறிஸ்துவின் திட்டம் இதுதான். ஒரே உலக ஆளுகை, ஒரே உலக நாணயம், ஒரே உலக மதம்.

## 5. பூமியதிர்ச்சிகள்

மத்தேயு 24:7ல் பூமியதிர்ச்சிகள் பல இடங்களில் உண்டாகும் என்று முன்னுரைக்கப்பட்டது. கீழேயுள்ள அட்டவணையைப் பார்த்தால் இது தெளிவாக விளங்கும். நாம் வாழும் இந்த 21ம் நூற்றாண்டில் அடிக்கடி பூமியதிர்ச்சிகளைப் பற்றிய செய்திகளை வாசிக்கின்றோம்.

## பூமியதிர்ச்சிகளில் குறிப்பிடத்தக்கவை

| ஆண்டு | இடம் | ரிக்டர் அளவு | பலியானவர்கள் |
|---|---|---|---|
| 856 | கொரிந்த், கிரீஸ் | – | 45,000 |
| 1556 | சென்சி, சீனா | – | 830,000 |
| 1737 | கல்கத்தா | – | 300,000 |
| 1755 | லிஸ்பான் | – | 60,000 |
| 1883 | டுட்ச் இன்டிஸ் | – | 36,000 |
| 1902 | மர்டினிகியூ | – | 40,000 |
| 1906 | சான்பிரான்சிஸ்கோ | 8.3 | 700 |
| 1908 | மெசினா, இத்தாலி | 7.5 | 100,000 |
| 1915 | இத்தாலி | – | 29,900 |
| 1920 | சீனா | – | 180,000 |
| 1923 | ஜப்பான் | 8.3 | 143,000 |
| 1927 | சீனா | 8.3 | 200,000 |
| 1932 | சீனா | – | 70,000 |
| 1933 | ஜப்பான் | 8.1 | 3,064 |
| 1934 | இந்தியா | – | 10,000 |
| 1935 | இந்தியா | 7.6 | 30,000 |
| 1939 | சிலி | – | 30,000 |
| 1939 | துருக்கி | 8.0 | 30,000 |
| 1944 | ஜப்பான் | 7.9 | 1,000 |
| 1946 | ஜப்பான் | 8.0 | 1,330 |
| 1948 | ஜப்பான் | 7.1 | 3,796 |
| 1949 | எகுடோர் | – | 6,000 |
| 1960 | சிலி | – | 5,700 |
| 1960 | மொராக்கோ | – | 12,000 |
| 1962 | ஈரான் | – | 10,000 |

| | | | |
|---|---|---|---|
| 1964 | அலாஸ்கா | 8.4 | 114 |
| 1968 | ஈரான் | – | 11,500 |
| 1970 | பெரு | 7.8 | 66,700 |
| 1972 | ஈரான் | 7.9 | 5,000 |
| 1972 | நிகாரகுவா | – | 10,000 |
| 1974 | பாகிஸ்தான் | – | 5,200 |
| 1976 | குவாத்மலா | – | 23,000 |
| 1976 | சீனா | 8.0 | 25,5,00 |
| 1976 | பிலிப்பைன்ஸ் | – | 3,300 |
| 1976 | துருக்கி | – | 3,700 |
| 1978 | ஈரான் | – | 25,000 |
| 1980 | அல்ஜீரியா | 7.5 | 20,000 |
| 1980 | இத்தாலி | 6.8 | 3,000 |
| 1987 | ஜப்பான் | 6.6 | 60,000homes |
| 1988 | அர்மேனியா | – | 25,000 |
| 1990 | ஈரான் | – | 40,000 |
| 1990 | பிலிப்பைன்ஸ் | – | 1,641 |
| 1991 | ஆப்கானிஸ்தான் | – | 1,500 |
| 1991 | இந்தியா | – | 1,500 |
| 1992 | இந்தோனேசியா | – | 2,000 |
| 1992 | எகிப்து | – | 552 |
| 1992 | துருக்கி | – | 653 |
| 1993 | இந்தியா | 6.4 | 30,000 |
| 1994 | கொலம்பியா | – | 600 |
| 1995 | ஜப்பான் (கோஃபி) | 6.9 | 5,500 |
| 1995 | ரஷ்யா | – | 1,841 |
| 1997 | ஈரான் | – | 2,000 |

| | | | |
|---|---|---|---|
| 1997 | ஈரான் | – | 1,100 |
| 1998 | ஆப்கானிஸ்தான் | 6.9 | 5,000 |
| 1998 | ஆப்கானிஸ்தான் | – | 3,500 |
| 1998 | பாப்போ நியூ கென்யா | – | 2,123 |
| 1999 | கொலம்பியா | 6 | 450 |
| 1999 | இந்தியா | 6.8 | 110 |
| 1999 | துருக்கி | 7.4 | 40,000exceeded |
| 2001 | குஜராத், இந்தியா | 7.9 | 30,000 |
| 2004 | சுமுத்ரா,இந்தோனேசியா | 9.1 | 2,28,000 |
| 2005 | பாகிஸ்தான் | 7.6 | 10,0000 |
| 2008 | பாகிஸ்தான் | 7.6 | 80,360 |
| 2008 | சீனா | 7.9 | 87,587 |
| 2010 | ஹெய்ட்டி | 7.0 | 2,00,000 |

**2011 மார்ச் - ஜப்பான்**

2011 மார்ச் 11ம் தேதி ரிக்டர் அளவில் 9.0 என்ற பயங்கர நிலையில் ஜப்பானில் பூகம்பம் ஏற்பட்டது. சுனாமி 33 அடி உயரத்திற்கு கடல் அலையாக எழும்பி சின்னாபின்னமாக்கியது. ஊருக்குள்ளே 11 கிலோ மீட்டர் தூரத்திற்கு தண்ணீர் புரண்டு வந்தது. டோக்கியோவிலிருந்து சுமார் 380 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள இடங்களை சேதப்படுத்தியது. 800 கிலோ மீட்டர் வேகத்தில் வெள்ளம் பாய்ந்து ஓடியது. சுமார் 28,000 மக்கள் மாண்டனர். 4,50,000 பேர் வீடு இழந்தனர்.

**துருக்கி:** 2011ல் துருக்கியில் இரண்டு தடவை பூமியதிர்ச்சி ஏற்பட்டு பெரிய அழிவை கொண்டுவந்தது.

**6.** அறிவு பெருக்கம் (தானியேல் 12:4)

***தானியேலாகிய நீயோவென்றால், முடிவுகாலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து, இந்தப் புஸ்தகத்தை முத்திரை போடு. அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான்.***
*தானியேல் 12:4*

நாம் வாழும் இந்தக் காலம் அறிவு மிகவும் பெருகி வருகின்ற காலம். எல்லாத் துறைகளிலும் பிரமிக்கத்தக்க அளவில் அறிவு பெருகி வருகிறது.

**போக்குவரத்து**

ஆதாம் காலம் முதல் சுமார் 6,000 ஆண்டுகளாக மனிதன் வேகமாக பயணம் செய்ய பயன்படுத்தியது குதிரைதான். சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்புதான் மோட்டார் வாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகாய விமானங்கள் 20ம் நூற்றாண்டின் மிக வேக வாகனமாகும். வெளிநாடுகளுக்கு செல்ல ஆகாய விமானங்கள் மணிக்கு சுமார் 1000 கிலோமீட்டர் வேகத்தில் பறக்கின்றன. சூப்பர்ஸானிக் விமானங்கள் மணிக்கு சுமார் 2200 கிலோ மீட்டர் வேகத்தில் பறக்கின்றன.

வெளிகோளங்களுக்குச் செல்ல பயன்படுத்தப்படும் வாகனத்தை *(Space Shuttle)* மக்கள் பயணத்திற்கு பயன்படுத்த முடியுமா என்ற ஆராய்ச்சி வேகமாக நடந்து வருகிறது. இந்த முயற்சி வெற்றியடைந்தால் உலகில் எந்த நாட்டிற்கும் சுமார் 2 மணிநேரத்தில் போய் சேர்ந்துவிடலாம்.

**தகவல் தொடர்பு**

ஆதிநாட்களில் தோல் சுருட்களில் எழுதி, செய்திகளை ஆட்கள் மூலம் அனுப்பி வந்தனர். செய்திகளை எடுத்துச் செல்ல புத்தகங்களை பயன்படுத்தினர். கடந்த நூற்றாண்டின் நவீன தகவல் தொடர்பு மிகப்பெரிய வளர்ச்சியடைந்தது. கடிதங்கள் மூலம் தகவல்கள் அனுப்பப்பட்டு வந்தன. டெலிபோன் கண்டுபிடிக்கப்பட்டது. டெலக்கிராம் புழக்கத்திற்கு வந்தது. பேக்ஸ் மிஷின் வந்தது. தற்போது செல்போன் அதிவேகமாக பரவி வருகிறது. உலகிலுள்ள எந்த நபருடனும் நொடிப்பொழுதில் தொடர்பு கொள்ளும் நிலை வந்துவிட்டது. ஒரு செல்போனில் பல சிம்கார்டுகளைப் பொருத்திவிட முடிகிறது.

**மீடியா**

தொலைக்காட்சிகள் பெரிதும் வளர்ந்துவிட்டன. கேபிள் டி.வி. மூலம் உலகில் எந்தப் பகுதியில் என்ன நடந்தாலும், உடனே அதை தொலைக்காட்சி மூலம் உடனே பார்க்கின்றோம்.

**இசைத்தட்டுகள்-மெமரிகார்டு**

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு பாடல்களை கிராம போன் ரிக்கார்டுகளில் பதிவு செய்தார்கள். 5 நிமிட பாடலை சாப்பிடும் பிளேட் அளவிலுள்ள தட்டுகளில் பதிந்தார்கள். பின்பு ***L.P.***ரிக்கார்ட் வந்தது. அதில் 4 பாடல்களை பதிவு செய்தார்கள். ஆடியோ கேசட் வந்தபோது அது மக்களை விரைவாகக் கவர்ந்தது. பின்பு வீடியோ கேசட் வந்து மக்களை அதிசயிக்க வைத்தது. ***VCD, DVD,*** டிவிக்ஸ்***(Divix)*** மெமரிகார்ட் என்று வந்து மக்களை பிரமிக்க வைத்துள்ளன. நூற்றுக்கணக்கான பாடல்களை ஒரு சிறிய மெமரிகார்டில் பதிவு செய்துவிட முடிகிறது.

**கேமராக்கள்**

பிலிம் போட்டு படம் எடுத்த காலம் மலையேறிவிட்டது. இப்போது படங்களை மெமரிகார்டுகளில் பதிவு செய்ய முடிகிறது.

**கம்ப்யூட்டர்**

கம்ப்யூட்டர் என்பது ஒரு பெரிய உலகத்தையே உள்ளடக்கியுள்ளது. இன்டர்நெட் மூலம் எந்த தகவல்களையும் உடனுக்குடன் அறிந்து கொள்ள முடிகிறது. புஸ்தங்கள் தேவையில்லை என்ற நிலை உருவாகியுள்ளது. ஐ.பேட், ஐ.போன் போன்றவை பிரமிக்கத்தக்க அளவில் முன்னேற்றமடைந்துள்ளன.

**மருத்துவக்கலை**

ஆபரேஷன் பண்ணாமலேயே உடலுக்குள்ளிருக்கும் நோய்களை லேசர் பீம் மூலம் நவீனக்கருவிகளைப் பயன்படுத்தி சிகிச்சை செய்துவிடுகிறார்கள்.

இவ்விதமாக எல்லாத் துறைகளிலும் அறிவு பெருகிவிட்டது.

## 7. நோவா காலம் போல நடக்கும் காரியங்கள்

***"மனுஷருடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டு,***

***தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார், அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது" ஆதியாகமம் 6:5,6***

***"நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும். எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும், பெண் கொடுத்தும், ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள். அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்" மத்தேயு 24:37–39***

நோவாவின் நாட்களில் முழு உலகமுமே சீர்கெட்டநிலையில் இருந்தது. ஜனங்கள் உணர்வில்லாத வாழ்க்கை வாழ்ந்தனர். ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள். இன்று எங்கு பார்த்தாலும் ஹோட்டல்கள். பசிக்காக புசிக்கின்றவர்களைவிட பொழுதுபோக்கிற்காக சாப்பிடும் கூட்டம்தான் அதிகம். பெருந்தீனிக்காரர்களாய் மாறிவிட்டனர். எங்கு பார்த்தாலும் குடி, வெறி. கோடி கோடியாய் குடிக்கு செலவு பண்ணப்படுகிறது.

**பெண் கொண்டார்கள், பெண் கொடுத்தார்கள்**

திருமணங்களுக்காக கோடி கோடியாய் செலவு செய்கிறார்கள். ஆடம்பரமான திருமணங்கள் பெருகி வருகின்றன. பல நாட்கள் விருந்து நடக்கின்றன. கோடி கோடியாய் சீதனங்கள்.

இன்று நாளுக்கு நாள் உலகத்தில் அக்கிரமம் பெருகிக் கொண்டே வருகிறது. நோவா காலத்தில் முழு உலகத்தையும் தேவன் தண்ணீரால் அழித்தார். இனி முழு உலகமும் அணு ஆயுதங்களாய் உருவாகும். அக்கினியினால் அழிக்கப்படும்.

இன்று உலகில் எல்லா நாடுகளிலும் போராட்டங்களும், லஞ்சமும், ஊழலும் தலைவிரித்தாடுகின்றன. இந்தியாவும், அரசியல்வாதிகளின் ஊழலால் பயங்கர நிலையை அடைந்துள்ளது. எல்லாத் துறைகளிலும் எல்லா நிலைகளிலும் லஞ்சம் இருக்கிறது. லஞ்சம் கொடுக்காமல் வேலை நடக்காது. அரசியல்வாதிகளின் ஊழல் பணமெல்லாம் சுவிஸ் போன்ற நாட்டு வங்கிகளில் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்றங்கள் செயல்படாமல் ஸ்தம்பித்து நிற்கின்றன. நாட்டின் முன்னேற்றத் திட்டங்களை செயல்படுத்த, ஆலோசிக்க வேண்டிய

பாராளுமன்றம் ஊழலை ஒழிக்க லோக்பால் போன்ற கடினமான சட்டங்களை அமுல்படுத்த போராடுகிறது. இதில் எல்லாக் கட்சிகளுக்குமே பங்குண்டு என கூறப்படுகிறது. தேசத்தின் பொருளாதாரத்தையே சீர்குலைக்கும் அளவிற்கு ஊழலும், லஞ்சமும் கட்டுப்பாட்டை மீறிவிட்டது.

## 8. பஞ்சம், (பட்டினி) (மத்தேயு 24:7)

கடந்த காலங்களில் ஏற்பட்ட பஞ்சங்களைவிட இன்றைய நாட்களில் பஞ்சம் பெருகி வருகிறது. உலக அளவில் ஏற்பட்ட பஞ்சங்களின் அட்டவணையை சுருக்கமாய் பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| 15ம் நூற்றாண்டில் | – | 6 பஞ்சங்கள் |
| 16ம் நூற்றாண்டில் | – | 10 பஞ்சங்கள் |
| 17ம் நூற்றாண்டில் | – | 24 பஞ்சங்கள் |
| 18ம் நூற்றாண்டில் | – | 28 பஞ்சங்கள் |
| 19ம் நூற்றாண்டில் | – | 30 பஞ்சங்கள் |
| 20ம் நூற்றாண்டில் | – | 44 பஞ்சங்கள் |

உலக மக்களில் மூன்றில் ஒரு பங்கு நன்கு சாப்பிடுகிறார்கள், மூன்றில் ஒரு பங்கு போதிய உணவில்லாமல் இருக்கிறார்கள், மூன்றில் ஒரு பங்கு பட்டினியாயிருக்கிறார்கள் என்று உலக ஆரோக்கிய நிறுவனம் கூறுகிறது.

**20ம் நூற்றாண்டில் ஏற்பட்ட பஞ்சத்தால் செத்தவர்கள்**

ஒவ்வொரு 3.6 வினாடியிலும் பட்டினியால் ஒருவர் எங்கோ மரித்துக் கொண்டிருக்கிறார்.

- ❖ 1921ல் ரஷ்யாவில் ஏற்பட்ட பஞ்சத்தால் 50 இலட்சம் பேர் மடிந்தனர்.
- ❖ 1928, 1929 ஆண்டுகளில் சீனாவில் ஏற்பட்ட பஞ்சத்தால் 30 இலட்சம் பேர் இறந்தனர்.
- ❖ 1932–1933 ஆண்டுகளில் உக்ரேன் நாட்டில் நடந்த பஞ்சத்தால் 1 கோடிப் பேர் மாண்டனர்.
- ❖ 1932 – 1933 ஆண்டுகளில் கசகஸ்தான் நாட்டில் பஞ்சத்தால் 13 இலட்சம் பேர் மரித்தனர்.

- ❖ 1936ல் சீனாவில் ஏற்பட்ட பஞ்சத்தால் 50 இலட்சம் பேர் மடிந்தனர்.
- ❖ 1942–1943 ஆண்டுகளில் சீனாவில் 10 இலட்சம் பேர் செத்தனர்.
- ❖ 1946–1947 ஆண்டுகளில் சோவியத் யூனியனில் ஏற்பட்ட பஞ்சத்தால் 10 இலட்சம் பேர் மாண்டனர்.
- ❖ 1959–1961 ஆண்டுகளில் சீனாவில் ஏற்பட்ட பஞ்சத்தால் 3 கோடியே 60 இலட்சம் பேர் மரித்தனர்.
- ❖ 1932–1961 ஆண்டுகளில் இன்னும் பல நாடுகளில் பஞ்சத்தால் மரித்தவர்களின் எண்ணிக்கை 6 கோடியே 20 இலட்சம் பேர்.

2011ம் ஆண்டு கணக்குப்படி உலகில் 92.5 கோடி மக்கள் பட்டினியில் வாடுகிறார்கள். இதில் ஆசியா கண்டத்தில் 58 கோடி, ஆப்பிரிக்கா கண்டத்தில் 28 கோடி, லத்தீன் அமெரிக்கா நாடுகளில் 6.5 கோடிப் பேர். இன்று அமெரிக்கா மட்டும் ஒரு ஆண்டிற்கு 13 பில்லியன் டாலர் (65000 கோடி ரூபாய்) வாசனைத் திரவியங்களுக்காக செலவு செய்கிறது. இந்தப் பணத்திற்கு சாப்பாடு வாங்கினால் உலகில் ஒருவரும் பட்டினியாயிருக்க அவசியமிராது.

உலகில் பட்டினியாய் வாழும் மக்களில் பாதிப் பேர் இந்தியர். ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் வைத்துள்ள பணக்காரர்கள் உலகில் 358 பேர், உலகப் பொருளாதாரத்தின் 45 சதவிகித பணம் இந்த 358 பேரிடம் உள்ளது. அதே சமயம் உலகிலுள்ள 300 கோடிப் பேர் தினமும் 100 ரூபாய்க்கு குறைவாகவே சம்பாதிக்கின்றனர். அமெரிக்காவிலேயே 8 பிள்ளைக்கு 1 பிள்ளை இரவு சாப்பாடு இல்லாமல் படுக்கைக்குச் செல்கிறது.

## 9. கொள்ளைநோய்கள் (லூக்கா 21:11)

கடந்த நூற்றாண்டுகளில் கேள்விப்பட்டிராத நோய்களெல்லாம் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன.

### புற்றுநோய்

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஒவ்வொரு நாடுகளிலும் ஏராளமானவர்கள் இருக்கின்றனர்.

**எய்ட்ஸ் நோய்**

தகாத உறவுகள் மூலம் அறிமுகமான இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் கோடான கோடிப் பேர். இன்றுவரை இந்த நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. அமெரிக்காவில் மட்டும் சுமார் 60 இலட்சம் பேர் எய்ட்ஸ் வியாதியால் பாதிக்கப்பட்டுள்ளனர். உலகிலுள்ள மக்களில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் 3.4 கோடிப் பேர். எய்ட்ஸ் நோயுடன் வாழும் பெண்கள் 2 கோடிப் பேர்.

**இந்தியா:** இந்தியாவில் 1986ல் எய்ட்ஸ் நோயுள்ளவர் ஒருவரும் இல்லாமலிருந்தது. இப்போது இந்தியாவில் 2 கோடிப் பேர் இந்த நோயுள்ளவர்கள். சென்னையில்தான் முதன்முதலாக இந்தியாவில் எய்ட்ஸ் நோயுள்ளவர் கண்டுபிடிக்கப்பட்டார். ஆந்திராவில் விபச்சாரம் அதிகம். அங்கேதான் எய்ட்ஸ் நோயும் அதிகம். இன்று இந்தியாவில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக இருக்கும் மாநிலங்கள், ஆந்திரா, கர்நாடகா, கோவா, மகாராஷ்ட்ரா, தமிழ்நாடு, மணிப்பூர், மிசோராம், மேகாலயா, பஞ்சாப்.

**பன்றிக் காய்ச்சல்**

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஓர் வியாதி பன்றிக் காய்ச்சல் (எந்த பன்றியும் இந்த காய்ச்சலுடன் அலைவதாக தெரியவில்லை). நாளுக்கு நாள் புதிய புதிய வியாதிகள் பரவி மனிதர்களை சாவுக்கு நேராக நடத்துகின்றன.

## 10. மனிதத் தன்மையற்ற மக்கள் கூட்டம் பெருகும்

***"மேலும் கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர் களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்க மில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப் பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும்,***

***தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து, அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்". 2தீமோத்தேயு 3:1–5***

கடைசி காலத்தில் அன்பற்ற, பண்பற்ற தன்மையுள்ளவர்கள் பெருகுவார்கள் என்பதின் நீண்ட பட்டியல் இங்கே கூறப்பட்டுள்ளது. இந்த பட்டியலுள்ளதை விளக்க ஆரம்பித்தால், அதுவே ஒரு புத்தகமாக மாறிவிடும். தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமென்ற எண்ணமே இல்லாமல், எனக்கு இது பிரியம், ஆகவே இப்படி செய்கிறேன் என்ற மனப்போக்கு பெருகி வருகிறது. பணமே கடவுளாக மாறிவிட்டது. மிருகங்கள் கடவுளைத் தேடுவதில்லை. மனிதனுக்குத்தான் கடவுளைப் பற்றிய அறிவு இருக்கிறது. இவனும் தேவனைத் தேடுவதை விட்டுவிட்டு பணத்தைத் தேடும்போது இவனுக்கும், மிருகத்திற்கும் வித்தியாசமில்லை.

பெற்றோரை மதிக்காத பிள்ளைகள் கூட்டத்தை எங்கும் பார்க்கலாம். ஆயுசு நாள் நீடிக்க பெற்றோரை கனம்பண்ண கட்டளை கொடுத்துள்ளார் தேவன். இன்று பெற்றோருக்குக் கீழ்ப்படியாமல் கொஞ்ச வயதிலேயே மரிக்கிறார்கள். என்ன உதவி செய்தாலும், நன்றியில்லாத கூட்டம் பெருகிறது. என்னத்தைச் செய்துவிட்டார் என்று குறைகூறுவோர் ஏராளம். சுபாவ அன்பில்லாதவர்கள் ஏராளம். மிருகங்கள் கூட தன் குட்டிகளை சரியாக பராமரிக்கின்றன. பிள்ளைகள் மேல் அன்பில்லாத பெற்றோர். மனைவியை நேசிக்காத கணவன், கணவனை நேசிக்காத மனைவி எங்கும் காணலாம். விவாகரத்துக்கள் பெருக இதுவும் ஒரு காரணம்.

தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு போலியான பக்திமானாய் நடிக்கும் கூட்டம் எல்லா மதங்களிலும் உண்டு. கிறிஸ்தவரும் இதற்கு விதிவிலக்கல்ல. சபைகளின் ஆராதனைகளில் பக்தியுள்ளவர்கள் போல கலந்து கொண்டு, சகல பாவங்களையும் செய்யும் ஆண் பெண்கள் எல்லா சபைகளிலும் கணிசமான அளவு வளர்ந்துவிட்டார்கள். உலகில் காணப்படும் பொருளாசை, விபச்சாரம், வேசித்தனம், குடி, வெறி, லஞ்சம், அடிதடி, விவாகரத்து அத்தனையும் சபையாரிடம் காணப்படுவது எத்தனை வேதனை.

## பாகம்: 3

# இனி நிறைவேண்டிய தீர்க்கதரிசனங்கள்

இதுவரையிலும் ஏற்கனவே நிறைவேறிவிட்ட தீர்க்கதரிசனங்களையும், நிறைவேறிக் கொண்டிருக்கும் தீர்க்கதரிசனங்களையும் பார்த்தோம். இந்தப் பகுதியில் இனி நிறைவேற வேண்டிய தீர்க்கதரிசனங்களைப் பார்ப்போம். இவை குறுகிய கால அளவிற்குள்ளாகவே நிறைவேறிவிடக் கூடியவை என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

## 1. மூன்றாம் உலக மகா யுத்தம்

முதலாம் உலக மகாயுத்தம் 1914 ஆகஸ்ட் 4ல் தொடங்கி, 1918 நவம்பர் 11ம் தேதி 11மணிக்கு முடிந்தது. 33 நாடுகள் இதில் பங்குபெற்றன. அன்றைய நாட்களில் 33 நாடுகள் என்பது பெரிய எண்ணிக்கை. எனவே இது உலக மகாயுத்தம் என்று அழைக்கப்பட்டது. 4 கோடி மக்கள் மாண்டனர். ஜெர்மனிக்கும் – இங்கிலாந்திற்கும் இடையே ஆரம்பித்த யுத்தம் இது.

2ம் உலக மகா யுத்தம் 1939 செப்டம்பர் 3ல் ஆரம்பித்து, 1945 செப்டம்பர் 2ம் தேதியுடன் முடிந்தது. 61 நாடுகள் இதில் ஈடுபட்டன. உயிரிழந்தோர் 5.48கோடி மக்கள். இதில் 103 கோடிப் பேர் சிறுகுழந்தைகள். ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி நாட்டு நாடுகளுக்கும், இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா நாடுகளின் கூட்டணிக்கும் ஏற்பட்ட யுத்தமிது.

இந்த கடைசி நாட்களில் மூன்றாம் உலகப்போர் ஒன்று நடைபெறும் என்று நம்பப்படுகிறது.

### மூன்றாம் உலக மகா யுத்தம்:

இது ரஷ்யாவிற்கும் இஸ்ரவேலுக்கும் இடையே நடைபெறும் யுத்தமாக இருக்கும் என்று எசேக்கியேல் 38,39 அதிகாரங்கள் அடிப்படையில் கூறப்படுகிறது.

## மூன்றாம் உலக மகாயுத்தம் வர குறிப்பாக மூன்று காரணங்கள் இருக்கும்.

### அ] எருசலேமுக்காக இந்த யுத்தம் இருக்கும்

எருசலேமை சர்வதேச பிரதேசமாக்குவது என்ற ஒரு திட்டம் இருக்கிறது. யோவேல் 3:1,2 வசனங்களில் என் தேசத்தை பங்கிட்டுக் கொண்டதினிமித்தம் அவர்களோடே வழக்காடுவேன் என்று கர்த்தர் கூறுகிறார்.

### இஸ்ரவேல் மூன்று தடவை பிரிக்கப்பட்டது

**1) முதல் உலக மகாயுத்தம் முடிந்தவுடன் 1918ல், பாலஸ்தீனா 3 பகுதியாக பிரிக்கப்பட்டது.**

*i)* ஒரு பகுதி அரேபியருக்கு.

*ii)* மற்றொன்று ஜோர்டான் நாட்டுடன் இணைக்கும் பழைய எருசலேம் பகுதி.

*iii)* மேற்குப் பகுதி யூதருக்கு என்று பிரிக்கப்பட்டது. ஆனால் இது முழுமையாக நிறைவேறவில்லை.

**2) ஐக்கிய நாடு சபையின் 181 எண் தீர்மானம்**

1947 நவம்பர் 29ல் ஐ.நா. சபை 181 எண் தீர்மானத்தை நிறைவேற்றிற்று. மேற்கு பாலஸ்தீனாவிலுள்ள எருசலேம் பட்டணமும் சுற்றியுள்ள கிராமங்களும், பட்டணங்களும் (பெத்லகேம் உட்பட) சர்வதேச பிரதேசமாக இருக்கும் (Corpus separator) இந்த தீர்மானத்தை ஆதரித்து 33 நாடுகளும், எதிர்த்து 13 நாடுகளும் ஓட்டளித்தன. 10 நாடுகள் ஓட்டெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. பாலஸ்தீனியரும், அரேபியரும் இந்த தீர்மானத்தை எதிர்த்தனர். யூதருக்கு எந்தப் பகுதியும் கொடுக்கப்படக் கூடாது என்பதே அவர்கள் வாதம்.

**3) 1948 மே 14**

அரேபியருக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில், பாலஸ்தீனா என்ற நாட்டை நிறுவ அரேபியரும், பாலஸ்தீனியரும் மறுத்துவிட்டனர். ஆனால் யூதர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பகுதியை இஸ்ரேல் நாடு என்று பிரகடனப்படுத்தினர். அரேபியர் உடனே யூதர்களுடன் சண்டையிட்டனர். பாலஸ்தீனியருக்குக் கொடுக்கப்பட்ட மேற்குக் கரை பகுதியை பாலஸ்தீனியர் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதால் அந்தப்

பகுதி ஜோர்டானுடன் இணைக்கப்பட்டது. ஐ.நா சபை எருசலேமில் மேற்குப் பகுதியை இஸ்ரவேலருக்கும் தேவாலயம் இருந்த இடத்தை ஜோர்டானுக்கும் பிரித்துக் கொடுத்தது.

1967ல் நடந்த 6 நாள் யுத்தத்தில் பழைய எருசலேம் இஸ்ரவேல் வசமாயிற்று. முழுப் பட்டணமும் இஸ்ரவேலின் கட்டுப்பாட்டிற்குள் வந்து இஸ்ரவேலின் தலைநகரமாக விளங்குகிறது.

1948ல் ஐ.நா பிரித்தவிதத்தை ஏற்றுக்கொள்ளாத பாலஸ்தீனியர் 1999ல் ஐ.நா தீர்மானம் 181–ஐ அமல்படுத்த வற்புறுத்தினர். கிழக்கு எருசலேம் பாலஸ்தீனியர்களின் தலைநகரமாக அறிவிக்க வேண்டும் என்று குரல் எழுப்பினர். ஆனால் இதை இஸ்ரவேல் நாட்டிலுள்ள அத்தனை கட்சிகளும் எதிர்த்தன.

***"யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணுங்கள், பராக்கிரமசாலிகள் எழும்புங்கள்,...... உங்கள் மண்வெட்டிகளை பட்டயங்களாக... அடியுங்கள்" (யோவேல் 3:9,10)***

எனவே மூன்றாம் உலக மகா யுத்தம் எருசலேமுக்காக இருக்கும்.

### ஆ. உலக நாடுகளை கட்டுப்படுத்தி அந்தி கிறிஸ்துவின் ஆட்சி வர இந்த யுத்தம் நடக்கும்

புதிய உலக ஆளுகைக்கு ஐரோப்பிய சங்க நாடுகள் ஆதரவு கொடுக்கும். இதன் தலைவனாக இருக்கப் போகும் அந்திக்கிறிஸ்து (மிருகம்) என்ற அரசியல் நிபுணன் முழு உலகையும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர இந்த யுத்தம் உதவி செய்யும்.

### இ. உலக ஜனத்தொகையை குறைக்க இந்த யுத்தம் நடக்கும்

புதிய உலக கொள்கையாளர் சொல்வது என்னவென்றால் (New World Order) இந்த உலகத்தில் தேவைக்கு மிஞ்சின ஜனப்பெருக்கம் வந்துவிட்டது. உணவு, தண்ணீர், சக்தி, போதிய அளவு இல்லை. கொலை, குற்றங்கள், ஏழ்மை நிலை, சூழ்நிலை சீர்கேடு, யுத்தங்கள், வியாதிகள், கடன்கள் பெருகிவிட்டன. இதற்கெல்லாம் மக்கள் பெருக்கம் தான் காரணம். எனவே ஜனத்தொகையை குறைக்க குடும்பக்கட்டுப்பாடு, கருச்சிதைவு, தேவையற்ற கருத்தரிப்பு தடுப்பு அதிகமாக அமுல் படுத்தப்பட வேண்டும். யுத்தங்களை ஊக்குவித்து மக்கள் அழிவிற்கு வழி அமைக்க வேண்டும். இதன் மூலமே மக்கள் தொகை குறையும்.

**ராபர்ட் மெக்நாமரா (Robert Menamara)**

இவர் உலக வங்கியின் முன்னாள் தலைவர், இவர் சொன்னது: "மக்கள் எண்ணிக்கையை குறைக்க, 1) குடும்பக்கட்டுப்பாடு, 2) யுத்தம் இவை மூலமாக வழி ஏற்படும்".

**ரிச்சர்ட் ஆட்டிஸ்கர் (Richard Ottinger)**

ஜனநாயக காங்கிரஸ்மென் – நியூயார்க்கில் ஓர் நேர்காணலில் கூறியது: "ஜனப்பெருக்கம் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் கொடுக்கிறது. உணவு பற்றாக்குறை ஏற்படுகிறது. யார் வாழ வேண்டும், யார் சாக வேண்டும் என்று கடவுள் போல நாம் தீர்மானம் எடுத்து, ஏழை நாடுகளுக்கு உணவு வழங்க வேண்டும். எல்லாருக்கும் நம்மால் உணவு கொடுக்க முடியாது. மக்கள் குறைப்பு மிக அவசியமானது"

**வில்லியம் பேடோக் (William Paddock)**

3 நிர்வாக சங்கங்களுக்கு ஆலோசகர் சொன்னது, "தொடர்வான கலகமும், சண்டையும் நடப்பது மக்கள் குறைப்பிற்கு மிக அவசியம்''.

**ஹார்லன் கிளீவ்லேண்ட் (Harlan Cleveland)**

ஒரு ஆய்வுக் குழுவின் தலைவர் சொன்னது, "பொருளாதாரத்தில் வளர்ந்து வரும் நாடுகளால் பிரச்சனைகள் உருவாகின்றன. இந்த நாடுகளில் மக்கள் குறைப்பிற்கு வழியில்லை. உள்நாட்டு குழப்பங்களும், கொலைகளும், தீவிரவாதங்களும், தொடர்ந்தால்தான் மக்கள் குறைவார்கள்"

**விஞ்ஞானிகள் சொல்வது:**

பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் தொடர்ந்தால்தான் தேவையற்ற மக்கள் கூட்டம் அழிந்து, தேசங்களுக்கு நன்மை கிடைக்கும் என்று பல விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

உலகம் எவ்வளவு பயங்கர தத்துவத்தில் போகிறதென்று தெரிகிறதா?

**எசேக்கியேல் 38,39 அதிகாரங்களைப் பார்ப்போம்:**

38:1 மேசேக், தூபால் ஜாதிகளின் தலைமை அதிபதியாகிய மாகோகு தேசத்தானான கோகுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் உரை

**கோகு:** இவன் அதிபதி. வெளிப்படுத்தல் 20:8லும் இந்தப் பெயர் வருகிறது.

**மாகோகு:** ஆதியாகமம் 10:2லும், 1நாளாகமம் 1:5லும் யாப்பேத்தின் மகன் மாகோகு என்று வருகிறது.

நோவாவின் மகனான யாப்பேத்தின் குமாரர் மாகோகு, தூபால், மேசேக்கு என்று கூறப்பட்டுள்ளது. மாகோகு என்பது கோகின் நாடு என்று பொருள் கொள்ளலாம்.

சில மொழிபெயர்ப்புக்களில் "ரோஸ்" அதிபதி *(Prince of Rosh)* என்று வருகிறது. தமிழில் இந்த வார்த்தை இல்லை. ரோஸ் என்பது ரஷ்யாவைக் குறிக்கும் என்று பலர் விளக்கமளித்துள்ளனர்.

யாப்பேத்தின் குமாரனான மேசேக்கு தான் குடியேறிய தீவுக்கு "மேசேக்" என்று பெயரிட்டான் என்றும், அது மாசாக்கே என்றும் அழைக்கப்பட்டது. அதுவே இப்போதுள்ள "மாங்கோ" என்ற ரஷ்ய தலைநகரை குறிக்கிறது என சிலர் விளக்கம் அளித்துள்ளனர். "கோகு" என்பது ஞான அர்த்தமாய், “தேவனுக்கு விரோதியான ஒருவன்” என்று பொருள் கொள்ளலாம்.

**கோகுடன் கூட்டுச் சேரும் நாட்டார்**

1. பெர்சியர், 2) எத்தியோப்பியர், 3) லீபியர் (எசே 28:5), 4) கோமேர், 5) தோகர்மா (எசேக்கியேல் 38:6).

இவர்கள் வட திசையிலிருந்து வருவார்கள். (எசேக்கியேல் 38:15)

பெர்சியா என்பது இப்போதுள்ள ஈரான். 1935ல் இந்த பெயர் மாற்றம் ஏற்பட்டது. கோமர் என்பது ஜெர்மனி என்று சிலர் கருதுகின்றனர்.

**ஜெர்மனி**

2ம் உலக யுத்தத்திற்குப் பின் 1945 செப்டம்பர் 2ம்தேதி ஜெர்மனி இரண்டாகப் பிரிக்கப்பட்டது. கிழக்கு ஜெர்மனி ரஷ்யாவுடன் இணைந்தது. 1961 ஆகஸ்ட் 13ம் தேதி கிழக்கு ஜெர்மனிக்கும், மேற்கு ஜெர்மனிக்கும், மத்தியில் பெர்லின் நகரில் சுவர் கட்டப்பட்டது. ரஷ்ய ஆட்சிக்குட் பட்டிருக்கிற கிழக்கு ஜெர்மனியிலிருந்து தப்பி ஓடி, மேற்கு ஜெர்மனிக்குள் வர முயன்ற ஏராளமானோர் கொல்லப்பட்டனர். இந்த பிரிவால் குடும்பங்கள், சொந்தக்காரர்கள் பிரிந்து வாழ்ந்தனர். கிழக்கு பெர்லின் மக்கள், மேற்கு பெர்லின்–க்கு போக சுமார் 2000 கி.மீ சுற்றி பயணம் செய்ய வேண்டி இருந்தது. இந்த சுவர் இடிக்கப்பட திரளான தேவ

மக்கள் ஜெபித்து வந்தார்கள். உலகின் பல நாடுகளிலிருந்தும் பெர்லின் வந்து இந்த சுவரைத் தொட்டு இது உடைக்கப்பட வேண்டுமென்று ஜெபித்தவர்கள் பலருண்டு. ரஷ்ய ஆளுகையிலிருந்த கிழக்கு ஜெர்மன் மக்கள் வறுமையில் வாடினர். இந்த ஜெபங்களின் பலனாக 1989 நவம்பர் 9–11 தேதிகளில் பெர்லின் சுவர் திரள் கூட்ட மக்களால் தாக்கப்பட்டது. உடைத்து தரைமட்டமாக்கப்பட்டது. 1990 அக்டோபர் 3ம் தேதி கிழக்கு மேற்கு ஜெர்மனி ஒன்றாக இணைந்தன.

தோகர்மா என்பது அர்மேனியாவை குறிப்பதாக சொல்லப்படுகிறது. எசேக்கியேல் 38:12ல் இஸ்ரவேலுக்கு ஆதரவளிக்கும் நாடுகள் சேபா, தேதான் தேசத்தார், தர்ஷீசின் வர்த்தகர், அதினுடைய பாலசிங்கங்கள் அனைவரும் என்று கூறப்பட்டுள்ளது.

சேபா என்பது ஏடன் நாடு என்றும், தேதான் என்பது மஸ்கட் எனவும் சிலர் நம்புகின்றனர்.

தர்ஷீஸ் என்பது கிரேட் பிரிட்டனைக் குறிக்கும் என்று விளக்கம் கூறப்படுகிறது. ஆதி முதல் வெள்ளி, இரும்பு, தகரம், ஈயம் ஆகியவற்றை வெளிநாடுகளுக்கு வியாபாரம் செய்து வந்துள்ளார்கள். கிரேட் பிரிட்டனின் அடையாளம் சிங்கம். தர்ஷீசின் வர்த்தகரும், அதினுடைய பாலசிங்கங்கள் அனைவரும் என்று எழுதப்பட்டுள்ளதால் பிரிட்டனின் பாலசிங்கங்களாக கருதப்படுவது அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து. இவை இஸ்ரவேலுக்கு உதவி செய்ய முன்வரும்.

**யுத்தம் நடக்கும் இடம்**

எசேக்கியேல் 38:8ன்படி இது இஸ்ரவேலின் மலைகளில் நடைபெறும்.

**எப்போது நடைபெறும்?**

- இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு முன் நடைபெறும்.
- எசேக்கியேல் 38:8 – கடைசி வருஷங்களிலே வருவார்.
- எசேக்கியேல் 38:16 – கடைசி நாட்களிலே இது சம்பவிக்கும் என்று கூறப்பட்டுள்ளது. மகா உபத்திரவ காலத்திற்கு முந்தி நடைபெறும் என்பதற்கான பல காரணங்கள் உண்டு.

## 3ம் உலக மகா யுத்தம் அணு ஆயுதப்போராக இருக்கும்

2ம் உலக மகா யுத்தம் நடந்தபோது 1945 ஆகஸ்ட் 6ல் ஜப்பானில் ஹிரோஷியா பட்டணம் மீதும், 9ம் தேதி நாகசாகி மேலும் முதன் முதலாக அணுகுண்டு போடப்பட்டன. சுமார் 2 லட்சம் பேர் உயிரிழந்தனர். இன்று வரை இந்த வட்டாரத்தில் பிறக்கும் பிள்ளைகள், செத்துப் பிறக்கின்றன அல்லது ஊனமுற்றுப் பிறக்கின்றன. இன்றுள்ள நவீன அணுக்குண்டுகள், நியூட்ரான் குண்டுகள் முன்பு உபயோகித்த குண்டுகளைவிட இலட்சக்கணக்கான மடங்கு பயங்கர அழிவை உண்டுபண்ண கூடியவை.

## யுத்தத்தினால் ஏற்படும் விளைவுகள்

### 1] பூமியதிர்ச்சி

எசேக்கியேல் 38:19ன்படி பெரிய பூமியதிர்ச்சி உண்டாகி, அதிக அழிவுண்டாகும், என் பிரசன்னத்தினால் பர்வதங்கள் இடியும், எல்லா மதில்களும் தரையிலே விழும்.

### 2] கூட்டணிக்குள் குழப்பம்

- கூட்டணி ராணுவங்களுக்குள் கலகம் உண்டாகி, ஒருவரையொருவர் அழிப்பார்கள் (எசே 38:21).
- அக்கினி கந்தகம் பொழிந்து பெரும் அழிவு உண்டாகும் (எசே 38:22).
- உராய்ஞ்சுகிற சகலவித பட்சிகளுக்கும் இரையாவார்கள் என்பது ஆகாய விமானங்கள் ராக்கெட்டுகளை குறிக்கும் (எசே 39:4). இவைகளால் ஏராளமான பேர் மடிவார்கள்.

### 3] இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்படுவார்கள்

திரள்கூட்டம் பிணங்கள் பள்ளத்தாக்கிலே புதைக்கப்படும் (எசே 39:11). பிணங்களை புதைத்துத் தீர 7 மாதம் ஆகும் (எசே 39:12). எனவே இலட்சக்கணக்கானவர்கள் காடுகளிலும், மலைகளிலும் செத்து விழுவார்கள். பிணங்களை கண்டுபிடித்து புதைப்பதற்கென்று ஏராளமான பேர் நியமிக்கப்படுவார்கள். ஒரு பிணத்தை கண்டுபிடித்தால் அதன் அருகில் ஓர் அடையாளத்தை நாட்டி வைப்பார்கள். புதைக்கின்ற குழுவினர் வந்து அதை எடுத்து புதைப்பார்கள். இங்கே கூறப்பட்டுள்ள நிலையைப் பார்க்கும்போது இது அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்

பட்டதால் ஏற்பட்ட கதிரியக்க தாக்கத்தைக் குறிக்கிறது என எடுத்துக்கொள்ளலாம்.

"உன் வில்லை உன் இடது கையிலிருந்து தட்டிவிட்டு, உன் அம்புகளை உன் வலது கையிலிருந்து விழப்பண்ணுவேன்" எசே 39:3

எதிரியின் ஆயுதங்கள் சரியாக செயல்படாத அளவிற்கு கர்த்தர் குழப்பத்தை கட்டளையிடுவார் என்று தெரிகிறது. 7 மாதமும் பிணங்களைப் புதைப்பார்கள். ஏழு மாதங்கள் முடிந்த பின்பும் இன்னும் பிணங்களை தேடிக் கொண்டிருப்பார்கள். பிணங்கள் அழுகி கெட்டு எலும்புக்கூடுகளாக மட்டும் மிஞ்சியிருக்கும். ஒரு எலும்பைக் கண்டாலும் அதிலும் அணு கதிரியக்கம் இருப்பதால் அதை தொடாமல் பாதுகாப்புடன் வரும் ராணுவத்தினர் அதை எடுத்து எரிக்க வழி செய்வார்கள் (எசேக்கியேல் 39:14).

**ஆறு துறடுகளால் உன்னை இழுத்துவிடுவேன்:** (எசேக்கியேல் 38:4; 39:2)

வடபுறத்திலிருந்து எழும்பி வரும் நாடாக ரஷ்யா இருக்கும். ரஷ்யாவுடன் கூட்டணியிலிருக்கும் ஆறு நாடுகள் நிர்பந்தம்பண்ணப்பட்டு ரஷ்யாவுடன் இந்த யுத்தத்தில் ஈடுபடுத்துவார்கள்.

**4. ஏழு வருடம் ஆயுதங்களை எரிப்பார்கள்:** (எசேக்கியேல் 39:10)

இந்த மூன்றாம் உலக மகா யுத்தத்தினால் ஏராளமான ஆயுதங்கள் இஸ்ரவேல் நாடு எங்கும் சிதறிக் கிடக்கும். கி.மு. 600ல் வாழ்ந்த எசேக்கியேல், யுத்த ஆயுதங்களை கேடகங்கள், பரிசைகள், வில்லுகள், அம்புகள், வளைதடிகள், ஈட்டிகள் என்று விவரித்துள்ளார். இதற்கு இணையான நவீன ஆயுதங்கள் யுத்தத்தில் பயன்படுத்தப்படும். வேறு எந்த எரிபொருட்களையும், மக்கள் பயன்படுத்தாமல் இந்த ஆயுதங்களை எடுத்து எரிப்பார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

எனவே இன்று பயன்படுத்தப்படும் நவீன ஆயுதங்களின் எரிபொருட்களாலான ஆயுதங்கள் ஏராளம் இருக்கும்.

**லிக்னோஸ்டோன் *(Lignostone)***

உதாரணமாக, ரஷ்யர்கள் பயன்படுத்தும் துப்பாக்கி மற்றும் ஆயுதங்களை தயாரிக்க லிக்னோஸ்டோன் என்ற மரத்தை பயன்படுத்து கிறார்கள். இந்த மரம் அதிக அழுத்தத்திற்கு உட்படுத்தப்பட்டு இரும்பை விட, உறுதியானதாக மாறுகிறது. நிலக்கரியை விட அதிக

அழுத்தமுள்ளது. இது போன்ற எரியும் தன்மையுள்ள பொருட்களை ஆயுதங்களாக பயன்படுத்துவதால் விட்டுச் சென்ற ஆயுதங்களை இஸ்ரவேலர் எடுத்து ஏழு வருடம் எரிப்பார்கள்.

**5. புதிய தேவாலயம் கட்டப்படும்**

மூன்றாம் உலக மகாயுத்தத்தினால் பூமியதிர்ச்சி உண்டாகி, ஏராளமான கட்டிடங்கள் தரைமட்டமாக இடிந்துவிழும் என்று பார்த்தோம். இதில் தேவாலயம் இருந்த இடத்தில் கட்டப்பட்டுள்ள மசூதியும் *(Dome of the Roch)* இடிந்து தரைமட்டமாகும். இந்த இடத்தில் எல்லா மக்களுக்கும், பொதுவான ஓர் ஆலயம் கட்டப்படும். யூதர்கள், முஸ்லீம்கள் மற்றும் பிற மதத்தினர் ஏற்றுக்கொள்ளும்படி அந்திகிறிஸ்து வழி செய்வான்.

"என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு" என்பது உறுதி செய்யப்படும். ஏசாயா 56:7

## 2. இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையும், பரிசுத்தவான்கள் எடுத்துக்கொள்ளப்படலும்

இயேசு கிறிஸ்துவின் வருகையை இரண்டு நிகழ்ச்சிகளாக வசனம் குறிப்பிடுகிறது.

1. பரிசுத்தவான்களை அழைத்துச் செல்ல மத்திய ஆகாயத்திற்கு இயேசு இரகசியமாய் வருதல்.
2. இயேசு பகிரங்கமாக இந்த உலகத்திற்கு வருதல்

இப்படிப்பட்ட கருத்திற்கு வசன ஆதாரங்கள் உண்டு. இனி நடைபெற வேண்டிய முக்கிய நிகழ்ச்சி பரிசுத்தவான்கள் எடுத்துக்கொள்ளப்படுதலே.

**பரிசுத்தவான்கள் எடுத்துக் கொள்ளப்படல்**

எடுத்துக்கொள்ளப்படல் என்பதற்கு ஆங்கிலத்தில் *Rapture* என்று வருகிறது. “ரேப்சர்” *(Rapture)* என்ற வார்த்தை ஆங்கில வேதாகமத்தில் இல்லை. “ரேப்பியர்” *(Rapere)* என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து வந்தது ரேப்சர். ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு இடம் பெயர்தல் என்று பொருள். ரேப்பியோ என்ற லத்தீன் வார்த்தைக்கு திடீரென்று எடுத்துக் கொள்ளப்படல் என்று அர்த்தம். கிரேக்க மொழியில் “ஹர்ப்பஜோ” என்ற வார்த்தைக்கு எடுத்துக்கொள்ளப்படல் என்று பொருள்.

கர்த்தர் வானத்திலிருந்து **இறங்கி வருவார்.** கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள், பின்பு உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் கர்த்தருக்கு **எதிர்கொண்டு போக மேகங்கள் மேல்** அவர்களோடே கூட **ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவோம்** என்று 1தெசலோனிக்கேயர் 4:16,17ல் கூறப்பட்டுள்ளது.

இங்கே "**எடுத்துக்கொள்ளப்பட்டு**" என்ற வார்த்தைக்கு கிரேக்க மொழியில் "ஹர்பகிசோ மெதா" என்று வருகிறது.

**இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையை ஆதாரப்படுத்தும் வசனங்கள்:**

***"ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார், அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" 1தெசலோனிக்கேயர் 4:16,17***

இயேசு கிறிஸ்து வானத்திலிருந்து இறங்கி வருவார், நாம் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்களில் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவோம்.

அவர் பூமிக்கு வந்துவிட்டாரென்றால், எதிர்கொண்டு போக வேண்டிய அவசியமில்லை, ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படல் என்று வராது. எனவே இயேசு பரிசுத்தவான்களைக் கூட்டிச் செல்ல வரும்போது மத்திய ஆகாயத்தில் நம்மை சந்திப்பார்.

வெளிப்படுத்தல் 16:15 – திருடனைப் போல் வருகிறேன் என்று கூறியுள்ளார்.

1தெசலோனிக்கேயர் 5:2 – இரவிலே திருடன் வருகிறவிதமாய் கர்த்தருடைய நாள் வரும்.

2பேதுரு 3:10 – கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்.

இந்த வசனங்களின்படி இயேசு பரிசுத்தவான்களைக் கூட்டிச் செல்ல வரும்போது உலக மக்களுக்கு அது தெரியாத விதத்தில் நடக்கும்.

**இயேசு கிறிஸ்து பரிசுத்தவான்களை அழைக்க வரும்போது வானத்தில் நடைபெறுபவை: *(1தெசலோனிக்கேயர் 4:16)***

1. கர்த்தருடைய ஆரவார சத்தம்
2. பிரதான தூதனுடைய சத்தம்
3. தேவ எக்காளம் ஊதப்படும்.

**1. கர்த்தருடைய ஆரவார சத்தம்**

தமக்காக காத்திருக்கும் தேவ மக்களுக்கு இங்கே ஏறி வாருங்கள் என்ற ஆரவார சத்தம் வானிலே தொனிக்கும். அது பரிசுத்தவான்களுக்கு மட்டுமே கேட்கும். உலகிலுள்ள மக்களுக்கு அது விளங்காத இடி முழக்கமாக இருக்கும்.

தேவன் தாம் பேச விரும்புகிறவர்களுக்கு மட்டும் விளங்கும்படி பேசுவார் என்பதற்கு சில உதாரணங்கள்:

*i)* **யோவான் 12:28,29** - இயேசு பிதாவே உம்மை மகிமைப்படுத்தும் என்று கூறினவுடனே, மகிமைப்படுத்தினேன் இன்னமும் மகிமைப்படுத்துவேன் என்ற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று. இது இயேசுவுக்கு மட்டும் விளங்கிற்று. அங்கே நின்ற பொதுமக்கள் இடிமுழக்கம் உண்டாயிற்று என்றார்கள். வேறு சிலர் தூதன் அவருடனே பேசினான் என்றார்கள். அவர்களுக்கு அது விளங்கவில்லை.

*ii)* **அப்போஸ்தலர் 26:14; 22:9** – இயேசுவானவர் சவுலுடனே எபிரெய பாஷையிலே பேசினார் என்றும், அதை கூடநின்றவர்கள் கேட்கவில்லை என்றும் பார்க்கிறோம்.

**2. பிரதான தூதனுடைய சத்தம்**

வானமண்டலத்திற்கு பரிசுத்தவான்கள் வந்து சேரும்போது அவர்களைத் தடுக்க வானமண்டலத்திலுள்ள பிசாசும் அவன் கூட்டமும் முயற்சிப்பார்கள். பிரதான தூதனுடைய சத்தத்தினால் பரிசுத்த தேவதூதர்கள் வந்து சாத்தானுடனும், அவன் சேனையுடனும் சண்டையிட்டு அவர்களை பூமியிலே விழத்தள்ளுவார்கள். வானத்தில் பிசாசுக் கூட்டம் இருந்த இடம் காலியாகிவிடும் என்று வெளிப்படுத்தல் 12:7–12ல் பார்க்கிறோம்.

***"வானத்திலே யுத்தமுண்டாயிற்று, மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம் பண்ணினார்கள். வலுசர்ப்பமும்***

***அதைச் சேர்ந்த யூதரும் யுத்தம் பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை. வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று. சாத்தானும், அவன் கூட்டமும் பூமியிலே விழத்தள்ளப்பட்டார்கள்".***

**3. தேவ எக்காளம் ஊதப்படும்**

தேவ எக்காளம் ஊதப்படும்போது மரித்த பரிசுத்தவான்கள் உயிரடைவார்கள். உயிரோடிருக்கின்ற பரிசுத்தவான்கள் மறுரூபமடைவார்கள் (1கொரிந்தியர் 15:51)

**இயேசுவின் இரகசிய வருகையில் பூமியில் நடக்கும் 3 காரியங்கள்**
***(1தெசலோனிக்கேயர் 4:15–17)***

1. முதலாவது கிறிஸ்துவுக்குள் மரித்த பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுவார்கள்.
2. உயிரோடிருக்கின்ற பரிசுத்தவான்கள் மறுரூபப்படுவார்கள்.
3. இந்த இரு கூட்டமும் மத்திய ஆகாயத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

மகா உபத்திரவ காலத்திற்கு முந்தி இது நடைபெறும்.

**பரிசுத்தவான்கள் எப்போது எடுத்துக்கொள்ளப்படுவார்கள்?**

இதைக் குறித்து 3 முக்கிய கருத்துக்கள் உண்டு

1. உபத்திரவ காலம் முடிந்த பின் (அதாவது அந்திகிறிஸ்துவின் 7 வருட ஆட்சி முடிந்தபின்)
2. உபத்திரவ கால மத்தியில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.
3. உபத்திரவ காலத்திற்கு முந்தி எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

**சிலர் உபத்திரவ கால முடிவில் சபை எடுத்துக்கொள்ளப்படும் என்று நம்புகிறார்கள்**

லூக்கா 23:27–31; மத்தேயு 24:9–11; மாற்கு 9–13 வசனங்களை அடிப்படையாகக் கொண்டு இப்படி போதிக்கிறார்கள்.

- ❖ மகா உபத்திரவ காலம் என்பது குறிப்பாக இஸ்ரவேலருக்கு என்பதை மனதில் கொள்ள வேண்டும். இது "யாக்கோபின் இக்கட்டுக் காலம்" என்று கூறப்படுகிறது. எரேமியா 30:6,7
- ❖ அந்திகிறிஸ்து வெளிப்படுவதற்குத் தடையாயிருப்பது

திருச்சபையில் கிரியை செய்து வரும் பரிசுத்த ஆவியானவர். பரிசுத்த ஆவியானவர் உலகத்திலிருந்து எடுபட்டுப் போனபின் அக்கிரமக்காரனாகிய அந்திகிறிஸ்து வெளிப்படுவான். 2தெசலோனிக்கேயர் 2:6,7. எனவே பரிசுத்தவான்கள் இந்த உலகத்திலிருந்து எடுபட்டுப் போனபின்புதான் உபத்திரவக்காலம் வரும்.

❖ உபத்திரவக் காலத்தில் நடைபெறும் உபத்திரவங்களைப் பற்றி வெளிப்படுத்தல் 5–19 அதிகாரங்களில் பார்க்கிறோம். அதற்கு முன் சபை எடுத்துக்கொள்ளப்படும் என்று வெளிப்படுத்தல் 4,5 அதிகாரங்களில் காண்கிறோம்.

**சிலர் உபத்திரவ கால மத்தியில் சபை எடுத்துக்கொள்ளப்படும் என்று நம்புகிறார்கள்**

தானியேல் 9:27ல் 70வது வாரத்தின் பாதி சென்றபோது (அதாவது 7 வருடத்தில் பாதியாகிய 3 1/2 வருடம்) அந்த கால கட்டத்தில் தான் சபை எடுத்துக் கொள்ளப்படும் என்று நம்புகிறவர்கள் உண்டு. இதற்கு வசன ஆதாரங்கள் இல்லை.

**உபத்திரவ காலத்திற்கு முன் சபை எடுத்துக் கொள்ளப்படும் என்பதே உண்மை**

இதற்கான ஆதார வசனங்களை ஏற்கனவே பார்த்தோம். இதைத்தான் பெரும்பான்மையான பரிசுத்தவான்கள், வேதபண்டிதர்கள் நம்புகின்றனர்.

**இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையில் யார் யார் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்**

1. எபிரெயர் 12:23 – பரலோகத்தில் பெயரெழுதப்பட்டவர்கள்
2. அப்போஸ்தலர் 2:47 – இரட்சிக்கப்பட்டவர்கள்
3. லூக்கா 10:20 – தங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதப்பட்டவர்கள்
4. வெளிப்படுத்தல் 13:8 – பரலோக ஜீவ புஸ்தகத்திலே பெயரெழுதப்பட்டவர்கள்
5. வெளிப்படுத்தல் 21:27 – ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவர்கள்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு பரிசுத்தமாய் வாழும் சகல பரிசுத்தவான்களும் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

6. மனுஷ குமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்பட எப்பொழுதும் ஜெபிப்பவர்கள். (லூக்கா 21:36)
7. இயேசு கிறிஸ்துவின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள் (பிலிப்பியர் 3:20)
8. அவருடைய வருகைக்காக விழித்துக் கொண்டு (எச்சரிப்பாக) இருப்பவர்கள். (மத்தேயு 24:42, லூக்கா 12:36)

**எப்படி எடுத்துக் கொள்ளப்படுவார்கள்? எவ்வளவு நேரம் எடுக்கும்?**

1கொரிந்தியர் 15:51,52ல் ஒரு நிமிடத்திலே ஒரு இமைப்பொழுதிலே நடைபெறும் என சொல்லப்பட்டுள்ளது. ஒரு நிமிடம் என்று சொல்லிவிட்டு, ஒரு இமைப் பொழுதென்றும் பவுல் குறிப்பிடுகிறார். கண் மூடித் திறக்கும் ஒரு வினாடியிலே பரிசுத்தவான்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். மரித்த பரிசுத்தவான்கள் உயிரோடு எழும்புவார்கள். உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் நித்தியத்திற்கு வாழ்வதற்கேற்ற நிலையில் மறுரூபமாக்கப்படுவார்கள்.

மின்னல் அடிக்கும் வேகத்தில் நடைபெறும் (மத்தேயு 24:27)

எனவே கண் இமைக்கும் நேரத்தில் நடந்துவிடும். உலக மக்களுக்கு ஒன்றுமே தெரியாது.

**எந்த நேரத்தில் இது நடைபெறும்?**

1) படுக்கையிலிருக்கின்ற இருவரில் ஒருவர் ஏற்றுக்கொள்ளப் படுவான், மற்றவன் கைவிடப்படுவான்.
2) திரிகை திரிக்கின்ற இரண்டு பெண்களில் ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், மற்றவள் கைவிடப்படுவாள்.
3) வயலிலிருக்கின்ற இரண்டு பேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப் படுவான், மற்றவன் கைவிடப்படுவான். லூக்கா 17:34–36

இது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்ன விளக்கம். படுக்கையிலிருப்பது இரவு நேரம். திரிகை திரிப்பது, காலை அல்லது மாலை. வயலில் இருப்பது பகல் வேளை. இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகை சில நாடுகளுக்கு இரவாக, சில நாடுகளுக்கு காலையாக

அல்லது மாலையாக, சில நாடுகளுக்கு பகலாக இருக்கும்.

எந்த நேரமாயிருந்தாலும், என்ன வேலை செய்தாலும் கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தமாயிருக்க வேண்டும் என்பதுதான் செய்தி.

ஒரே வீட்டிலிருந்தாலும், ஒரே தொழிலை செய்தாலும், ஆயத்தமாயிருப்பவர்களும் உண்டு; ஆண்டவரை சந்திக்க ஆயத்த மில்லாதவர்களும் உண்டு. ஒரே ஆலயத்திற்குப் போனாலும் ஆயத்த மாயிருப்பவர்களும், ஆயத்தமில்லாதவர்களும் இருப்பார்கள். கணவன், மனைவியாக இருந்தாலும், ஒரே அலுவலகத்தில் ஒரே வேலை செய்தாலும், ஒரே குடும்பத்தில் உடன் பிறந்த சகோதரர்களாக இருந்தாலும், ஆயத்தமாயிருப்பவர்களும் உண்டு, ஆயத்தமில்லாத வர்களும் உண்டு.

ஆண்டவர் வரும் போது இந்த வித்தியாசம் தெளிவாக வெளிப்படும். இயேசு தரும் பாவமன்னிப்பின் நிச்சயம் பெற்று பரிசுத்தமாய் வாழ்பவர்கள் எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

## 3] பரிசுத்தவான்கள் எடுத்துக் கொள்ளப்பட்டவுடன் இந்த உலகில் நடக்கும் காரியங்கள்

பரிசுத்தவான்கள் எடுத்துக்கொள்ளப்பட்ட பின் இந்த உலகத்தில் பல அதிர்ச்சியான காரியங்கள் நடைபெறும்.

முழு உலகமும் அதிர்ச்சியில் தத்தளிக்கும். கோடிக்கணக்கான பேர் திடீரென்று மறைந்துவிடுவதால் எல்லா தினசரி பத்திரிக்கையிலும் இதுவே பெரிய செய்தியாக இருக்கும். அரசியல் தலைவர்களும், மதத் தலைவர்களும், ஆட்சியில் இருப்பவர்களும் தங்கள் கருத்துக்களை எழுதுவார்கள். யூகங்களுக்கு கணக்கு இருக்காது. எல்லா தொலைக்காட்சிகளிலும் இதுவே பெரிய செய்தியாக வந்து கொண்டிருக்கும்.

### கிறிஸ்தவ உலகில் நடைபெறும் காரியங்கள்

பொதுவாக கிறிஸ்தவர்கள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்டதால் இதைக் குறித்த பேச்சும், தர்க்கமும் உண்டாகும்.

ஏதோ நடந்து இந்த கிறிஸ்தவர்களை பறக்கும் தட்டுகள் வேறு உலகத்திற்கு கொண்டு சென்றுவிட்டது என பலர் கூறுவர். சபைகளில் இரட்சிக்கப்பட்டவர்கள் இருந்த இடமெல்லாம் காலியாக இருக்கும்.

எல்லாக் கிறிஸ்தவர்களும் போகவில்லையே என்ற கேள்வி எழும்பும்.

- சபையில் ஒரு கூட்டம் காணாமல் போகும். மீதியுள்ளோர் இருப்பார்கள்.
- போதகர்களில் ஒரு கூட்டம் காணாமல் போவார்கள். மீதிப் பேர் ஊழியத்தை தொடர்வார்கள்.
- வேதாகம கல்லூரிகளில் ஒரு கூட்டம் மாணவர்களும், பேராசிரியர்களும் மறைந்துவிடுவார்கள். மீதி கூட்டம் கல்லூரிகளை தொடர்ந்து நடத்தும்.
- இரட்சிக்கப்பட்ட மாமியார், மாமனார் மறைந்து போனதை எண்ணி மருமக்கள்மார் கூட்டம் நிம்மதி அடைவார்கள். இது போல இரட்சிக்கப்பட்ட மருமக்கள் போனதால் மாமியார்கள் மகிழ்ச்சியடைவார்கள்.
- இரட்சிக்கப்பட்டவர்களிடம் கடன் வாங்கினவர்கள், கடன் கொடுத்தவர்கள் மறைந்து போவதால், இனி கடன் பற்றி பேச ஆளில்லை என்று மன ஆறுதலடைவார்கள்.
- அரைகுறையாக சத்தியத்தை அறிந்த கைவிடப்பட்ட போதகர்களும், சபை மக்களும் இதுதான் இரகசிய வருகை என்று விளங்கிக் கொண்டு, தாங்கள் கைவிடப்பட்டதை எண்ணி வெட்கமடைவார்கள்.
- பத்திரிக்கை நிருபர்கள், டி.வி. ஆட்கள் வந்து கைவிடப்பட்ட சபைத் தலைவர்களையும், போதகர்களையும் சந்தித்து இதைக் குறித்து உங்கள் கருத்து என்ன என்று கேட்பார்கள். பலரும் பலவித கருத்துக்களை கூறுவார்கள்.
- பாவமறியா சிறுபிள்ளைகள் அனைவரும் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

### இரட்சிக்கப்பட்ட ராஜாக்கள், ஜனாதிபதிகள், பிரதம மந்திரிகள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்

தேசியத் தலைவர்களில் இரட்சிக்கப்பட்டவர்கள் மறைந்து போவதால் அரண்மனைகளும், பாராளுமன்றம் சட்டசபைகளிலும் குழப்பமான சூழ்நிலை உருவாகும். மந்திரிகளும், பாராளுமன்ற அங்கத்தினர்களும் திடீரென்று மறைந்துபோவதால் பெரிய அரசியல் நெருக்கடி உண்டாகும்.

**போக்குவரத்துத் துறை**

தேசிய நெடுஞ்சாலைகளில் வாகனங்கள் ஓடிக் கொண்டிருக்கும்போதே இரட்சிக்கப்பட்டவர்கள், மறைந்து போவதால் ஏராளமான விபத்துக்கள் உலகமெங்கும் நடைபெறும். விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ சிகிச்சையளிக்க ஏராளமான டாக்டர்களும், நர்சுகளும் இருக்கமாட்டார்கள். வாகனங்களில் பயணிக்கும் இரட்சிக்கப்பட்ட முதலாளிகள் மறைந்து போவார்கள். பஸ்கள் ஓட்டுனர் எடுத்துக் கொள்ளப்பட்டதால் பஸ்கள் தானாய் ஓடி விபத்தில் சிக்கும். இரயில் வண்டி ஓட்டுனர் காணாமல் போனதால் வண்டி ஓடி விபத்துக்கள் ஏற்படும்.

விமானங்களின் விமானிகள் எடுத்துக் கொள்ளப்பட்டதால் விமானங்கள் ஓடி பெட்ரோல் தீர்ந்து, விழுந்து நொறுங்கும்.

கப்பல் மாலுமிகள் மறைந்து போனதால், பெரிய சேதங்கள் ஏற்படும்.

**மருத்துவமனைகள்**

விசுவாச டாக்டர்கள், நர்சுகள் மறைந்து போனதால் அவர்கள் நாற்காலி காலியாக இருக்கும். அறுவை சிகிச்சை நடைபெற்றுக் கொண்டிருந்தால் அப்படியே நின்றுவிடும். மற்றவர்கள் வந்து உதவுவார்கள்.

விசுவாசியான வியாதியஸ்தர் படுக்கைகள் காலியாகிவிடும்.

அறுவை சிகிச்சையிலிருந்த விசுவாசி காணாமல் போனதால் டாக்டர்கள் அதிர்ச்சியடைவார்கள்.

**காவல்துறை**

விசுவாசிகளான அதிகாரிகள் மறைந்து போவதால் சிறைச்சாலை களில் குழப்பம் ஏற்படும். கைதிகள் பலர் ஓடிவிடுவார்கள். மற்றவர்கள் நிலைமையை சரிப்படுத்த பாடுபடுவார்கள்.

கல்வித்துறையிலும், நீதித்துறையிலும், பொதுப் பணித்துறையிலும், பத்திரிக்கைத் துறைகளிலும், தொலைக்காட்சி, ஒலிபரப்புத் துறைகளிலும், ஹோட்டல்களிலும், பலசரக்குக் கடைகளிலும் பல அதிர்ச்சியான காரியங்கள் நடைபெறும். உலகமெங்கும் பேரழிவும், பெரிய நஷ்டமும் உண்டாகும்.

தொழிற்சாலைகளில் வேலை செய்யும் விசுவாசிகள் மறைவதால் மிஷின் ஓடிக்கொண்டிருக்கும். வங்கியில் வேலை செய்யும் விசுவாசிகள் எடுத்துக் கொள்ளப்படுவதால் வங்கிகள் கொள்ளையிடப்படும்.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இரட்சிக்கப்பட்ட மாணவர்களும், ஆசிரியர்களும் மறைந்து போவதால் பெரும் அதிர்ச்சி உண்டாகும்.

உலகமெங்கும் இதே பேச்சாக இருக்கும். பெரிய அழிவும், நாசமும், அதிர்ச்சியும், ஆச்சரியமும் உண்டாகும்.

## 4] அந்திகிறிஸ்துவின் 7 வருட ஆட்சி உபத்திரவ காலம்

பரிசுத்தவான்கள் எடுத்துக் கொள்ளப்பட்ட பின் இந்த உலகில் அந்தி கிறிஸ்துவின் 7 வருட உபத்திரவ காலம் ஆரம்பிக்கும்.

### அந்தி கிறிஸ்து

அந்தி கிறிஸ்து என்ற வார்த்தை வெளிப்படுத்தலில் வரவில்லை. ஆனால் யோவான் எழுதின நிருபங்களில் 4 இடங்களில் வருகிறது. 1யோவான் 2:18,22; 4:3; 2யோவான் 7 "Anti Christ" என்ற ஆங்கில வார்த்தையை அப்படியே தமிழில் மொழி பெயர்த்துள்ளார்கள். "Anti" என்றால் "எதிர்ப்பு" என்று பொருள். இந்த வார்த்தையை அந்தி என்று மொழி பெயர்த்துள்ளார்கள். அந்தி கிறிஸ்து என்றால் கிறிஸ்துவுக்கு எதிர்ப்பானவன் என்று பொருள்.

### மிருகம்

வெளிப்படுத்தலில் மிருகம் என்று இவன் அழைக்கப்படுகிறான் (வெளிப்படுத்தல் 13:1–18; 17:3,8,16,17; 19:20)

**இந்த மிருகத்திற்கு 7 தலைகள், 10 கொம்புகள் இருந்தன:** (வெளி 13:1)

தானியேல் 2:33,41,44 ஆகிய வசனங்களில் நேபுகாத்நேச்சார் சொப்பனத்தில் கண்ட சிலையின் கால் விரல்களை (10 விரல்கள்) பற்றிய விளக்கத்தில், கைகளினால் பெயர்க்கப்படாத கல் உருண்டு வந்து பாதத்தில் மோதி சிலையை உடைத்துப் போடும் என்பது, கடைசி காலத்தில் எழும்பும் 10 ராஜ்யங்களில் ஆட்சியின் முடிவில் இயேசு கிறிஸ்துவின் பகிரங்க வருகை இருக்கும் என்று பார்க்கிறோம்.

தானியேல் 7:7ல் 10 கொம்புகள் உள்ள மிருகத்தைப் பற்றியும், தானியேல் 7:8ல் 10 கொம்புகளுக்கு இடையில் வேறொரு சின்ன கொம்பு எழும்பி பலத்தது என்றும் கூறப்பட்டுள்ளது.

இதற்கான விளக்கம் தானியேல் 7:24,25 வசனங்களில், 10 கொம்புகள் என்பது கடைசி காலத்தில் எழும்பும் 10 ராஜாக்கள், அந்த சின்ன கொம்பு என்பது வேறொரு ராஜா என்றும் தெளிவாய் கூறப்பட்டுள்ளது.

கடைசி காலத்தில் எழும்பும் 10 நாடுகளுடைய கூட்டு ஐக்கியம் உருவாகும். அதற்கு தலைவனாக ஒருவன் தெரிந்து கொள்ளப்படுவான். அவன் கிறிஸ்துவுக்கு விரோதமாக செயல்படுவான். அவனே அந்திகிறிஸ்து என்று அறியப்படுகிறான். அந்திகிறிஸ்துவின் ஆளுகை 7 வருடம் என்று எப்படி கணிக்கின்றோம்.

தானியேல் 9:24,25ல் இஸ்ரவேலருக்கு நடக்கும் தீர்க்கதரிசன நிகழ்ச்சிகளை **70 வாரம்** என்று கூறப்பட்டுள்ளது.

1. எருசலேம் திரும்ப எடுப்பித்து கட்டுவதற்கான கட்டளை வெளிப்படுவது முதல் பிரபுவாகிய மேசியா வருமட்டும், 7 வாரம்.
2. அதற்குப் பின் 62 வாரம். அந்த 62 வார முடிவிலே மேசியா சங்கரிக்கப்படுவார்.
3. கடைசி 1 வாரம். இந்த வாரத்தில் அவன் (அந்தி கிறிஸ்து) அநேகருடன் உடன்படிக்கையை ஏற்படுத்துவான். இதில் பாதி வாரம் சென்ற போது, பலியையும், காணிக்கையையும் ஒழியப்பண்ணுவான். அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான்.

**இதன் விளக்கம்:**

"வாரம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரேய வார்த்தை "சபூவா" (Shabuva). இதன் சரியான மொழிபெயர்ப்பு "ஏழு" ஆனால் வாரம் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

ஏழுவாரம் என்பது எபிரேய மொழியில் ஏழு ஏழுகள் என்று வருகிறது. நடந்து முடிந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது ஏழுகள் என்பது நாட்களையல்ல, வருடங்களைக் குறிக்கின்றது என தெளிவாய் காண முடியும்.

ஜீலியன் காலண்டர்படி ஒரு வருடத்திற்கு 365 நாட்கள். 4 வருடத்திற்கு ஒரு முறை ஒருநாள் கூட்டிக் கொள்ளப்படும்.

தீர்க்கதரிசன வருடங்கள், சூரிய சுழற்சியை சோலார் (Solar) அடிப்படையாகக் கொண்டதல்ல. சந்திர சுழற்சியை லூனார் (Lunar) அடிப்படையாகக் கொண்டது. அதன்படி ஒரு வருடத்திற்கு 360 நாட்கள். மாதம் 30 நாட்கள், வருடத்திற்கு 360 நாட்கள்.

இதற்கு வேத ஆதாரம் உண்டா? நிச்சயமாக உண்டு.

நோவா காலத்தில் ஜலப்பிரளயம் (நோவாவுக்கு 600 வயதான போது) 2ம் மாதம் 17ம் தேதி ஆரம்பமானது. 7ம் மாதம் 17ம் தேதியிலே பேழை அரராத் மலையில் தங்கிற்று (ஆதியாகமம் 7:11, 8:4). இது 150 நாட்கள் என்று (5 மாதம்) கூறப்பட்டுள்ளது.

முதலாம் அர்தசஷ்டா கி.மு. 444ல் அலங்கம் கட்ட கட்டளையிட்டான் (நெகேமியா 2:1–8; தானியேல் 9:25).

கி.மு. 444 – கி.பி. 33 = 477 வருடங்கள். ஆனால் தீர்க்கதரிசன வருடங்கள் 483 (வித்தியாசம் 6 வருடம்).

தீர்க்கதரிசன வருடத்திற்கு 360 நாட்கள் மட்டும்.

**ஆதாரம்:** ஆதியாகமம் 7:11 – 2ம் மாதம் 17ம் தேதி – ஜலப்பிரளயம் ஆரம்பம். ஆதியாகமம் 8:4 – 7ம் மாதம் 17ம் தேதி முடிந்தது (ஐந்து மாதம்).

ஆதியாகமம் 7:24; 8:3 – 150 நாட்கள் என்று வருகிறது. எனவே 5 மாதம் என்பது 150 நாட்கள் மட்டும்.

எனவே ஒரு மாதத்திற்கு 30 நாட்கள் என்றுதான் வேதாகமம் கணக்கிடுகிறது.

இதுபோலவே வெளிப்படுத்தலில் 42 மாதம் என்றும் 1260 நாட்கள் என்றும் கூறப்பட்டுள்ளது (வெளிப்படுத்தல் 11:2,3).

70 வாரங்கள் என்பது 70 x 7 = 490 வருடங்கள் என அறிகிறோம்.

**70 வாரம் [490 வருடங்கள்] என்பது எப்போது ஆரம்பமானது**

எருசலேம் திரும்ப எடுப்பித்துக் கட்டுவதற்கான கட்டளை வெளிப்பட்டுள்ளது (தானியேல் 9:25) இது ஆரம்பம். நெகேமியா 2:1–8ல் அர்தசஷ்டா அரசனின் 20 வருடம் நிசான் மாதம் என்று கூறப்பட்டுள்ளது. எக்சைக்னோ பீடியா பிரிட்டானிஸ் அர்தசஷ்டா பதவிக்கு வந்தது கி.மு.465. எனவே கி.மு.445ல் அரசாணை

கொடுக்கப்பட்டது. யூத காலண்டர்படி கி.மு. 445 மார்ச் 14ம் தேதி எருசலேம் திரும்ப எடுப்பித்துக் கட்டப்பட கட்டளை பிறந்தது.

இந்த எழுபது வாரம் (490 வருடங்கள்) மூன்று பகுதிகளாய் பிரித்துக் கூறப்பட்டுள்ளது.

**i) முதல் 7 வாரம் [49 வருடங்கள்]**

கி.மு. 445 மார்ச் 14ம் தேதி எருசலேம் கட்டப்பட கட்டளை வெளிப்பட்டது.

கி.மு. 396ல் கட்டி முடிக்கப்பட்டது. 49 வருடம் ஆனது.

**ii) 62 வாரம் [434 வருடங்கள்]**

மேசியா சங்கரிக்கப்பட்டது கி.பி. 32 ஏப்ரல் 6

டாக்டர் ராபர்ட் ஆண்டர்ஸன் என்ற வேத பண்டிதர் இந்த நாட்களை இப்படி கணிக்கின்றார்.

**வேதாகம கணக்குப்படி 1 ஆண்டிற்கு 360 நாட்கள் (லூனார் அடிப்படை)**

**483 x 360 = 173880 நாட்கள்**

**iii) சோலார் கணக்குப்படி**

கி.மு. 445 மார்ச் 14 முதல் கி.பி. 32 ஏப்ரல் 6 வரை 476 ஆண்டுகளும் 24 நாட்களும் ஆகும். கி.மு. 1 – கி.பி. 1 ஒரு ஆண்டு இடைவெளி மட்டுமே.

| | | |
|---|---|---|
| 476 x 365 | = | 173740 |
| மார்ச் 14 முதல் ஏப்ரல் 6 வரை | = | 24 |
| லீப் வருடங்களின்படி கூடுதல் நாட்கள் | = | 119 |
| | | **173883** |
| லூனார் வருடங்களுடன் சரியாய் கணக்கிட 128 வருடத்திற்கு ஒரு நாள் வீதம் குறைக்க வேண்டும் | = | –3 |
| | | **173880** |

மேசியா பவனி வந்த நாளோடு இது நிறைவு பெறுகிறது.

இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்ததோடு இந்த 69 வாரங்களும் (483 வருடங்கள்) முடிந்துவிட்டன.

**70 வாரம் ஏன் ஆரம்பிக்கவில்லை**

இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்தபின்பு இயேசுவின் சபை ஆரம்பமாயிற்று. தற்போது சபையின் காலம் அல்லது புறஜாதியாரின் காலம் என்று அழைக்கப்படுகிறது. சபை எடுத்துக் கொள்ளப்பட்டவுடன் கடைசி வாரமாகிய 70வது வாரம் (7 வருடம்) ஆரம்பமாகும். இது யூதரின் காலம்.

**7 வருடத்தில் முதல் 3 1/2 ஆண்டுகளில் அந்தி கிறிஸ்து நன்மை செய்வது போல் நடிப்பான்.**

உலகம் மிகவும் இக்கட்டான நிலையில் செல்லும்போது ஐரோப்பிய நாடுகளின் ஐக்கியத் தலைவனாக அந்திகிறிஸ்து உயர்த்தப்படுவான். உலகம் இவனை பெரிய அறிவாளியாகவும், சிறந்த அரசியல் தலைவனாகவும் ஏற்றுக்கொள்ளும். வேதம்தான் இவனை அந்திகிறிஸ்து (கிறிஸ்துவுக்கு எதிரானவன்) என்று கூறினாலும் உலகப் பார்வையில் இவன் சிறந்த தலைவனாக விளங்குவான். தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கொண்டு வருவான். இஸ்ரவேலருக்கும், அரேபியருக்கும் ஓர் 7 வருட சமாதான ஒப்பந்தத்தை கொண்டு வருவான். இவன் கொண்டு வரும் சில காரியங்கள்:

1. உலக நாடுகளுக்கிடையேயுள்ள தடைகளை நீக்கி ஒரே நிர்வாகத்தைக் கொண்டு வருவான். (One world government)
2. முழு உலகத்திற்கும் ஒரே நாணய முறை (பொருளாதார தாராளமயம்) (One world ministry system).
3. முழு உலகத்திற்கும் ஒரே மத நம்பிக்கை. (ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பது போல) (One world religion).

உலக மக்கள் ஆட்சிகளால், மதத்தால், பொருளாதார ஏற்ற தாழ்வுகளால் பிரிந்திருக்க வேண்டாம். யாவரும் ஒன்றுபடுவோம் என்று கூறி அநேக நாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்வான் (தானியேல் 9:27).

ஒரு சிறு கூட்டம் இதை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் உலகிலுள்ள பெரும்பான்மையோர் மிகவும் விரும்பி இதை ஏற்றுக்கொள்வார்கள்.

**வெளிப்படுத்தல் 6:1-2**

வெள்ளைக் குதிரையில் ஏறியிருப்பவன் ராஜாவாக கிரீடமணிந்து வருகிறான். அவன் ஜெயிக்கிறவனாகவும், ஜெயிப்பவனாகவும் இருப்பான்.

உலகத்திற்கே சமாதானம் கொண்டு வந்துவிட்டான், சமாதான பிரபு என்று புகழ்வார்கள். யூதர்களும் இவனை தங்கள் மேசியாவாக ஏற்றுக்கொள்வார்கள்.

இயேசு கிறிஸ்து தமக்கு சொந்தமானதிலே வந்தார். அவருக்கு சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை என்று இயேசு சொன்னார் (யோவான் 1:11).

இன்னொருவன் தன் சொந்த நாமத்திலே வருவான் (அந்தி கிறிஸ்து) அவனை யூதர்கள் மேசியாவாக ஏற்றுக்கொள்வார்கள் என்றும் கூறினார்.

எனவே அந்திகிறிஸ்து ஓர் யூதனாக இருக்க வேண்டும். இல்லாவிடில் யூதர்கள் அவனை மேசியாவாக ஏற்கமாட்டார்கள் அல்லவா.

**சமுத்திரத்திலிருந்து இந்த மிருகம் ஏறிவரும்:** (வெளிப்படுத்தல் 13:1)

வெளிப்படுத்தல் 17:15ன்படி தண்ணீர் என்பது ஜனங்களும், கூட்டங்களும், ஜாதிகளும், பாஷைக்காரரும் என்று இங்கே விளக்கம் கூறப்பட்டுள்ளது. மக்கள் ஆதரவுடன் வரும் அரசியல் தலைவனாக இருப்பான்.

**அந்த மிருகத்திற்கு 10 கொம்புகள் இருந்தன:** (வெளிப்படுத்தல் 13:1)

இது 10 ராஜாக்கள் (நாடுகள்) வெளிப்படுத்தல் 17:12 (ஐரோப்பிய சங்கம் என்று கருதப்படுகிறது).

**7 தலைகள் இருந்தன**

- 7 தலைகள் அந்த ஸ்திரீ உட்கார்ந்திருக்க ஏழு மலைகள். அவைகள் 7 ராஜாக்கள் (வெளி 17:9,10). 7 மலையின் மேல் கட்டப்பட்டுள்ளது ரோம்.
- வலுசர்ப்பமாகிய சாத்தான் தன் அதிகாரம் முழுவதையும் மிருகமாகிய அந்திகிறிஸ்துவுக்குக் கொடுப்பான் (வெளி 13:4).
- முழு உலகமும் அந்திகிறிஸ்துவை பின்பற்றும் (வெளி 13:3).
- முழு உலகமும் அவனை வணங்கும் (வெளிப்படுத்தல் 13:4,8).
- அந்த மிருகம் தேவனை தூஷிக்கும் (வெளிப்படுத்தல் 13:6).

- யுத்தம் பண்ணி, பரிசுத்தவான்களையும் மேற்கொள்ளும் (வெளிப்படுத்தல் 13:5,7)
- உலகிலுள்ள யாவர் மேலும் அவனுக்கு அதிகாரம் கொடுக்கப்படும் (வெளிப்படுத்தல் 13:7)
- இந்த மிருகத்தின் உருவில் சிலை உண்டாக்கப்படும். அந்த சிலை பேசும். அதை வணங்காதவர்களை கொல்லவும் அதற்கு சக்தி கொடுக்கப்படும். (வெளிப்படுத்தல் 13:14,15)

**மிருகத்தின் மேல் ஒரு பெண்**

- இந்த மிருகத்தின் மேல் ஒரு பெண் அமர்ந்திருந்தாள் (வெளிப்படுத்தல் 17:3).
- மிக ஆடம்பரமாய் காட்சியளித்தாள் (வெளிப்படுத்தல் 17:4).
- இவள் ஒரு வேசி (பலருடன் சேர்ந்து தன்னை கெடுத்தவள்). (வெளிப்படுத்தல் 17:4).
- மகா பாபிலோன் என்று பெயர் (பாபிலோனிய பழக்க வழக்கங்களை பின்பற்றுபவள்) (வெளிப்படுத்தல் 17:5).
- வேசிகளுக்கும், அருவருப்புகளுக்கும் தாய் (வெளி 17:5).
- பரிசுத்தவான்களுடைய இரத்தத்தை சிந்த வெறிகொண்டவள் (வெளிப்படுத்தல் 17:6).
- அந்த பெண் உட்கார்ந்திருப்பது ஏழு மலையில் (வெளி 17:9). ரோமாபுரிதான் 7 மலையில் கட்டப்பட்ட நகரம்.
- அந்த வேசி உட்கார்ந்திருப்பது தண்ணீர் என்பது உலகிலுள்ள பலமொழிகளைச் சேர்ந்த மக்கள் கூட்டம் (வெளி 17:15).
- 10 கொம்புகளான 10 நாடுகளும் அவளை அழித்து விடுவார்கள் (வெளிப்படுத்தல் 17:16).
- அந்த ஸ்திரீ பூமியில் ராஜாக்கள் மேல் ஆளுகிற நகரம் (ரோம்). (வெளிப்படுத்தல் 17:18).
- ரோம் நகரை தலைமையகமாகக் கொண்டுள்ள மதமே இங்கே ஒரு பெண்ணாக வர்ணிக்கப்பட்டுள்ளது.

**பூமியிலிருந்து எழும்பின வேறொரு மிருகம்:** (வெளி 13:12)

- இது அந்திகிறிஸ்துவின் நண்பனாக வரும் மதத்தலைவன் – கள்ளத்தீர்க்கதரிசி.

- இவன் பெரிய அற்புதங்களை செய்வான் (வெளி 13:13,14).
- வலுசர்ப்பத்தைப் போல (சாத்தானைப் போல) பேசுவான் (வெளிப்படுத்தல் 13:11).
- மிருகத்தை (அந்திகிறிஸ்துவை) எல்லாரும் வணங்கும்படி செய்வான் (வெளிப்படுத்தல் 13:12).
- மிருகத்திற்கு (அந்திகிறிஸ்துவுக்கு) சிலை செய்ய மக்களை உற்சாகப்படுத்துவான் (வெளிப்படுத்தல் 13:14).
- இவன் கள்ளத்தீர்க்கதரிசி (வெளிப்படுத்தல் 19:20).
- அதாவது உலகப்பிரகாரமான மார்க்கத்தலைவன்.

**அந்திகிறிஸ்துவின் எண் 666:** (வெளிப்படுத்தல் 13:16–18)

உலகப் பொருளாதார நிபுணனாக தன்னைக் காட்டிக்கொள்ளும் அந்திகிறிஸ்து கொடுக்கல், வாங்கல், வியாபாரம், வங்கிக் கணக்குகள் யாவற்றையும் சிறப்பாக செய்ய ஓர் முத்திரையை எல்லாரும் பெற ஆவண செய்வான். இந்த எண் 666 என்று வெளிப்படுத்தல் 16–18ல் கூறப்பட்டுள்ளது. இது நெற்றியிலோ, அல்லது வலது கையிலோ போடப்படும். இன்றுள்ள நவீன கருவிகள் மூலம் இவை எளிதாக உடலிலே போடப்படும். சில ஆண்டுகளுக்கு முன்பாக தற்போதுள்ள வங்கி கிரடிட் கார்டுகளைக் குறித்த பிரச்சனை எழும்பிற்று. இப்போதும் இந்த பிரச்சனைகள் இந்தியாவிலும், பல நாடுகளிலும் நடந்து கொண்டிருக்கின்றன.

**கிரடிட்கார்ட் நிலை என்ன**

1) தொலையக்கூடியது, 2) உடையக்கூடியது, 3) திருடப்படக்கூடியது, 4) மற்றவர்களால் தவறாகப் பயன்படுத்தும் ஆபத்து உண்டு, 5) அடிக்கடி புதுப்பிக்க வேண்டியிருக்கிறது.

எனவே இதற்கான மாற்றுத்திட்டத்தை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளார்கள். இதற்காக கோடிக்கணக்கான பணம் செலவு செய்யப்பட்டது. ஆயிரக்கணக்கான தகவல்கள் அடங்கிய "பயோ சிப்" என்ற ஒன்றைக் கண்டுபிடித்தார்கள். இது ஒரு அரிசி அளவுதான் சிறியதாக இருக்கும். இதை மனித உடலில் இணைத்துவிட்டால் மேற்கூறிய பிரச்சனைகள் ஒன்றும் எழாது. இதை உடலில் எந்த பகுதியில் வைக்கலாம் என்று ஆராய்ந்தார்கள். நெற்றி அல்லது வலது கைதான்

பொருத்தமாயிருக்கும், இடது கை கூட சரியில்லை, உடலில் இரத்த ஓட்டத்தின் சீர்நிலை மற்றும் பல காரியங்களை முன்னிட்டு இப்படி தீர்மானித்தார்கள். இவர்கள் வேதத்தை நம்பாதவர்கள், வேதத்தில் இப்படி ஒரு குறிப்பு இருக்கிறது என்று கூட இவர்களுக்குத் தெரியாது. ஆனால் 2000 ஆண்டுகளுக்கு முன்பே இது முன்னுரைக்கப்பட்டுள்ளது. இந்த "பயோசிப்" தற்போது பல நாடுகளில் மிருகங்களின் உடலில் பொருத்தியுள்ளார்கள். வெகு விரைவில் மனித உடலில் பதிக்க வேலை நடந்து வருகிறது.

இதை நெற்றியிலோ, வலது கையிலோ பதித்துவிட்டால் வெளியே தெரியாது. ஒருவருடைய சகல புள்ளிவிபரங்களும் அதிலே பதிவாகியிருக்கும். அதை வாசிப்பதற்கென்று மிஷின்கள் இருக்கின்றன.

பிரான்ஸ் நாட்டில் பாரிஸ் நகரில் நடந்த ஓர் மாநாட்டில் அப்ளைட் டிஜிட்டல் சொலுஸன்ஸ் (Applied Digital Solutions) என்ற கம்பெனியின் அதிகாரி 2003ல் இப்படி ஓர் சிப்பை அறிமுகம் செய்தார் "தொலைக்க முடியாத கருவி" என்று. இதை விளக்கிக் கூறினார். இந்த சிப்பில் ரேடியோ அலைகளை வெளியிடும் கருவியால் தொட்டால் இந்த சிப்பில் ரேடியோ அலைகள் நுழைந்து அதிலுள்ள தகவல்களை வெளியிடும். இதற்கு "Radio Frequency Identification" (RFID) என்று பெயர். ஒருவருடைய பெயர், இரத்தக் குரூப், பிறந்த நாள், விலாசம், படிப்பு, தொழில், வங்கிக் கணக்கு எண், பாஸ்போர்ட் எண் போன்ற ஏராளமான தகவல்கள் இந்த சிப்பில் பதியப்பட்டிருக்கும். வலி இல்லாமல் இதை சில நிமிடங்களில் உடலில் பதித்துவிடலாம். ஒரு அரிசி அளவுதான் இருக்கும், வெளியே தெரியாது.

ரயில்வே ஸ்டேஷன், விமான நிலையம், வங்கி, கடைகள், உணவு விடுதிகள் போன்ற எல்லா இடங்களிலும் இதை வாசிக்கும் ஸ்கேனர் இருக்கும். குறிப்பிட்ட நபர் யார் என்பதை ஒரு வினாடியில் தெரிந்துவிடும். ஒருவர் எந்த இடத்தில் இருக்கிறார் என்று ரேடியோ அலைகள் மூலம் கண்டுபிடித்துவிடலாம். குற்றவாளிகளை, தீவிரவாதிகளை எங்கிருந்தாலும் எளிதில் கண்டுபிடித்துவிடலாம். பணம் கையில் எடுத்துச் செல்ல வேண்டியதில்லை. இந்த பயோ சிப் மூலம் பொருட்களை வாங்கலாம்.

அந்திகிறிஸ்து ஐரோப்பிய ஐக்கிய நாடுகளின் (European Union) தலைவனாக தெரிந்தெடுக்கப்படுவான். அவன் ஒரு யூதனாக இருப்பான். அப்படியானால் மட்டுமே யூதர்கள் அவனை மேசியாவாக ஏற்றுக் கொள்வார்கள்.

**உபத்திரவ காலத்தின் (7 ஆண்டுகளின்) பிந்தின 3 1/2 ஆண்டுகள் - மகா உபத்திரவம்**

அந்தி கிறிஸ்து முதல் 3 1/2 ஆண்டுகளிலும் நல்லவன் போல நடிப்பான். பிந்தின 3 1/2 ஆண்டுகள் குறிப்பாக யூதர்களுக்கு மகா உபத்திரவ காலமாக இருக்கும். இதைக் குறித்து தானியேல், வெளிப்படுத்தின விசேஷம் ஆகிய புஸ்தகங்களில் பார்க்கலாம்.

- தானியேல் 9:27 – அந்த வாரம் (70வது வாரம்) பாதி சென்றபோது 3/2 வருடங்கள் சென்றபோது...
- தானியேல் 12:7 – ஒரு காலம், காலங்கள், அரைக்காலம் ஒரு காலம் என்பது ஒரு வருடம், காலங்கள் என்பது 2 வருடம், அரைக்காலம் என்பது 1/2 வருடம். (3 1/2 வருடங்கள்).
- வெளிப்படுத்தல் 11:2 – 42 மாதங்கள்
- வெளிப்படுத்தல் 11:3 – 1260 நாட்கள்
- வெளிப்படுத்தல் 12:6 – 1260 நாட்கள்
- வெளிப்படுத்தல் 12:14 – ஒரு காலம், காலங்கள் அரைக்காலம்
- வெளிப்படுத்தல் 13:5 – 42 மாதங்கள்

இவை யாவும் உபத்திரவ காலத்தின் பிந்தின 3 1/2 வருடங்களை குறிப்பிடுபவை.

எரேமியா 30:6–8ல் இந்த காலம் யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம் என்று கூறப்பட்டுள்ளது. அந்திகிறிஸ்துவை மேசியா என்று யூதர்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் போது அவன் தேவாலய பலியையும், காணிக்கையையும் ஒழியப் பண்ணுவேன் (தானியேல் 9:27).

மத்தேயு 24:15–22 பாழாக்கும் அருவருப்பாகிய அந்தி கிறிஸ்து பரிசுத்த ஸ்தலத்தில் நிற்பான். தேவனுக்கு மேலாகத் தன்னை உயர்த்தி,

ஆலயத்தில் தேவனைப் போல உட்காருவான், நானே கடவுள் என்பான் (2 தெச 2:4).

அப்பொழுது தான் அந்திகிறிஸ்து யார் என்பதை யூதர்கள் கண்டு, அவனை எதிர்ப்பார்கள். அவன் அவர்களை பயங்கரமாக உபத்திரவப்படுத்துவான்.

**உபத்திரவ காலத்தின் பிந்திய 3 1/2 வருடங்களில் இந்த உலகில் நடப்பதென்ன?**

- யூதர்களை பயங்கரமாய் கொடுமைப்படுத்துவான். எனவே யூதர்கள் வனாந்தரத்திற்கு ஓடிப்போவார்கள். (வெளி 12:5)
- யூதர்களை பாதுகாக்க கர்த்தர் வனாந்தரத்திலே ஓர் இடத்தை ஆயத்தப்படுத்தியிருப்பார்.
- யூதர்கள் ஓடிப்போவதற்கு கர்த்தர் வேகமான வாகனங்களை ஒழுங்கு செய்திருப்பார். (பறந்து போகும்படியான பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் கொடுக்கப்பட்டது). (வெளிப்படுத்தல் 13:14).
- சாத்தான் யூதர்களை அழிக்க பெரிய வெள்ளத்தை அனுப்புவான் (வெளிப்படுத்தல் 12:15).
- பூமி பிளந்து அந்த வெள்ளத்தை விழுங்க கர்த்தர் அற்புதம் செய்வார் (வெளிப்படுத்தல் 12:16)
- பூமியிலுள்ள மக்கள் யாவரும் மிருகத்தை (அந்தி கிறிஸ்துவை) வணங்குவார்கள் (வெளிப்படுத்தல் 13:4,8).
- அந்தி கிறிஸ்துவுக்கு சிலை செய்து உலக மக்கள் யாவரும் வணங்குவார்கள். அந்த சிலை பேசும். அதை வணங்காதவர்களை கொலை செய்ய அந்த சிலைக்கு சக்தி இருக்கும் (வெளி 13:15).
- அந்திகிறிஸ்துவின் எண் 666–ஐ தங்கள் நெற்றியிலோ, வலது கையிலோ, பெற்றிராத அனைவரும் எந்தப் பொருளையும் வாங்க விற்க முடியாது.
- தேவனுடைய விசேஷித்த வல்லமை பெற்றிருக்கும் இரண்டு சாட்சிகள் தேவனுக்காக வல்லமையான காரியங்களை செய்வார்கள். யாரும் அவர்களை எதிர்த்து நிற்க முடியாது.

அவர்கள் வாயிலிருந்து அக்கினி புறப்படும். அவர்கள் கட்டளையிட்டால் மழை பெய்யும். தண்ணீர் இரத்தமாக மாறும். உலகம் அவர்களைக் கண்டு நடுங்கும். பின்பு இவர்கள் அந்தி கிறிஸ்துவால் கொல்லப்படுவார்கள். இவர்கள் உடல்களை உலகமெங்கும் மக்கள் பார்ப்பார்கள். 3 1/2 நாட்களுக்குப் பின்பு இவர்கள் உயிர் பெற்று பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள். (வெளிப்படுத்தல் 11:1–13).

- வெளிப்படுத்தல் 6–18 அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள 7 முத்திரைகள், 7 எக்காளங்கள், 7 கோபகலசங்கள் ஆகியவை இந்த நாட்களிலே நிறைவேறும்.

**5] இந்த 7 வருடங்களில் மத்திய ஆகாயத்தில் நடப்பதென்ன?**

உபத்திரவ காலத்திற்கு முன்பே தேவனுடைய பிள்ளைகள் (சபை) மத்திய ஆகாயத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று பார்த்தோம். உலகத்தில் வாழும் மக்கள் உபத்திரவத்திற்கு ஊடே போகும்போது மத்திய ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட பரிசுத்தவான்களுக்கு என்ன நடக்கும் என்று பார்ப்போம்.

**தங்கள் கிரியைகளுக்கேற்ற பலனடைவார்கள்** (2கொரிந்தியர் 5:10)

உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் தங்கள் தங்கள் கிரியைகளுக்கேற்ற பலன்களை அடைவார்கள். கர்த்தருக்காக என்னென்ன செய்தோமோ அதற்கேற்ற பலன் கிடைக்கும்.

1. இயேசுவுக்காக ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணினதற்கான பலன் (தானியேல் 12:4; 2தெசலோனிக்கேயர் 2:19,20).
2. அவருக்காக பாடுபட்டவர்கள். (1தீமோத்தேயு 1:12)
3. சோதனையில் விழுந்து போகாமல் வெற்றி வாழ்வு வாழ்ந்ததற்கான பலன் (யாக்கோபு 1:12; வெளிப்படுத்தல் 2:10).
4. நமக்குக் கொடுக்கப்பட்ட பணத்தை எப்படி செலவு செய்கிறோம் என்பதற்கான பலன் (1தீமோத்தேயு 6:17–19).
5. நம்முடைய நேரத்தை கர்த்தருக்காக, ஊழியங்களுக்காக செலவு செய்ததற்கான பலன் (சங்கீதம் 90:12).
6. பெற்ற ஊழிய பொறுப்புக்களை எப்படி நிறைவேற்றினோம்.

7. பெற்ற தாலந்து வரங்களை எப்படி தேவ நாம மகிமைக்காக பயன்படுத்தினோம் (மத்தேயு 25:14–25).

8. கர்த்தருக்காக கடினமாக உழைத்தல் (எபிரெயர் 6:10).

9. கிறிஸ்தவ ஓட்டத்தை வெற்றியாக ஓடி முடித்ததற்காக (1கொரிந்தியர் 9:25–27)

10. விசுவாசத்தை முடிவு பரியந்தம் காத்துக் கொண்டதற்கான (2 தீமோத்தேயு 4:7).

**ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம்** (வெளிப்படுத்தல் 21:1; 22:7)

இயேசு கிறிஸ்துவாகிய மணவாளனுடன் சபையாகிய மணவாட்டி ஒன்றாய் மத்திய ஆகாயத்தில் இணைவதையே ஆட்டுக்குட்டியான வருடைய கலியாணம் என்று கூறப்பட்டுள்ளது.

7 வருட உபத்திரவ காலம் முடிந்தவுடனேயே இயேசு கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களோடு பகிரங்கமான உலகத்திற்கு வருவார்.

## 6] இயேசு கிறிஸ்துவின் பகிரங்க வருகை

***"அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின் மேல் நிற்கும். அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம். அதினாலே, ஒரு பாதி வடபக்கத்திலும், ஒரு பாதி தென்பக்கத்திலும் சாயும்". சகரியா 14:4***

**இயேசுவின் இரண்டாம் வருகைக்கும், பகிரங்க வருகைக்கும் உள்ள வித்தியாசங்கள்**

| | இயேசுவின் இரகசிய வருகை | | இயேசுவின் பகிரங்க வருகை |
|---|---|---|---|
| 1. | இயேசு மத்திய ஆகாயத்திற்கு வருவார். 1தெச 4:16 | 1. | இயேசு பரலோகத்திலிருந்து பூமிக்கு வருவார். ஒலிவமலையின் மீது வந்து இறங்குவார். சகரியா 14:4 |
| 2. | மரித்த, மறுரூபமாக்கப்பட்ட பரிசுத்த வான்கள் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக ஆகாயத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவோம். 1தெச 4:17 | 2. | இயேசு பரிசுத்தவான்களோடு கூட வருவார். சகரியா 14:5; யூதா 15 |

| | | | |
|---|---|---|---|
| 3. | மின்னல் தோன்றுவதுபோல மனுஷ குமாரன் வருகை இருக்கும். மத்தேயு 24:27 | 3. | மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். வல்லமை யோடும், மிகுந்த மகிமையோடும் வானத்தில் மேகங்களில் வருவார். மத்தேயு 24:30 |
| 4. | இரவில் திருடன் வருகிற விதமாய் கர்த்தருடைய நாள் வரும். 1தெச 5:12. உலகில் ஒருவரும் அவரைப் பார்க்கமாட்டார்கள். | 4. | மேகங்களுடனே வருகிறார். கண்கள் யாவும் அவரைக் காணும். வெளிப்படுத்தல் 1:7 |
| 5. | ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப் பொழுதிலே இது நடைபெறும். | 5. | மனுஷகுமாரன் தமது மகிமையுடன் வந்து சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். மத்தேயு 25:31 |
| 6. | ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து (3ம் வானம்) இறங்கி வருவார். | 6. | தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும் வருவார். 2தெச 1:8 |
| 7. | சபையை எடுத்துக்கொள்ள வருகிறார் | 7. | சபையுடன் வருகிறார். யூதா 15 |
| 8. | மணவாளனாக வருகிறார். (மத்தேயு 25:6,10) சபையைக் காத்துக் கொள்ள (வெளிப்படுத்தல் 19:7,9) | 8. | ராஜாதி ராஜாவாக பூமியை அரசாள வருகிறார். வெளி 19:11–16 |

**7) அர்மகெதோன் யுத்தம்** (வெளிப்படுத்தல் 16:16)

இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகைக்கு முன் நடைபெறும் என்று எதிர்பார்ப்பது 3ம் உலகப் போர். மகா உபத்திரவ காலத்தின் முடிவில் நடைபெறுவது அர்மகெதோன் யுத்தம். அர்மகெதோன் என்ற கிரேக்க வார்த்தைக்கு மெகிதோவின் மலை என்று எபிரேய மொழியில் வருகிறது. இந்த அர்மகெதோன் என்ற இடம் இஸ்ரவேலின் வடபகுதியில் உள்ளது. இந்த இடத்தில் யுத்தம் நடைபெறும்.

7 ஆண்டுகள் இந்த உலகம் அந்தி கிறிஸ்துவின் அதிகாரத்தில் நடக்கும் எனப் பார்த்தோம். ஐரோப்பிய 10 நாடுகள் கூட்டமாக நடத்தும் ஆட்சியின் முடிவில் இது சம்பவிக்கும்.

ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஐபிராத் என்னும் பெரிய நதியின் மேல் ஊற்றினான். அப்பொழுது சூரியன் உதிக்குந் திசையிலிருந்து வரும் ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படி அந்த நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று (வெளிப்படுத்தல் 16:12). ஈரான், ஈராக், பாகிஸ்தான் போன்ற நாடுகள் இஸ்ரவேலுக்கு விரோதமாக புறப்பட்டு வரும். இதைத்தான் கிழக்கிலிருந்து சில நாடுகள் தங்கள் சேனையை அர்மகெதோன் என்ற இடத்திற்கு அனுப்பும் என்று கூறப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல, பூலோகமெங்குமுள்ள ராஜாக்களும் இதில் கலந்து கொள்வார்கள். (வெளிப்படுத்தல் 16:14)

இந்த யுத்தத்தில் 1600 ஸ்தாதி தூரத்திற்கு (ஒரு ஸ்தாதி – ஒரு பர்லாங், எனவே 200 மைல் – 320 கி.மீ) இரத்தம் ஓடும். குதிரைகளின் கடிவாளம் மட்டும் பெருகி வரும் என்று வெளிப்படுத்தல் 14:20ல் பார்க்கிறோம்.

உலகம் இதுவரை கண்டிராத மகா பெரிய பூமியதிர்ச்சி உண்டாகும். தீவுகள் இடம் மாறும், மலைகள் காணப்படாமற் போகும் (வெளி 16:18). இது பயங்கர அணு ஆயுதப் போராக இருக்கும் (வெளி 16:20).

ஐரோப்பிய ஐக்கிய நாடுகளும், கிழக்கிலிருந்து வந்த ராணுவங்களும், உலகமெங்குமுள்ள சேனையும் இஸ்ரவேலுடன் யுத்தம் பண்ண கூடிவரும் போது இயேசு மேகங்களுடனே தம்முடைய பரிசுத்தவான்களுடன் வந்து இறங்குவார். கண்கள் யாவும் அவரைக் காணும். அவர் அர்மெகதோனில் கூடி வரும் சேனைகளை முறியடிப்பார். (வெளிப்படுத்தல் 17:14)

**அந்திகிறிஸ்து, கள்ளத்தீர்க்கதரிசியின் முடிவு**

அர்மகெதோன் யுத்த முடிவில் இதுவரையில் உலகத்தை மேலும் பாழாக்கின அரசியல் தலைவனாகிய அந்தி கிறிஸ்துவும் (மிருகம்), மார்க்கத் தலைவனாகிய கள்ளத்தீர்க்கதரிசியும் பிடிபட்டு, கந்தகம் எரிகிற அக்கினிக் கடலிலே உயிரோடே தள்ளப்படுவார்கள் (வெளி 19:20). இத்துடன் இவர்கள் சரித்திரம் முடிகிறது.

***"அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின் மேல் நிற்கும். அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு***

மேற்காய் எதிராகப் பிளந்துபோம். அதினாலே, ஒரு பாதி வடபக்கத்திலும், ஒரு பாதி தென்பக்கத்திலும் சாயும்.

அப்பொழுது என் மலைகளின் பள்ளத்தாக்கு வழியாய் ஓடிப்போவீர்கள். மலைகளின் பள்ளத்தாக்கு ஆத்சால் மட்டும் போகும். நீங்கள் யூதாவின் ராஜாவாகிய உசியாவின் நாட்களில் பூமியதிர்ச்சிக்குத் தப்பி ஓடிப்போனது போல் ஓடிப்போவீர்கள். என் தேவனாகிய கர்த்தர் வருவார். தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்.

அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார். அந்நாளிலே ஒரே கர்த்தர் இருப்பார். அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்" (சகரியா 14:4,5,9).

"ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான். அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின, அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின". *(வெளி 11:15).*

"வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரிகமும், ஆளுகையும், மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும். அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம், சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும் என்றான்". *(தானியேல் 7:27).*

## 8. இயேசு கிறிஸ்துவின் 1000 வருட ஆட்சி

"முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும், பரிசுத்தவானுமாயிருக்கிறான், இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை, இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்". வெளிப்படுத்தல் *20:6*

உபத்திரவ கால முடிவிலே இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்களோடே கூட இந்த உலகத்திற்கு வந்து 1000 வருடம் ஆட்சி செய்வார். வெளிப்படுத்தல் 20:1–7

அ. இயேசு கிறிஸ்து ராஜாதிராஜாவாக இந்த உலகத்தை ஆளுகை செய்வார்

இயேசு கிறிஸ்துவின் 1000 வருட ஆட்சியில் உலகம் இதுவரை கண்டிராத ஆசீர்வாதங்களைப் பெற்று செழிப்படையும்.

*"அப்பொழுது கர்த்தர், பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார். அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார். அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்". சகரியா 14:9*

*"ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான், அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின. அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின". வெளி 11:15*

ஆ. எருசலேம் உலக தலைநகரமாயிருக்கும்: மீகா 4:7

*"கர்த்தர் சீயோனைத் தெரிந்துகொண்டு, அது தமக்கு வாசஸ்தலமாகும்படி விரும்பினார். இது என்றென்றைக்கும் நான் தங்கும் இடம், இதை நான் விரும்பினபடியால், இங்கே வாசம்பண்ணுவேன்". (சங்கீதம் 132:13,14).*

**இயேசு கிறிஸ்துவின் 1000 வருட ஆட்சியின் சிறப்புத் தன்மைகள்**

**1. தீமை செய்யும் சக்திகள் இருக்காது:**

சாத்தானின் அரசியல் தலைவனாக செயல்பட்ட அந்திகிறிஸ்துவும் மார்க்கத்தலைவனாக இருந்த கள்ளத்தீர்க்கதரிசியும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டுவிட்டார்கள். வெளிப்படுத்தல் 19:20

பிசாசென்றும், சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பமும் பிடிபட்டு 1000 வருடம் பாதாளத்திலே தள்ளப்படுவான். வெளிப்படுத்தல் 20:2

எனவே தீமை செய்யும் பிசாசின் வல்லமை செயல்படாது. உலகமெங்கும் மிகுந்த ஆசீர்வாதம் உண்டாயிருக்கும்.

**பூமி தன் பலனைத் தரும்**

பூமி உன்னிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும் என்று தேவன் ஆதாமுக்கு சொன்னார் (ஆதியாகமம் 3:17). பூமி பாவம் செய்யவில்லை. மனிதனுடைய பாவத்தால் சாபமடைந்தது. பவுல் ரோமருக்கு இதைத் தெளிவாய் எழுதியுள்ளார்.

*"மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது. அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று*

*விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக் கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது". ரோமர் 8:19–22*

சாபம் நீக்கப்பட்டதால் விவசாயம் மிக சிறப்பாய் நடைபெறும். மரங்கள் தாராளமாய், ஏராளமாய் கனி கொடுக்கும். செடிகள், பயிர் வகைகள் நல்ல பலனைத் தரும். பொன் விளையும் பூமி என்று சொல்லப்படுவது அப்போதுதான் உண்மையாய் நடக்கும். பாவத்தினால் உண்டான முள்ளும் குறுக்கும் இருக்காது.

*"அப்பொழுது நீ நிலத்தில் விதைக்கும் உன் விதைக்கு அவர் மழையையும், நிலத்தின் பலனாகிய ஆகாரத்தையும் தருவார். அது கொழுமையும் புஷ்டியுமாய் இருக்கும். அக்காலத்திலே உன் ஆடுமாடுகள் விஸ்தாரமான மேய்ச்சலுள்ள ஸ்தலத்திலே மேயும்". ஏசாயா 30:23*

**மிருகங்களின் தன்மை முற்றிலும் மாற்றப்படும்**

இப்போதுள்ள மிருகங்களில் பல கொடூரத் தன்மையுடையவைகளாய் இருக்கின்றன. சிங்கம், புலி, கரடி போன்ற மிருகங்கள் சாதுவான மற்ற மிருகங்களைக் கொன்று சாப்பிடுகின்றன. காடுகளிலுள்ள மான்கள் எல்லாம் இந்தக் கொடிய மிருகங்களுக்கு உணவாகின்றன. அனிமல் பிளானட் (Animal Planet) என்ற தொலைக்காட்சி சேனலில் இதைத் தெளிவாய் காணலாம்.

ஆயிர வருட ஆட்சியில் இந்த கொடிய சுபாவங்கள் மாற்றப்படும். *"அப்பொழுது ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக் குட்டியோடே படுத்துக் கொள்ளும். கன்றுக்குட்டியும், பாலசிங்கமும், காளையும் ஒருமித்திருக்கும். ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான். பசுவும், கரடியும் கூடி மேயும், அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக் கொள்ளும், சிங்கம் மாட்டைப் போல் வைக்கோல் தின்னும். பால் குடிக்குங் குழந்தை விரியன் பாம்பு வளையின் மேல் விளையாடும், பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை*

*வைக்கும். என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை, சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்".* **ஏசாயா 11:6 – 9**

ஆட்டுக்குட்டியைக் கண்டால் கொல்லத் துடிக்கும் ஓநாய் அதனுடன் தங்கும். புலி வெள்ளாட்டுக்குட்டியுடன் நட்பாகப் பழகும். பாலசிங்கமும் ஐக்கியமாய் செயல்படும்.

(இந்த நாட்களிலே ஒரு கிறிஸ்தவன், அடுத்த சபைக் கிறிஸ்தவனைக் கண்டாலே எரிச்சல்படுகிறான். ஒரு சபைக்கும் அடுத்த சபைக்கும் சண்டை, பிரிவினை)

சிங்கம் வெஜிடேரியனாக மாறிவிடும். பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்ற நிலை மாறி, சிறுபிள்ளைகள் கூட பாம்பு புற்றில் கைபோட்டு விளையாடும். ஏனெனில் பாம்பு மாறிவிட்டது.

(இப்போது மாமியாரைக் கண்டால் மருமகள் வலுசர்ப்பத்தைப் போல் பார்க்கிறாள்).

மனிதனுக்கும், மிருகத்திற்குமுள்ள பகையும் இருக்காது. இன்று புலி மனிதனைக் கண்டால் கொல்லத் துடிக்கும். மனிதனும் மிருகங்களைக் கண்டால் கொன்று தீர்க்க முயலுகிறான். இந்த பகையெல்லாம் முற்றிலும் நீக்கப்படும்.

*"ஓனாயும், ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயும், சிங்கம் மாட்டைப் போல வைக்கோலைத் தின்னும், புழுதி சர்ப்பத்துக்கு இரையாகும், என் பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்கு செய்வதுமில்லை, கேடுண்டாக்குவதுமில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.* **ஏசாயா 65:25**

**மனிதருடைய ஆயுசு நாட்கள் நீடிக்கப்படும்**

*"அங்கே இனி அற்ப ஆயுசுள்ள பாலகனும், தன் நாட்கள் பூரணமாகாத கிழவனும் உண்டாயிரார்கள், நூறு வயது சென்று மரிக்கிறவனும் வாலிபனென்று எண்ணப்படுவான், நூறு வயதுள்ளவனாகிய பாவியோ சபிக்கப்படுவான்".* **ஏசாயா 65:20**

சாபம் நீக்கப்பட்டதால் மனிதர்கள் நீண்ட காலம் வாழ்வார்கள். ஜலப்பிரளயம் உண்டானதற்கு முன்பு மனிதர்கள் நீண்ட காலம்

வாழ்ந்தார்கள் எனப் பார்க்கிறோம். ஆதாம் 930 வருடம் வாழ்ந்தான் (ஆதியாகமம் 5:5), மெத்தூசலா 963 வருடம் (ஆதியாகமம் 5:27), நோவா 950 வருடம் (ஆதியாகமம் 9:29) வாழ்ந்தார்கள். இதுபோல இயேசு கிறிஸ்துவின் ஆட்சியில் மனிதர்கள் நீண்ட காலம் வாழ்வார்கள். மக்கள் தொகை பெருகும். ஆனால் மரணம் இருக்கும். இயேசுவை ஏற்றுக்கொண்டு மரிக்கிறவர்கள் பின்பு உயிர்த்து, புதிய வானம், புதிய பூமியிலே பங்கடைவார்கள்.

**வியாதிகள் இருக்காது - மருத்துவமனைகள் இருக்காது**

பாவத்தின் விளைவினால் வந்ததுதானே வியாதி. வியாதிகளைக் கொண்டு வரும் சத்துருவின் வல்லமை இல்லாததால் உலகில் வியாதி இருக்காது (ஏசாயா 33:24). வியாதிகள் இல்லாததால் மருத்துவர்களுக்கு வேலை இல்லை. எனவே மருத்துவமனைகள் யாவும் மூடப்படும். இப்பொழுது எங்கு பார்த்தாலும் மருத்துவமனைகளும், மருந்துக் கடைகளும் தான் இருக்கின்றன.

**அங்கவீனர்கள், இருக்கமாட்டார்கள்**

***அக்காலத்திலே செவிடர் புஸ்தகத்தின் வசனங்களைக் கேட்பார்கள், குருடரின் கண்கள் இருளுக்கும், அந்தகாரத்துக்கும் நீங்கலாகிப் பார்வையடையும். ஏசாயா 29:18***

***"அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம். அப்பொழுது முடவன் மானைப் போல் குதிப்பான், ஊமையன் நாவும் கெம்பீரிக்கும், வனாந்தரத்திலே தண்ணீர்களும், கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும்". ஏசாயா 35:5,6***

**தீய காரியங்கள் இருக்காது**

குடி, வெறி இருக்காது – சாராயக்கடை, ஒயின்ஷாப் இருக்காது. பீடி, சிகரெட், சுருட்டு இருக்காது. சினிமா தியேட்டர்கள் இருக்காது. கொலை, கொள்ளை, திருட்டு, லஞ்சம், ஊழல் இருக்காது.

**யுத்தம் இருக்காது**

***"எப்பிராயீமினின்று இரதங்களையும், எருசலேமினின்று குதிரைகளையும் அற்றுப் போகப்பண்ணுவேன், யுத்த வில்லும் இல்லாமற்போகும். அவர் ஜாதிகளுக்குச் சமாதானம் கூறுவார். அவருடைய ஆளுகை ஒரு சமுத்திரந் தொடங்கி மறு***

*சமுத்திரம் வரைக்கும், நதி தொடங்கி பூமியின் எல்லைகள் பரியந்தமும் செல்லும். சகரியா 9:10*

இன்று உலக நாடுகள் ஒரு மணி நேரத்திற்கு 900 கோடி ரூபாய் செலவு செய்கிறார்கள். சமாதானப் பிரபுவாகிய இயேசு கிறிஸ்து ஆட்சி செய்வதால் உலகில் எங்கும் யுத்தங்கள் இருக்காது. சமாதானம் இருக்கும். எனவே யுத்த தளவாடங்களுக்குப் பயன்படும் பணமெல்லாம் மக்கள் முன்னேற்றத்திற்கு செலவிடப்படும்.

**வறுமை இருக்காது**

பூமி மிகுந்த பலனைத் தரும். எனவே பட்டினி, பசி இருக்காது. எல்லாரும் சகல விதங்களிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள்.

**உலகில் 2-வித சரீர நிலையில் வாழ்வார்கள்**

மறுரூபமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் இயேசுவுடன் ஆட்சி செய்வார்கள். அவர்களுடைய சரீரம் மறுரூபமாக்கப்பட்டதால் அவர்கள் திருமணம் செய்யாதவர்களாயிருப்பார்கள். அவர்களுக்கு பிள்ளைகள் இருக்கமாட்டார்கள். மறுரூபமாக்கப்பட்ட சரீரத்திலிருந்து பல இடங்களுக்கும் பயணம் செய்வார்கள். ஒரு வினாடியில் இன்னொரு நாட்டிற்குப் போய்விடுவார்கள். மற்ற மக்கள் இயற்கை சரீரத்துடன் வாழ்வார்கள். குடும்பம் இருக்கும், பிள்ளைகள் பெறுவார்கள்.

**உலகமுழுவதும் தேவனை அறிந்திருக்கும்**

என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை, சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். ஏசாயா 11:9

## இயேசு கிறிஸ்துவின் ஆயிர வருட முடிவில் சாத்தானின் விடுதலையும் முடிவும்

**கோகு, மாகோகு கூட்டத்தாரின் கடைசி யுத்தம்**

*அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி, பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும், மாகோகையும் மோசம் போக்கும்படிக்கும், அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக் கொள்ளும்படிக்கும் புறப்படுவான், அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும்.*

*அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்து கொண்டார்கள். அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப் போட்டது. மேலும் அவர்களை மோசம் போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசிமாயிருக்கிற இடமாகிய அக்கினியும், கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள். (வெளிப்படுத்தல் 20:7–10).*

இயேசு கிறிஸ்துவின் ஆயிர வருட ஆட்சிக்குமுன் சாத்தான் 1000 வருடம் பாதாளத்தில் அடைக்கப்படுவான் என்பதை வெளிப்படுத்தல் 20:2ல் பார்த்தோம். சாத்தானின் செயல்பாடுகள் இல்லாத ஆசீர்வாதமான உலகமாய் 1000 வருடம் இருக்கும். அதற்குப் பின் சாத்தான் விடுதலையாவான். ஏன் ஆண்டவர் அவனை மறுபடியும் விடுதலையாக்குகிறார் என்று பலர் கேட்பார்கள்.

இதற்கான பதிலை இரண்டு காரணங்களால் விளக்கலாம்:

**1. சாத்தான் ஒருபோதும் மனந்திரும்பமாட்டான்**

1000 வருடம் சாத்தான் பாதாளத்தில் அடைக்கப்பட்டு தண்டனை பெற்ற பின்பும் அவனை விடுதலையாக்கினவுடன் அவன் மறுபடியும் இயேசு கிறிஸ்துவினுடன் யுத்தம் செய்ய உலகிலுள்ள மக்களையெல்லாம் கூட்டிச் சேர்ப்பதாக பார்க்கிறோம். சிலருக்கு எத்தனை தண்டனை கொடுத்தாலும் திருந்தமாட்டார்கள் என்பதைக் காண்கிறோம். இதுதான் பிசாசின் சுபாவம். தாங்கள் செய்த கொலைக்கு, கொள்ளைக்கு, தீமைக்குத் தண்டனை பெற்று பல வருடங்கள் சிறைச்சாலையிலிருந்தாலும் வெளியே வந்த பின்பு அதே பாவங்களைச் செய்கிறார்கள். சிலர் சாகும் வரை திருந்துவதில்லை. சாத்தானுக்கும் ஓர் சந்தர்ப்பம் கொடுத்துப் பார்க்கிறார். தான் பெற்ற தண்டனையினால் அவன் மனம் மாறி திருந்தினானா? இல்லை.

**2. ஆயிர வருட ஆட்சியின் நன்மைகளை, அனுபவித்த மக்களும் மனந்திருந்தவில்லை**

அந்தி கிறிஸ்துவாகிய அரசியல் தலைவனும் கள்ளத் தீர்க்கதரிசியாகிய மார்க்கத் தலைவனும் பிடிபட்டு கந்தகம் எரிகிற

அக்கினிக் கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள் (வெளி 19:20). சாத்தானும் பாதாளத்திலே தள்ளப்பட்டான் (வெளிப்படுத்தல் 20:2). இயேசு கிறிஸ்துவின் தலைமையில் நடந்த 1000 வருட ஆட்சியில் இதுவரை உலகம் கண்டிராத நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் உலக மக்கள் பெற்று அனுபவித்து வந்தார்கள். ஆனால் சாத்தான் கட்டவிழ்த்து விடப்பட்ட உடனே அவன் மக்களை தன் பக்கம் இழுக்க ஆரம்பித்தபோது கடற்கரை மணலத்தனையான மக்கள் அவனுடன் சேர்ந்து கொண்டது மிகுந்த வேதனையானது. தேவனுடைய சகல ஆசீர்வாதங்களையும் அனுபவித்தாலும் மனந்திரும்பாத பெருங்கூட்டம் எப்போதும் இருக்கும் என்பதற்கு இது ஓர் ஆணித்தரமான எடுத்துக்காட்டு.

1000 வருடம் அனுபவித்த சகல ஆசீர்வாதங்களுக்கும் காரணமாயிருந்த, ராஜாதி ராஜாவாக ஆட்சி செய்த, இயேசு கிறிஸ்துவுக்கு விரோதமாக திரள் கூட்டம் கூடியது.

இவர்கள் உலக முழுவதும் இருந்தார்கள் என்பதை வெளிப்படுத்தல் 20:9ல் பார்க்கிறோம்: *அவர்கள் பூமியெங்கும் பரவி, பரிசுத்தவான் களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்து கொண்டார்கள்; அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப் போட்டது.*

பரிசுத்தவான்களுக்கு விரோதமாக, எருசலேம் நகருக்கு (பிரியமான நரகம்) விரோதமாக பெரிய சேனையாக வந்து வளைந்து கொண்டார்கள்.

இப்போது பெரிய யுத்தம் ஒன்றும் நடைபெறவில்லை. வானத்திலிருந்து தேவன் அக்கினியை அனுப்பினார். எதிர்த்து வந்த அத்தனை பேரும் எரிந்து சாம்பலானார்கள். ஒரு வினாடியிலே கதை முடிந்தது. தேவன் பொறுமையுள்ளவர்தான். ஆனால் அவருடைய கிருபையின் நாட்கள் முடியும்போது இனி இந்த மக்களுக்கு எத்தனை ஆண்டுகள் நன்மை செய்தாலும் பயனில்லை என்று அவர் உணரும்போது ஒரு வினாடியில் அத்தனை பேரையும் அழிக்கத் தயங்கவில்லை.

### 3. சாத்தானின் முடிவு அக்கினிக்கடல்

ஆதி மனிதனாகிய ஆதாம் முதல் மனுக்குலத்தை கெடுத்து நாசப்படுத்தி வந்த சாத்தானுக்கு ஓர் முடிவு உண்டு. அவனுக்கு கொடுக்கப்பட்ட காலம் முடியும்போது அழிவு சடுதியாய் வரும். இன்று சாத்தான் உலகமெல்லாம் தீமைகளையும், தீவிரவாதங்களையும்,

சகலவித பாவங்களையும் தூண்டிவிட்டு மக்களை கெடுத்துக் கொண்டிருக்கிறான். ஆனால் அவனுடைய நாட்கள் முடியும் நாள் சீக்கிரம் வரும்.

நித்திய நித்தியமாய் வேதனையை அனுபவிக்கும் அக்கினிக் கடலிலே தள்ளப்படுவான். அரசியல் தலைவன் அந்தி கிறிஸ்துவும், கள்ள மார்க்கத் தலைவனான கள்ளத்தீர்க்கதரிசியும் தள்ளப்பட்ட அக்கினிக் கடலே சாத்தானின் கடைசி இடம். இதோடு அவனுடைய சரித்திரம் முடிகிறது.

## 9] வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு

*பின்பு, நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன். அவருடைய சமூகத்திலிருந்து பூமியும், வானமும் அகன்று போயின. அவைகளுக்கு இடங்காணப்படவில்லை.*

*மரித்தோராகிய சிறியோரையும், பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்.*

*சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப் படைந்தார்கள். அப்பொழுது மரணமும், பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்*

*ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாத வனெவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான். (வெளிப்படுத்தல் 20:11–15).*

இயேசு கிறிஸ்துவின் ஆயிர வருட ஆட்சிக்குப் பின் நடைபெறும் கடைசி நியாயத்தீர்ப்பு இது. இதை வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு என்று அழைக்கிறார்கள்.

பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதல் மூன்று கட்டங்களில் நடைபெறுவதைக் காண்கிறோம்.

1) இயேசு கிறிஸ்து தமது இரகசிய வருகையில் மத்திய ஆகாயத் திற்கு வரும் போது கிறிஸ்துவுக்குள் மரித்த பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுந்திருப்பார்கள். அந்த நாளில் உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களும் மறுரூபமாக்கப்பட்டு மத்திய ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் (1கொரிந்தியர் 15:51,52, 1தெசலோனிக்கேயர் 4:15–17).

2) உபத்திரவ காலத்திலே (7 வருடம்) மரித்த பரிசுத்தவான்கள் உயிரோடு எழுப்பப்பட்டு 1000 வருட அரசாட்சியிலே பங்கடைவார்கள் (வெளிப்படுத்தல் 20:4,5).

## 10. புதிய வானம், பூதிய பூமி

***பின்பு, நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும், முந்தின பூமியும் ஒழிந்து போயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று (வெளிப்படுத்தல் 21:1).***

நாம் கண்களால் காணக்கூடியது முதல் வானம். நட்சத்திரங்களும், சூரியனும், கோளங்களும் இருப்பது இரண்டாம் வானம். தேவன் வாசம் பண்ணுவது மூன்றாம் வானம். நாம் இன்று காணும் முதலாம் வானமும், நட்சத்திரங்களுள்ள இரண்டாம் வானமும் முற்றிலும் மாற்றப்படும். நாம் வாழும் இந்தப் பூமி முழுமையாய் மாறிப்போம்.

**சமுத்திரம் இருக்காது**

இப்போதுள்ள பூமி மூன்றில் இரு பங்கு சமுத்திரத்தால் நிரப்பப்பட்டுள்ளது. இப்போதுள்ள மனித வாழ்க்கைக்கு இந்த சமுத்திரம் அவசியம். ஆனால் மறுரூபமாக்கப்பட்ட தேவ மக்களுக்கு இந்த சமுத்திரம் தேவைப்படாது. சமுத்திரம் இல்லாததினால் பூமி மிகப் பிரமாண்டமான பரப்புள்ளதாய் இருக்கும்.

புதிய எருசலேம் என்ற சிறந்த நகரம் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டு, பரலோகத்தைவிட்டு இந்த பூமிக்கு வரும் (வெளிப்படுத்தல் 21:19). இந்த நகரத்தின் அளவு ஆச்சரியமானது, இந்த நகரம் சதுரமானது (வெளிப்படுத்தல் 21:16). 12000 ஸ்தாதி நீளமும் அகலமும் உயரமும்

உள்ளதாயிருக்கும். 1 ஸ்தாதி என்பது ஒரு பர்லாங். அப்படியானால் 12000 ஸ்தாதி என்பது 2240 கிலோ மீட்டர் (1400 மைல்).

எல்லா நகரமும் நீளம் அகலத்தில் தான் அளக்கப்படும். ஆனால் தேவன் வாசம் பண்ணும் இந்த புதிய எருசலேமுக்கு 2240 கிலோ மீட்டர் உயரமுண்டு என்பது பிரமிக்க வைக்கிறது. புதிய எருசலேம் பட்டணத்தின் மதில் 144 முழம் (வெளிப்படுத்தல் 21:17). அதாவது 200 அடி. அஸ்திபாரங்கள் சகலவித உயரிய இரத்தினக் கற்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மதில் வச்சிரக்கல்லால் கட்டப்பட்டுள்ளது. இந்த நகரத்திற்கு 12 வாசல்கள் இருந்தன. 12 வாசல்களும் 12 முத்துக் களாயிருந்தன. ஒவ்வொரு வாசல் அருகே ஒரு தூதன் இருந்தான். முழு நகரமும் மிகுந்த பிரகாசமாயிருந்தது (21:11).

வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவு மிகவும் அழகாக இருக்கும் என்பது தெளிவு.

**புதிய எருசலேமில் தேவாலயமில்லை (21:22)**

தேவனே நேரடியாய் பிரசன்னமாகி இருப்பதால் அவர் வாசம் பண்ண இன்னொரு ஆலயம் அவசியமில்லை.

**சூரியன், சந்திரன் இல்லை (21:23; 22:5)**

அதில் தேவன் வாசம் பண்ணினபடியால் அவருடைய மகிமையில் வெளிச்சமே முழு நகரத்திற்கும் வெளிச்சம் கொடுத்தது.

**இரவு இல்லை (21:25)**

புதிய எருசலேம் தேவன் வாசம் பண்ணுவதால் அந்த வெளிச்சம் எப்போதும் பிரகாசித்துக் கொண்டிருக்கும். எனவே வெளிச்சமற்ற இரவு என்ற ஒன்றே இருக்காது. மறுரூபமடைந்த பரிசுத்தவான்களின் பட்டணமாயிருப்பதால், அவர்களுக்கு தூங்க வேண்டிய அவசியமிருக்காது.

**12 விதமான கனிதரும் ஜீவவிருட்சங்கள்**

12 மாதமும் விதவிதமான கனிகளைக் கொடுக்கும் ஜீவ விருட்சங்கள் இருக்கும். அதற்கு தண்ணீர் பாய்ச்ச தேவ சமூகத்திலிருந்து ஓர் நதி புறப்பட்டு வரும்.

**எந்த சாபமுமிருக்காது (22:3)**

சாத்தான் அழிக்கப்பட்டுப் போனபடியால் சாபமிருக்காது. எங்கும் தேவ ஆசீர்வாதம் நிறைந்திருக்கும்.

நம்முடைய கற்பனைகளுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் மேலான நிலையில் தேவன் வாசம் பண்ணும் புதிய எருசலேம் இருக்கும். தேவன் தமது பிள்ளைகளுக்கு கொடுக்கப் போகின்ற நித்திய ஆசீர்வாதங்கள் மனித அறிவுக்கு அப்பாற்பட்டதாயிருக்கும்.

இந்த ஆசீர்வாதத்தில் பங்கடைய நீங்கள் ஆயத்தமா? இன்று மரித்தாலும் இந்த பரலோகம் செல்வேன் என்று நிச்சயமாக சொல்லக்கூடிய நிலையில் வாழ்கின்றீர்களா?

ஆயிர வருட ஆட்சிக் காலத்தில் இயேசுவை ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட்டு மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்பட்டு வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு தேவனுக்கு முன் நின்று பலனடைவார்கள் (வெளிப்படுத்தல் 20:12,15).

வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு என்பது ஆதாம் கால முதல் மரித்த சகல பாவிகளும் நியாயத்தீர்ப்படைகின்ற நாள் என்பதை மனதில் கொள்ள வேண்டும். மரித்தோராகிய சிறியோரும், பெரியோரும் (வெளிப்படுத்தல் 20:12) என்பது சாதாரண மக்களும் பெரிய அரசர்களும், தலைவர்களும், அதிகாரிகளும் என்று பொருள்.

**ஜீவ புஸ்தகம் திறக்கப்பட்டது**

இயேசு கிறிஸ்துவை ஆண்டவராக, இரட்சகராக ஏற்றுக்கொண்டு பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்று பரிசுத்தமாய் வாழ்ந்தவர்களின் பெயர்கள் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்படும். இங்கே இந்த புத்தகம் திறக்கப்பட்டதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

1. ஆயிர வருட ஆட்சிக்காலத்தில் இயேசுவை ஏற்றுக்கொண்டு மரித்தவர்களின் பெயர்கள் அதில் இடம் பெற்றுள்ளது.
2. மற்ற பாவிகள் யாவரும் ஜீவ புஸ்தகத்தில் பெயர் எழுதப்படாததால் நித்திய ஆக்கினை அடைகிறார்கள் என்பதை காண்பிக்க திறக்கப்படும்.

**புஸ்தகங்கள் திறக்கப்பட்டன**

ஆதாம் கால முதல் மரித்த பாவிகள் யாவருடைய பெயர்களும் இந்த புஸ்தகங்களில் இருக்கும். அவர்கள் பெயர்கள் மட்டுமல்ல அவர்கள் தேவனுக்கு விரோதமாக என்னென்ன பாவங்கள் செய்தார்கள் என்பதும் எழுதப்பட்டிருக்கும்.

2000 ஆண்டுகளுக்கு முன்பாக எழுதப்பட்டது இந்த வெளிப்படுத்தின விசேஷம். யோவான் அப்போஸ்தலனுக்கு அவை புஸ்தகங்களாக வெளிப்படுத்தப்பட்டன. ஆனால் இன்று நாம் மனதில் கொள்ளுகின்ற சாதாரண பேப்பர் புஸ்தகங்களாக இருக்கும் என்று சொல்வதற்கில்லை. கோடானுகோடி பாவிகளின் மொத்த ரெக்கார்ட் அங்கே இருக்கும். ஒரு வினாடியில் பாவிகள் அனைவருக்கும் அவர்களுடைய பாவங்கள் ஞாபகப்படுத்தப்படும். ஏன் நித்திய ஆக்கினை அடைகிறார்கள் என்று தெளிவுபடுத்தப்படும். அவரவர்கள் செய்த பாவங்களுக்கேற்ற தண்டனை கொடுக்கப்படும். பாவிகள் அனைவரும் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டார்கள் (வெளிப்படுத்தல் 20:15).

இந்த உலகத்திலே வாழும்போது கடவுள் இல்லை, மோட்சம் இல்லை, நரகம் இல்லை, பாவம் என்ற ஒன்று இல்லை என்று பேசலாம், எழுதலாம். ஆனால் ஒருநாள் இவையெல்லாம் உண்டு என்று கண்டுகொள்வார்கள். அன்று அவர்கள் தப்பிக்க வழியில்லை.

மிருகங்களையும், பறவைகளையும் விட தேவன் மனிதனை தம்முடைய சாயலிலே படைத்து தன்னைத் தேடும் பகுத்தறிவை கொடுத்தார். மனிதன் தேவனைவிட்டு விலகி, தன் இஷ்டப்படி நடக்கும்போது அவனுக்கும், மிருகத்திற்கும் வித்தியாசமில்லாமல் போகிறது.

எத்தனை அறிவுடையவனாக, திறமையுடையவனாக அறிவாளியாக, இருந்த போதும் தேவனை அறியாவிட்டால் அவன் அறிவும், திறமையும் பணம் சம்பாதிக்கவும் புகழடையவுமே பயன்படும். அவன் சாகும்போது பணமோ, புகழோ, பட்டமோ, பதவியோ உதவி செய்யாது.

தேசத்தையே ஆளும் அரசனாயிருந்தும் என்ன பயன்? தேவனை அறிந்து அவர் வழிகளில் நடக்கிறவன் மட்டுமே இந்த உலக வாழ்விலும் நிம்மதியாக வாழ்கிறான். இந்த உலக வாழ்வை விட்டு மரிக்கும்போது நித்திய சந்தோஷமுள்ள பரலோகம் சென்று நித்திய நித்தியமாய் வாழ்கிறான்.

## இந்த புத்தகத்தைப் பற்றி...

நாம் வாழும் இந்தக் காலம் ஓர் கடைசிக்காலம். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகை மிகச் சமீபம். அவருடைய வருகைக்கு முன் நடைபெறும் என்று தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்டுள்ளவைகள் வேகமாய் நிறைவேறி வருகின்றன என்பதை இந்தப் புத்தகத்தில் தெளிவாய் காணலாம்.

3 முக்கியப் பிரிவுகளை இப்புத்தகத்தில் காணலாம்.

1. இதுவரை நிறைவேறிவிட்ட தீர்க்கதரிசனங்கள்
2. இப்போது நிறைவேறிக் கொண்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள்
3. இனி சீக்கிரமாய் நிறைவேற வேண்டிய நிகழ்வுகள்

பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதை இதை வாசிக்கின்ற ஒவ்வொருவரும் தெளிவாய் விளங்கிக் கொள்ள முடியும்.

## ஆசிரியரைப் பற்றி...



Rev. P.S. ராஜமணி

போதகர் P.S. ராஜமணி அவர்கள் இறையியல் கல்லூரியில் பேராசிரியராக திறம்பட பணியாற்றியவர். சபை ஊழிய அனுபவம் நிறைந்தவர். பல நாடுகளில் தீர்க்கதரிசன கிருபையுடன் வல்லமையாய் தேவன் பயன்படுத்தும் நற்செய்தியாளர். அப்போஸ்தல ஊழிய தரிசன விரைவு உடையவர். மகிழ்வோடும் அழுத்தத்தோடும் திருமறைச் செய்தியை பகிர்ந்தளிக்கும் நடைமுறை போதனையாளர். சிறந்த எழுத்தாளர். எழுச்சிமிகு சிந்தனையாளர், எக்ளிசியா பத்திரிகை ஆசிரியராகவும் இருக்கிறார்.

ஆண்டவருக்காக அருட்பணியில் சாதிக்க வேண்டும் என்ற வாஞ்சை உடையவர். அகில இந்திய தேவ சங்க துணைத் தலைவராகவும், தென்னிந்திய தேவ சங்க பொதுத் தலைவராகவும், தமிழ்நாடு தேவ சங்க சபையின் தலைவராகவும் பல்லாண்டுகள் பணியாற்றியவர்.

